# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
12, பிருந்தாவனம் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3 / வெளிநாடு ரூ. 5

| மாலை 5 | ஞாயிறு 13-4-41 விஷு வருஷம் சித்திரை மீ 1உ | முத்து 4 |
|---|---|---|


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 'மெயின் ஸ்பிரிங்' ஒடிந்த கடிகாரம் | கா. சி. வேங்கடரமணி | 194 |
| சந்தைக் கூட்டம் | "ரவிகன்" | 196 |
| பக்தனும் பரந்தாமனும் | வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி | 199 |
| கண்ணன் குழலோசை | ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ. | 204 |
| புது சங்கல்பம் | ந. சிதம்பர சுப்ரமண்யன் | 207 |
| மன நிழல் | ஏ. முகம்மது ரஷீத் | 209 |
| விஞ்ஞானமும் மக்கள் வாழ்க்கையும் | டி. பி. நவநீதகிருஷ்ணன் எம். ஏ. | 211 |
| தங்க மோதிரம் | ஆ. வே. ஜெயராமன் | 215 |
| மோகத்தின் வேகம் | எஸ். ஸோமாஸ்கந்தன் | 219 |
| சாப விமோசனம் | எச். வைத்யநாதன் | 225 |
| கவலை | பி. எல். ரங்கநாதன் எம். ஏ. | 229 |
| தமிழும் ஆங்கிலமும் | புரசு பாலகிருஷ்ணன் எம். பி. பி. எஸ். | 233 |
| நம்பினாலும் சரி— | "குகப்ரியை" | 236 |
| சிறுவர் பகுதி... | "பாஸ்கரன்" | 241 |
| உதாரணம் போதுமா? | "கௌரீ சங்கர்" | 244 |
| ஒரு கலைஞன் சித்திரம் | ஜெ. பார்த்தசாரதி எம். ஏ. | 248 |
| இருவர்-ஏமாந்தால் ஏச்சுமில்லை பேச்சுமில்லை | "குஷி" | 250 |
| புத்தக விமர்சனம் | ... | 253 |
| எதிர்பாராத நஷ்டம் | ... | 254 |



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# 'மெயின் ஸ்பிரிங்' ஒடிந்த கடிகாரம்

[கா. சி. வேங்கடரமணி]

தந்திமூலம் தயைசெய்து ராய்ட்டர் அனுப்பிய 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் தலையங்கத்தை நான் ஊக்கத்துடன் படித்துப் பார்த்தேன். 'டைம்ஸ்' பத்திரிகையின் வியப்பை நானும் அடைந்தேன்; சிந்தனையில் ஆழ்ந்தேன்.

இந்திய அரசியலில் முக்கியமாய் விளங்கிவரும் இரண்டு கக்ஷிகளும்—காங்கிரஸும், முஸ்லிம் லீகும்—தாங்கள் மத்திய சர்க்காரோடு ஒத்துழைக்க முடியாதென்று தீர்மானமாய் விலகி நிற்கிறார்கள். நின்றும் யுத்தத்திற்கு வேண்டிய ஆள் உதவியோ, பொருள் உதவியோ அளவுக்குமேல் எதிர்பாராத இயல்புடன் சர்க்காருக்குக் கிடைத்து வருகின்றன. லிடிபானியிலும், கெரேனிலும் பெற்ற வெற்றிக்கு இந்தியர்களின் வீரமும், ஊக்கமுமே முக்கிய காரணமாகும். இந்த முரண்பாட்டைத் தெளிவாக அழகிய சொல்லில் 'லண்டன் டைம்ஸ்' எடுத்துச் சொல்லிவிட்டு, இதை எப்படி விளக்குகிறதென்று தெரியவில்லை யென்று சொல்லிக்கொண்டே ஒரு பதிலைக் கூறி யிருக்கிறது. இந்தியத் தலைவர்கள் பழைமை அடைந்துவிட்டார்கள். தங்கள் நாட்டின் உண்மைத் தாதுவைப் பரிசீலனை செய்யத் தெரியவில்லை யென்று 'டைம்ஸ்' தலையங்கம் தீர்மானத்திற்கு வந்து ஒரு வேண்டுகோளுடன் முடிக்கிறது.

தலையங்கம் சுவையுடன் நேர்த்தியாக எழுதப்பட்டிருந்தாலும் 'டைம்ஸ்'பத்திரிகைக்குத்தான் இந்தியாவின் அந்தரங்க உயிர் நாடியின் போக்கைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் அடிமை நாட்டின் தாதுவை அறிந்து அதன் போக்கைச் சென்ற முப்பது வருஷ காலமாக பிரிட்டிஷ் மந்திரி சபை தெரிந்து கொள்ளவில்லை யென்பது என் கருத்து. அதுவும் இந்த மஹா யுத்தம் ஆரம்பித்த பிறகு அரசியலில் தீர்க்கதிருஷ்டி பிரிட்டிஷ் மந்திரி சபைக்குக் குறைந்து கொண்டே வருகிறது.

அரசியல் ஓட்டத்தை எப்பொழுதும் ஒரு கடிகாரத்தின் ஓட்டத்திற்கு ஒப்பிடலாம். கவனக் குறைவால் சாவியை அதிகமாய்க் கொடுத்து 'மெயின் ஸ்பிரிங்' (Main Spring) ஒடிந்துபோன கடிகாரத்திற்குத் தற்கால இந்திய அரசியல் நிலைமையை ஒப்பிடலாம். ஆனால் நீங்கள் கவனித்திருக்கலாம்—கடிகாரத்தின் மெயின் ஸ்பிரிங் முறிந்துபோன பிறகு கூடக் கொஞ்ச நேரம் கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கும். சில கடிகாரங்கள் இருபத்தினன்கு மணி, சில முப்பத்தாறு மணி, சில ஏழு நாட்கள் வரை ஓடும். அதுவரையில் உயிர் உண்டு—மணி காட்டும். அரசியல் கடிகாரத்திற்குச் சில சமயம் ஒரு வருஷம் மூன்று வருஷம், சில சமயம் முப்பது வருஷம் ஓடிக்கொண்டே இருக்கும். ஆனாலும் கடிகாரம் ஓட்டைதான். பிறகு திடீரென நின்றுவிடும். குலுக்கிப் பார்த்தால் கிலு கிலுப்பைச் சத்தம்தான் கேட்கும்.

மெயின் ஸ்பிரிங் சமீபத்தில் முறிந்த கடிகாரத்தின் நிலைமையில்தான் இந்தியா இப்பொழுது இருக்கிறதென்று நான் டைம்ஸ்பத்திரிகைக்குத் தைரியமாய்பதில் அளிப்பேன். கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கும்போதே தீர்க்க தரிசியாய் இருக்கும் கிருஹஸ்தன் அதை ரிப்பேர் செய்துவிடுவான். அதுவும் அரசியலில் இப்படி உடனே செய்யாவிட்டால் ஏராள நஷ்டம் வந்துவிடும். ஒன்றும் காலா காலத்தில் நடைபெறாது. குழப்பமும், கிளர்ச்சியும், கலகமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த வருஷமும் வட இந்திய யாத்திரை இரண்டு மாதம் சென்றேன். ஆனால் இந்தத் தடவை தீர்த்த யாத்திரையல்ல—அரசியலில்அந்தரங்கவிஷயமறிய.போகும் வழி காட்டும் புண்ணியநதி கங்கையை யண்டிப் போகவில்லை; இருக்கும் வழிகாட்

டும் அரசியல் நதி யமுனையை ஒட்டிப் போனேன். யமுனா நதி தீரத்தில்தானே இந்திய அரசியல் சரித்திரம் பிறந்து வளர்ந்தது—வளர்ந்து கொண்டிருக்கிறது?

புது டில்லியில் ஒரு வாரம் இருந்தேன். மிக்க ஏமாற்றத்தை அடைந்தேன். இப்பொழுது நிர்வாகம் செய்யும் சட்ட சபைகள் இரண்டையும் போய்ப் பார்த்தேன். சாந்த காலத்தில் ரயில் வண்டிகள் அட்டவணைப் பிரகாரம் ஓடுவதுபோல் அறைக்கு அறை பட்டமும் கொடியும் கட்டின பைல் ஓடிக்கொண்டிருந்தன. யுத்த நிகழ்ச்சியில் மத்திய சர்க்கார் சுறு சுறுப்பாய் நடத்தும் ஜனநாயக அரசாங்கமாய்த்தோன்றவில்லை. மெத்தையிட்ட பெஞ்சுகள் காலி. ஒரே தூக்கமும், கொட்டாவியுமாய் இருந்தது. அவைகள் கூட 'ஏர் - கண்டிஷண்டாக' (Air Conditioned) இருந்தது. என் உள்ளம் பட படத்தது; மனம் சலித்தது.

மத்திய சர்க்காருக்கு ஓர் அற்ப ஆசிரியரின் வணக்கமாய்ச் செய்துகொண்ட ஒரு வேண்டுகோள். உங்கள் கையில் நாற்பதுகோடி மக்களின் மேன்மையும் வாழ்வும் அகப்பட்டு நிற்கிறது. அவர்களின் முன்னேற்றத்திற்கும், ஒற்றுமை வாழ்வுக்கும் இந்தச்சமயம் விட்டால் மறுசமயம் இப்படி வாய்க்காது. நெருக்கடியைத் தீர்த்து உண்மையான ஜன நாயக வெற்றியை எங்கும் இப்பொழுதே பரவச் செய்யவேண்டியது பிரிட்டிஷ் மந்திரி சபையின் முதற்கடமை. சொல்லால் போதாது. செயலால் செய்ய வேண்டும். கால தாமதமானுல் காரியம் கெடும். இதற்கும் எதிர்பாராத ஓர் உதவி இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஏமாற்றம் மேலிட்டு வந்த சமயத்தில் ஒரு சுப நிகழ்ச்சி — கனம் சப்ரு தலைமை வகிக்க பம்பாயில் நடந்த தலைவர் கூட்டம். இதை வியாஜமாக வைத்துக் கொண்டு காங்கிரஸையும், முஸ்லீம் லீகையும் அனுசரித்து ஓர் சமாதானத்திற்கு உடனே வரவேண்டிய கடமை மத்திய சர்க்காரைப் பொறுத்தது. இது சர்க்கார் செய்யவேண்டிய கடமையே யொழிய ஜனங்களால் செய்து முடிக்கக்கூடிய வேலை யல்ல. ரயிலில் ஏறிச் செல்லும் பிரயாணிகள் எவ்வளவு ஒன்று சேர்ந்தாலும் எஞ்ஜினை ஓட்ட முடியுமா? நாற்பது கோடி ஜனங்களடங்கிய இந்தியாவன்றி உலகில் சாந்தம் எப்படி உலவும்?

டில்லி மத்திய சர்க்காரின் தற்கால நிலைமை மிக்க பரிதாபகாரமானது. அடிமை இந்தியாவின் அளவில்லாத லாபத்தின் ருசியைக் கண்டு மோகித்து நிற்கிறது. புளியை மென்று ருசியற்று நிற்கும் நாக்கில் தேன் சொட்டைவிட்டால் பாவம் அந்த நாக்கு என்ன செய்யும்! செவிடன் கண் முன் வீணை வாசித்தால், 'ஏன், உன் தங்கமான விரல்களை தந்திக் கம்பியில் அறுத்துக்கொள்ளுகிறாய்?' என்று கேட்பான். இருந்தாலும் அரசியலில் உண்மையான செவிடு கிடையாது. பொய்த் தூக்கம்போல் இஷ்டப்பட்டபோது அவசியம் ஏற்பட்டால் அரசியல் செவிடு ஓடிவிடும்.

நான் வாக்குத் தத்தம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். நூறு பங்கு அதிக லாபம் சுயராஜ்யம் பெற்ற இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் மந்திரி சபைக்குக் கிடைக்கும். உலகத்திற்கும் க்ஷேமம் ஏற்படும். சுதந்திரம் பெற்ற இந்தியா, நீரை யுண்டு பாலைக் கொடுக்கும் காமதேனுவை ஒப்பதாகும். இதை டில்லி சர்க்காரும்,பிரிட்டிஷ் மந்திரி சபையும் உண்மையில் அறிந்துகொண்ட நிமிஷமே அவர்களுக்கும் வெற்றி. இந்தியாவுக்கும் வெற்றி. ஜன நாயகத்திற்கும் வெற்றி. உலகத்திற்கும் க்ஷேமம் பிறக்கும்.

# சந்தைக் கூட்டம்

"ரஸிகன்"

என் திண்ணைப் பள்ளிக்கூட நினைவுகளைக் கொஞ்ச காலத்திற்கு முன் நேயர்கள் படித்திருக்கலாம்.

கொஞ்ச காலத்திற்கெல்லாம் நான் நகரவாசியானேன். அது பெரிய ஊர். ஏழுவயதுப் பையனுக்கு அதைவிடப் பெரிய ஊர் பூமண்டலத்திலிருக்குமென்பது முற்றிலும் நம்பத்தகாதது. அதிலும் பெரிய தெருவில் குடித்தனம் இருந்தோம். அந்தவூரில் அநேக பள்ளிக்கூடங்கள் உண்டு. அவைகளில் இரண்டு முக்கியமானவை. இவைகளுக்குள் விடாப்போட்டி. ஒன்று ஏற்பட்டு 30 வருஷமும் மற்றொன்று தொடங்கி 25 வருஷமும் ஆயிற்று. முன் சொன்னதில் ஆயிரம் மாணாக்கர் ஒருங்கே படித்தாரென்றும், வருஷாவருஷம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் ராஜதானியில் மொத்தம் முதல் வகுப்பில் தேறினவர்களில் முக்கால்வாசிக்குமேல் அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள் என்றும் அதற்குக் கியாதி யிருந்தது. மற்றொன்றிலோ, பையன்கள் குறைவானாலும் 'பொறுக்கி யெடுத்த பயல்கள்' என்று ஹெட்மாஸ்டர் சொல்லுவது வழக்கம். மெட்ரிகுலேஷன் முதல் வகுப்பில் தேறினவர்கள் அவ்வளவு இல்லாமற் போனாலும், "அதனாலென்ன? பரீக்ஷையில் பாஸ் பண்ணுவது பெரிதல்ல. உலக வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும்; அதற்கல்லவோ நான் இராப்பகலாய்ப் பாடுபடுவது. இன்னும் 25 வருஷங்களில் பாருங்களேன், நமது பையன்கள் எவ்வளவு பேர் மேலான அந்தஸ்தி லிருக்கப்போகிறார்களென்று" என்று அவர் சொல்லிக்கொள்வது வழக்கம், இந்தப் பந்தயத்தில் கை நஷ்டமில்லையே.

இந்தப் 'பொறுக்கி யெடுத்த பயல்களில்' என்னையும் ஒருவனாகச் செய்ய என் மாமா தீர்மானித்தார். இவரோ போட்டிப் பள்ளிக்கூடத்தில் படித்தவர். அதையே ஒரு செப்புப் பட்டயமாகவும் கருதினவர். அப்படியிருக்க என்னை மற்றப் பள்ளிக்கூடத்திற்கனுப்பின காரணம் என்ன? எனக்குத் தன் பள்ளிக்கூடத்தையணுக யோக்கியதை யில்லையென்றெண்ணினாரா? அல்லது, இளங் கண்கள் பாலசூரியனைப் பார்த்துப் பழகவேண்டும், எடுத்ததும் சண்டபானுவின் கிரணங்களின் ஒளியில் விழித்தால் கெட்டுப்போம் என்று நினைத்தாரா?

இன்னொரு காரணமும் தோன்றுகிறது. நாங்கள் குடி யிருந்ததற்கடுத்த வீட்டில் இரண்டாவது பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ஒருவர் வசித்து வந்தார். ஒழிந்த வேளையில் அவரோடு தான் என் மாமா பேசிப் பொழுது போக்குவது வழக்கம். அவர் ஏகாக்ஷர். பெருத்த ஸம்ஸாரி. எப்பொழுதும் 4, 5 பையன்களுக்குக் காலையில் தெருத்திண்ணையில் 'ப்ரைவேட் ட்யூஷன்' சொல்லிக் கொடுப்பார். அடுத்த திண்ணையில் பயமில்லாமல் உட்கார்ந்துகொண்டு, அந்தப் பயல்கள் வாங்கும் அடிகளையும், குட்டுகளையும் கணக்குப் பண்ணுவதே எனக்கு முக்கிய விளையாட்டு. ஆனால் வீட்டு வாசல் புகுந்ததும் சாந்தஸ்வரூபியாய் மாறிவிடுவார். அவர் ஸம்ஸாரம் போடும் சத்த அதிர்ச்சியால் எங்கள் வீட்டுச் சமயல் கட்டிலுள்ள ஓட்டடை தானாகவே உதிரும். அவர் பதில் சொல்லுகிறார் என்பதை அந்த அம்மை மேல் மேலும் வெறி பிடித்தவள்போல் ஆரவாரிப்பதிலிருந்தே ஊகிக்கவேண்டும். இவர் தன் நண்பருக்கு ஒரு ஒத்தாசையும் தன் பள்ளிக்கூடத்திற்கு ஒரு கைங்கரியமும் பண்ணுவதாய் எண்ணி என்னை அதிலேயே சேர்ப்பதற்குத் தான் ஏற்பாடுபண்ணுவதாய் ஒப்புக்கொண்டார் போலும்.

எனவே, ஒருநாள் காலையில் நான் சேர்த்து வைத்திருந்த புஸ்தகங்களையும்

நோட்டுப் புஸ்தகங்களையும் ஒரு மூட்டையாய்க் கட்டி எடுத்துக்கொண்டு, புதிதாய் அதற்கென்று வாங்கின பட்டுக் குஞ்சலம் கட்டின 'பாப்பாஸை'க் காலில் போட்டுக்கொண்டு என் மாமாவைப் பின் தொடர்ந்தேன். இந்தப் 'பாப்பாஸ்' இப்பொழுது அநேகமாய் மறைந்துவிட்டது. அந்தக் காலத்தில் நாகரிகத்துக்கும் அந்தஸ்துக்கும் அதுதான் முக்கிய அறிகுறி. ஆனால் அதை என் மாமா வாங்கி வந்தது முதல் எனக்கு அதில் வெறுப்பு. அதைக் காலிலிட்டுப் பத்தடி நடக்குமுன் அது கடிக்க ஆரம்பித்தது. அடிக்கடி தயங்கி அதைக் கழற்றி மாட்டிக்கொள்வதால் நேரமாவதைக் கண்டு மாமா ஒரு பக்கம் கோபிக்கிறார். இருபுறத்திலும் தெருத்திண்ணைகளில் உட்கார்ந்திருப்பவரெல்லாரும் என்னையும் என் பாப்பாஸையும் பார்த்தே நகைக்கிறார்களென்றெண்ணி என் மனத்தில் வெட்கம் ஒரு புறமும், துக்கம் ஒரு புறமும் உண்டாக, இப்படி ஒரு நாழி ஒரு யுகமாக, வியர்க்க விருவிருக்கப் பள்ளிக்கூடத்தையடைந்தோம்.

கடைவீதி நடுவில் அது ஒரு பெரிய மாடிக் கட்டிடம். அதன் வெள்ளைப் பூச்சு ரஸ்தாக் கப்பி படிந்தும், மழை வெப்பங்களால் தாக்கப்பட்டும் செம்புள்ளி கரும்புள்ளி குத்தினாற்போல் காணப்பட்டது. சந்து திரும்பினவுடனேயே சந்தையிரைச்சல் அதற்குள்ளிருந்துவந்து காதைத் தாக்கிற்று. தெருவில் இருப்பதைவிட உள்ளே புழுதி அதிகமாகக் காணப்பட்டது. வகுப்புகள் தனித்தனி அறைகளில் இல்லாமல் ஒரு பெரிய கூடத்தில் 5, 6 வகுப்புகள் நாய் மந்தை போல ஒருங்கே கோஷித்துக்கொண்டும் ஒன்றுக்கொன்று முதுகைக் காட்டிக்கொண்டும் இருந்தன. இவைகளில் ஒரு வகுப்பு உபாத்தியாயர் எங்கள் அடுத்த வீட்டுக்காரர். அவரைத் தேடிக்கொண்டு நாங்கள் அங்கே நுழைந்ததும் சுமார் 200 பையன்களும் சிலேட்டு, புஸ்தகங்களைக் கீழே வைத்துவிட்டுக் காணாததைக் கண்டவர்போல் எங்களைக் கண்கொட்டாமற் பார்த்தார்கள். 'ஹி, ஹி' என்ற பரிஹாசச்சிரிப்பு புதைவாணம் விட்டாற்போல் நாலாபுறத்திலிருந்தும் கிளம்பிற்று. சிலர் என் பாப்பாஸையும், மற்றும் சிலர் என் தலையையும் நெற்றியையும் பாதிக் கண்ணையும் மூடும் என் மாமாவின் புராதன 'ஹாஸன்' குல்லாவையும், மற்றும் சிலர் என் முழங்கால் வரையில் தொங்கும் 'லாங்கிளாத்து' ஷர்ட்டையும் சுட்டிக்காட்டிக் கெக்கலிக் கொட்டினார்கள். உபாத்தியாயர்களோ இதை ஒன்றும் கவனித்ததாகத் தெரியவில்லை. தியானத்தில் ஆழ்ந்தவர்போல் காணப்பட்டார்கள்.

இவ்வளவு வைபவத்தோடு அடுத்த வீட்டுக்காரர் அருகில் சென்றோம். அவர் என் மாமாவை உட்காரச் சொல்லி என்னை அழைத்துப்போய் இரண்டாம் வகுப்பு உபாத்தியாயரிடம் ஒப்புவித்துப் பரீக்ஷை பண்ணி சேர்த்துக்கொள்ளச் சொன்னார். அதற்குப் பிறகு 20 வருஷப் படிப்பில் வெகு பரீக்ஷைகள் பார்த்திருக்கிறேன். அவை யொன்றிலும் அவ்வளவு கலங்கினதில்லை.

உபாத்தியாயர் சிறு பிள்ளை. அன்பான தோற்ற முள்ளவர். "வாடா, பையா, உட்காரு. நீ கெட்டிக்காரனென்று பார்த்தாலே தோணுகிறது. உனக்கு என்ன தெரியும்? சொல்லு பார்ப்போம்", என்று அன்பாய்க் கேட்க நான் கற்றிருந்ததை ஒருவாறு தெரிவித்தேன். முதலில் மனக் கணக்குப் போட்டார். தப்பில்லாமல் எல்லாவற்றிற்கும் விடை கொடுத்தேன். பிறகு நான்காம் பாடப் புத்தகத்தில் கோலம்பஸின் சுற்றுப் பிரயாணத்தை வர்ணித்த பாடத்தைப் படிக்கச் சொன்னார். அதை நான் அடிக்கடி வீட்டில் படித்து, நானே கோலம்பஸாகவும், அமெரிக்காவில் ராஜ்யம் ஸ்தாபித்து சக்கரவர்த்தியானதாகவும், தினந்தோறும் கோடி ரூபாய் பெறுமானமுள்ள நல்ல முத்துக்கள் சிற்றரசர்களால் கப்பமாய்ப் பெற்று வந்ததாகவும் வெகுநாள் மனோராஜ்யம் செய்திருந்தபடியால், அந்தப் பாடத்தை போட்மெயில் வேகமாய் வாசித்தேன். இதுகண்ட உபாத்தியாயர் வகுப்பில் சேர்த்துக்கொண்டதுமல்லாமல் தனது இடது கைப்புறத்தில் முதல் ஸ்தா

னத்தில் என்னை உட்காரச் சொல்லிவிட்டார்.

இதைக் கண்ட பையன்கள் (சிலர் எனக்கு 2, 3 வயது பெரியவர்கள்) எனக்கு மரியாதை பண்ண ஆரம்பித்தார்கள். எனக்கு அடுத்தாற்போல் இருந்தவன் என்னோடு ஒருநாளும் மாருத சினேகமாய் இருப்பதாயும், அதற்கத்தாக்ஷியாய் 'ஒண்ணுக்குப்' போகும் இடம் தானே காட்டுவதாகவும் மெதுவாகத் தெரிவித்தான். அவனுக்கடுத்தவன் தான் வீட்டிலிருந்து இட்டலி சிற்றுண்டி கொண்டுவந்திருப்பதாயும், அதை நான் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்றும் சிலேட்டில் எழுதி உபாத்தியாயருக்குத் தெரியாமல் என்னிடம் காட்டினன். எனக்கு நேரெதிரே வகுப்பில் கடை ஸ்தானத்தை உரிமையாய்ப் பெற்ற விளக்குப் பார்த்த கண்ணுடைய பையன் ஒரு கண்ணுடி கோலியும் ஒரு 'பால்' கோலியும் சட்டைப்பையிலிருந்து எடுத்து உபாத்தியாயர் முதுகின் பின் மெதுவாய்க் கையைநீட்டி என்னிடம் வைத்ததிலிருந்து, அவன் கண் வேறிடத்தில் நோக்கினபோதிலும், என் தயவை எதிர்பார்த்தான் என்று தோன்றிற்று. இதையெல்லாம் கண்ட எனக்கு வெறுப்பு, வெட்கம், சிரமம் எல்லாம் நீங்கி உற்சாகம் ஜனித்தது. வகுப்பு எனக்குச் சொந்தமென்றே எண்ண ஆரம்பித்தேன். மத்தியான விடுமுறை மணியடித்தது. 5 பையன்கள் எங்கள் தெருவுக்கு என்னுடன் வந்தார்கள். புஸ்தக மூட்டையை ஒருவனும், பாப்பாஸை ஒருவனும் தூக்கி வந்தான். இதைத் திண்ணையிலிருந்து பார்த்த என் பாட்டி பாப்பாஸை ஏன் காலில் போட்டுக்கொள்ளவில்லை என்று கேட்டாள். கடித்த இடத்தில் கிளம்பின இரண்டு கொப்புளங்களைக் காட்டினேன். அத்தனை தூரம் குழந்தை வெயிலில் போக வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். இரண்டாம் பள்ளிக்கூட வாழ்வு இப்படி எதிர்பாராமல் முற்றிற்று.

---

# இந்தியாவின் பெருமை

"உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் சிரும் செல்வமும் பொலிந்து விளங்குதும், தெய்வ லோகத்தை யொத்த இயற்கை அழகு அமையப் பெற்றதுமான தேச மெதுவென்று அறிய விரும்புவோருக்கு இந்தியாவே அத்தகைய பெருமை வாய்ந் துள்ளதெனக் குறிப்பிடுவேன். இந்த அவனியில் தெய்வ சக்தி பொருந்திய மனோவாற்றலும் வன்மையுங் கொண்டவர்களா யுள்ள மானிடர் வாழும் தேசம் எதுவென்றால் இந்தியாவே என்பேன்.

"நாம் ஐரோப்பாவில் நமது அக வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி, நித்தியானந்த வாழ்க்கைக்குரிய வழி, உலக சம்மதமான வழிகளில் சுத்தமான நெறிகளைக் கொண்டு இனிது காலங் கழிக்க எண்ணி, அதற்குத் தக்க நூற்களை ஆராய்ந்தறிய விரும்புவோமானல் இந்தியாவில் வழங்கும் நூற்களையே குறிப்பிட்டுக் காட்டுவேன். நீங்கள் காவியம், மதம், வேதாந்தம், இதிகாசம், சட்டம், ஐதீகம், கலை, சாஸ்திரம் இவைகளில் எந்த விஷயத்தைப் பற்றி விசேஷமாகப் படிக்க விரும்பினுலும்-உங்களுக்கு மனமில்லாவிடினும்-இந்தியாவில் ஒவ்வொரு இடத்திற்கும் போய் அவர்கள் சரிதங்களிற் பொதிந்துள்ள அரிய விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். சிறந்த தனம்போன்ற அரியபொருள்களை வெளி யிடக்கூடியது இந்தியா ஒன்றே"

புரோபஸர் மாக்ஸ் முல்லர்

நாடகம் :—

# பக்தனும் பரந்தாமனும்

[வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி]

### காட்சி 1

இடம் :—தபோவனம்

அம்பரீஷ மகாராஜன் தவம் புரிகிறான்

பரந்தாமன் :—(மஹா விஷ்ணு) அம்பரீஷ! உன்னுடைய தவத்தைக் கண்டு மகிழ்ந்தேன். நீ விரும்புவ தென்ன?

அம்பரீஷன் :—பரந்தாமா, பக்தவத்ஸலா—அநந்தகோடி வந்தனம்! ஐயனே! உன்னுடைய பாதாரவிந்தத்திலேயே எனக்கு எப்போதும் பக்தி யிருக்கவேண்டும். நான் இந்தப் பூலோக முழுவதையும் ஆளும் சக்ரவர்த்தியாக வேண்டும். எனது பிரஜைகள் உனது பக்தர்களாகவே இருக்கவேண்டும். இவைகளே நான் விரும்பும் வரங்கள்.

பரந்தாமன் :—வேந்தே! அப்படியே எல்லாம் உண்டாகும். இதோ இந்தச் சக்ராயுதத்தையும் உனக்குத் தருகிறேன். இது முனிவர்களுடைய சாபத்தையும் நீக்கி உன்னைக் காப்பாற்றும். பெற்றுக் கொள். நீதி தவறாமல் அரசு செய். நீதியைத் தெய்வமாகக் கொள்.

அம்பரீஷன் :—அப்படியே.

கை குவித்து வணங்கித் துதிக்கிறான். பகவான் மறைகிறான்.

### காட்சி 2

இடம் :—அயோத்தியில் அம்பரீஷன் அரண்மனை.

அம்பரீஷன் :— ஸ்ரீமதி, பகவான் மேல் ஒரு பாட்டுப் பாடு கேட்போம்.

ஸ்ரீமதி :—நல்லது.

(விருத்தம்)

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்
கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே."

அம்பரீஷன் :—ஸ்ரீமதி, நிறுத்து—இதோ பார் முனிவர் இருவர் வருகின்றனர்.

நாரத முனிவரும் பர்வத முனிவரும் பிரவேசிக்கின்றனர்

அம்பரீஷன்:—வரவேணும் - நாரதமுனிவரே, நமஸ்காரம். பர்வத முனிவரே, நமஸ்காரம். இதோ ஆசனம்.

முனிவர் :—மங்களமுண்டாகக்கடவது! —நாராயண! நாராயண!

அம்பரீஷன் :—அம்மா ஸ்ரீமதி! முனிவர்க்கு நமஸ்காரம் செய். இவர்களுடைய ஆசீர்வாதம் உனக்குத் தக்க நாயகனைக் கூட்டி வைக்கும்.

ஸ்ரீமதி :—அடியேன் ஸ்ரீமதி—நமஸ்காரம் செய்கிறேன்.

முனிவர் :—ஸமஸ்த ஸந்மங்களாநி பவந்து!

அம்பரீஷன் :—இக் கன்னிகை என் புத்திரி! விவாக மாகவேண்டும். அநுக்ரஹம் செய்யுங்கள்! சமய சஞ்சீவிகளாக வந்தீர்கள்.

பர்வத முனிவர் :—நாரத முனிவர் மஹாத்மா! அவருடைய பரிபூர்ண ஆசீர்வாதம் வீணாகுமா?—மேலும் நீர் பரந்தாமனுடைய திருவடி மறவாத பக்தர். அரசே! அவருடைய ஆசீர்வாதத்தால் குழந்தைக்கு நல்ல நாயகன் வருவான்.

நாரதமுனிவர் :—பர்வத முனிவர், முனிவரில் பர்வதம்போல் மகிமை யுடையவர். வேந்தே! அவருடைய ஆசீர்வாதம் ஏற்பட்டது உன் பாக்யமாகும்.

பர்வத முனிவர் :—(பெரு நகைப்பு நகைத்து) ததாஸ்து.

அம்பரீஷன் :—விசேஷம்!

நாரதமுனிவர் :—நாங்கள் இப் பக்கமாய் வருகையில்—சற்று முன் யாரோ பாடியது எங்கள் செவியில் விழக் கேட்டு மனமுருகிப் பரவசமாய் இங்கே பிரவேசித்தோம். பாடியது யார் ஸ்ரீமதி தானே?

பர்வதமுனிவர் :—நல்ல சாரீரம்! நல்ல ஞானம்!

நாரதமுனிவர் :— ஆம்—குழந்தை தீர்க்காயுஸுடன்—பிறந்த அகத்துக்கும் புக்க அகத்துக்கும் லக்ஷ்மியாக விளங்கவேண்டும். போய் வருகிறோம்.

அம்பரீஷன் :—பாக்யம்—அடிக்கடி இப்படி அடியேனுக்குத் தரிசனந் தர வேண்டும்! (முனிவர்கள் போகின்றனர்.)

ஸ்ரீமதி :—(நகைத்து) பிதா—முனிவர்களா யிருந்தும் இவர்களுடைய பார்வையைக் கவனித்தீர்களா?—திருட்டுப் பார்வை.

அம்பரீஷன் :— கவனித்தாயா, நீ? நானும் கவனித்தேன்! (தனக்குள்) யாரை விட்டது மோகம்;—(வெளிப்படையாய்) கண்ணே! அதை மற — பெரியவர்களல்லவா!

பர்வத முனிவர் :—(பி ர வே சி த் து) வேந்தே இப்படி வாரும்!—(மெதுவாய்) நான் உம்முடைய பெண் ஸ்ரீமதியை விவாகம் செய்துகொள்ள விரும்புகிறேன். என்ன சொல்லுகிறீர்?

அம்பரீஷன் :—பாக்யம்! அதுபற்றிப் பிறகு தெரிவிக்கிறேன்.

பர்வத முனிவர் :—ஞாபக மிருக்கட்டும்—போய் வரட்டுமா? ..........போய் வரட்டுமா?—உம்?

அம்பரீஷன் :—ஆகா.

ஸ்ரீமதி :—பிதா! நான் சொன்னது சரியாய்விட்டதா?

அம்பரீஷன் :—ஸ்ரீமதி, கேள்—மண், பெண், பொன்—இவைகளிடம் ஆசை கொண்டவர்கள் இப்படித்தான் தடுமாற்றமடைவார்கள்.

ஸ்ரீமதி :—பிதா—அதோ நாரத முனிவர்—வேடிக்கைதான்!

அம்பரீஷன் :—ஸ்வாமி! விசேஷமென்ன?

நாரத முனிவர் :—இப்படி வாரும்—(மெதுவாய்) உம்முடைய பெண்ணை நான் விவாகம் செய்துகொள்ள விரும்புகிறேன். என்ன சொல்கிறீர்!

அம்பரீஷன் :—பாக்யம்! பர்வத முனிவரும் விரும்புகிறார்! நீரும் விரும்புகிறீர்.

நாரத முனிவர் :—ஓ அ ப் ப டி ய ா! அவருக்கு வாக்குக்கொடுத்து விட்டீரோ?-

அம்பரீஷன் :—இல்லை—அப்படி இலகுவில் முடிவு செய்கிற காரியமா இது? ஒன்று செய்கிறேன். சீக்கிரத்தில் சுயம்வரம் ஏற்படுத்துகிறேன். அப்போது என் புத்திரி உங்களிருவரில் யாரை வரிக்கிறாளோ அவர்களுக்கே கன்னிகாதானம் செய்வேன்.

நாரத முனிவர் :—ஓ! அதுதான் நல்ல ஆலோசனை. அப்படியே! அப்படியே! ஸ்ரீமதி என்னைத்தான் வரிப்பாள்! என் பெருமைகளை யெல்லாம் அவருக்குச் சொல்லும். நான் போய் வருகிறேன்—வரட்டுமா? என்ன—ஞாபக மிருக்கட்டும்—.

அம்பரீஷன் :—நல்லது! தயைசெய்து பர்வத முனிவரிடமும் இதைச் சொல்லிவிடும்—

பர்வத முனிவர் :—வேந்தே! இதோ நானிங்கேதான் மறைவி லிருந்து எல்லாம் கேட்டேன். சுயம்வரமே ஏற்படுத்தும்! போய் வருகிறேன்.

அம்பரீஷன் :—ஸ்ரீமதி!—இது என்ன இப்படி முடிந்தது முனிவர்களுடைய தரிசனம்!

ஸ்ரீமதி :—பிதா, இது பற்றியேன் சிந்தனை! பரந்தாமனுடைய பாதாரவிந்தம் மறவாத நம்மை அவர் கைவிடுவாரா?

அம்பரீஷன் :— ஸ்ரீமதி — ந ல் ல தே சொன்னாய்! அந்தத் தைர்யம் இருக்கவேண்டும் எப்போதும்.

### காட்சி 3

இடம் :—போகிற வழி

பர்வத முனிவர் :—நாரத முனிவரே விஷயம் விரஸமாய் முடிந்துவிட்டதே!—

நாரத முனிவர் :—ஓய்! யாரால்—நீர் ஏன் ஒட்டுக்கேட்டீர்?—சுவற்றுக் கோழியாய்ப் பிறப்பீர்—

பர்வத முனிவர் :—அது இருக்கட்டும். நீரேன் எனக்குப் போட்டியாய் முளைத் தீர்? நீர் பெட்டைக் கோழியாய்ப் பிறப்பீர்!

நாரத முனிவர் :—ஏன் காணும் பேச்சு! பெண்ணாசையால் எல்லாந்தான் நடக்கும் : அகல்யையை விரும்பிய இந்திரன் பூனை யாக உருக்கொண்டு திண்டாட வில்லையா ? கேளும். எது நடந்தாலும் நடக்கட்டும். நமது நேசத்துக்குப் பங்கம் வராம விருந் தாற் போதும்.

பர்வத முனிவர் :—ததாஸ்து! ததாஸ்து! போவோம்.

## காட்சி 4

இடம் :—வைகுண்டத்தில் மஹா விஷ்ணு வின் திருக்கோயில்.

பர்வத முனிவர் :—மாதவா சரணம்! சரணம்!

மஹா விஷ்ணு :—பர்வத முனியா ? விசேஷ மென்ன ?

பர்வத முனிவர் :—பிரபு,—சொல்ல வெட்கமா யிருக்கிறது ? தாங்களே தெரிந்துகொண்டு அநுக்ரஹம் செய்ய வேண்டும்.

மஹா விஷ்ணு :—(நகைத்து) ஓ அப் படியா ? தெரிந்துகொண்டேன். சுயம்வர மண்டபத்தில் நாரதனுடைய முகம் ஸ்ரீமதியின் கண்ணுக்குக் குரங்கின் முகம் போல் தெரியவேண்டு மென்றும் அப்படி யேற்பட்டால் அவள் உன்னை விரும்பி உனக்கு மாலை யிடுவா ளென்றும் ஆசைப் படுகிறாய்! அப்படியே நடக்கும்.

பர்வத முனிவர்:—நல்லது ஸந்தோஷம்! வருகிறேன்.

மஹா விஷ்ணு :—லக்ஷ்மி ! இவன் போனானா ? இதோ நாரதன் வரப்போகி றான். கவனி, பெண்ணாசையின் விநோ தத்தை !

லக்ஷ்மி :—புருஷர்களின் ஆசைமாத் திரம் பெண்களைச் சும்மா விடுகிறதாக் கும்—பேயாய் ஆட்டி வைக்கிறது. ஆட்டி வைப்பவன் ஆட்டி வைத்தால் யார்தான் ஆடமாட்டார்கள் ? என்னதான் நடக்காது? இதோ நாரதன் —

நாரத முனிவர் :—என் தாயே! அப்படிச் சொல்லு—பக்தன் நாரதனுடைய நமஸ் காரத்தை யேற்றுக்கொள்ள வேண்டும் இருவரும்—

மஹா விஷ்ணு :—நாரதா ! சேஷ்டை யில் பிரதிஷ்டை தேடிக்கொள்ளும் நீதான் பரம பக்தன் ! ஏது இவ்வளவு தூரம் ?

நாரத முனிவர் :—ப்ரபூ! சேஷ்டையில் ஆப்பைப் பிடுங்கிவிட்ட குரங்காய் அகப் பட்டுக் கொண்டேன். இச் சமயம் வழி காண்பிக்க வேண்டும்.

மஹா விஷ்ணு :—உணர்ந்தேன். சுயம் வர மண்டபத்தில் பர்வத முனிவரின் முகம் ஸ்ரீமதியின் கண்ணுக்குக் கோலாங் கூலம் என்கிற குரங்கின் முகம்போல் தெரியவேண்டு மென்றும் அப்பொழுது தான் அவள் உன்னை விரும்பி மாலை யிடுவா ளென்றும் ஆசைப்படுகிறாய்! இல்லையா ?

நாரதர் :—ஆம்—ஆம்—அப்படித்தான் !

மஹா விஷ்ணு:—அப்படியே நடக்கும்.

நாரதர் :—ஸந்தோஷம் ! போய் வருகி றேன். பக்த வத்ஸலன் என்ற பேருக்கு இந்த ஸந்திதானமே ஏற்றது.

## காட்சி 5

இடம் :—அயோத்தியில் சுயம்வர மண்ட பம்

அம்பரீஷன் :—பர்வத முனிவரே, வர வேணும் நமஸ்காரம்.

பர்வத முனிவர் :—நாரதமுனிவர் வந்து விட்டாரா ?

அம்பரீஷன் :—முன்பே வந்துவிட்டார் —அதோ பாரும் அங்கே அமர்ந்திருக் கிறார். அவருக்குப் பக்கத்திலேயே உமக் கும் ஆசனம்—தயை செய்யவேணும்.

மணிச் சத்தம்—வாத்ய முழக்கம்

அரசின் ஆரவாரம்

ஸ்ரீமதியைத் தாதிகள் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்

ஜய விஜயீ பவா! ஜய விஜயீ பவா!

மங்கையர் மங்களகீதம் பாடுகின்றனர்

அம்பரீஷன் :—அம்மணி ஸ்ரீமதி! இதோ மாலை—இந்த மாலையை—இந்தச் சபையில் நீ விரும்பும் புருஷ ச்ரேஷ்டரின் கழுத்திலே சூட்டவேண்டும். தெரிந்ததா?—முதலில்—இந்த இரண்டு முனிவரையும் கவனி. அப்பால் அரசர்களைக் கவனிக்கலாம்.

ஸ்ரீமதி:—என் அருமைத் தந்தையே, இந்த இரண்டு முனிவரும் குரங்கின் முகமுடையவர்களா யிருக்கிறார்களே! என்ன செய்வேன் நான்!

அம்பரீஷன் :—எனக்கு அப்படித் தெரியவில்லையே—கவனி! இது என்ன விந்தை!

ஸ்ரீமதி :—ஆப்—இவர்களுடைய முகம் குரங்கின் முகமாகத்தா னிருக்கிறது. இவர்களுக்கு நடுவே இப்போது ஒரு சுந்தர வாலிபன் விளங்குகிறான். அவனுடைய திருமேனி நீலமேகம்போல் பிரகாசிக்கிறது. ஸர்வாபரண பூஷிதனாக இருக்கிறான்.

அம்பரீஷன் :—என்ன ஆச்சரியம்! என் கண்ணுக்குத் தென்படவில்லையே! அரசர்களே உங்களுக்கு?

எல்லோரும் :—அப்படி எந்த உருவமும் தெரியவில்லை!

அம்பரீஷன் :—இது என்ன விபரீதம்! முனிவர்களே, நீங்கள் ஏதேனும் லீலை செய்கிறீர்களா?

முனிவர் :—ஆ! நாங்கள் ஒன்றும் செய்யவில்லையே!

அம்பரீஷன் :—பரந்தாமா இது என்ன சோதனை!

ஸ்ரீமதி :—ஜனார்த்தனா! குரங்கு முகமுடைய இவர்களில் யாரை நான் நாயகனாகக் கொள்வேன்? இதோ இங்கே இவர்களுக் கிடையில் மந்தஹாஸத்தால் என்னை மயக்கும் சுந்தர வாலிபனுக்கே மாலை யிடுகிறேன்—ஜகதீசா நீயே கதி!

சபையில் ஆரவாரம்

எங்கே விவாகப் பெண்! யாரெடுத்துச் சென்றது? அவள் யாருக்கு மாலையிட்டாள்? அவளெங்கே? அம்பரீஷன் ஏதேனும் சூது செய்துவிட்டானா என்ன?

பர்வத முனிவர்:—நாரதமுனிவரே, எழுந்திரும். மஹாவிஷ்ணு செய்த மோசம் இது! வாரும் வைகுண்டம் போய் விசாரிப்போம்.

## காட்சி 6

இடம் :—வைகுண்டத்தில் மஹாவிஷ்ணுவின் ஸந்நிதி!

முனிவர் இருவரும்:—வைகுண்டநாதா! நாரத பர்வத முனிவர்களாகிய நாங்கள் இருவரும் நமஸ்கரிக்கிறோம்? ஸ்ரீமதியை ஸ்வயம்வர மண்டபத்திலிருந்து எடுத்து வந்தது யார்? தாம் தானே!

மகாவிஷ்ணு:—அடடா—என்ன அநியாய மிது! நானெடுத்து வந்ததாக யார் சொன்னது? எப்படி நிச்சயம் செய்கிறீர்கள்? ஓகோ உபகாரம் செய்ததற்குப் பயன் இது தானோ?

பர்வத முனிவர் :—நாரதரே! இது அம்பரீஷன் செய்த சூதுதான்—வாரும் அவனிடம் போவோம். பிரபு! பெண் ஆசையில் மயங்கி யலையும் எங்களை மன்னிக்கவேணும்—வருகிறோம்.

## காட்சி 7

இடம் :—அயோத்தியில் அம்பரீஷன் அரண்மனை

அம்பரீஷன் :—(தனக்குள்) பகவான் பரந்தாமன் லீலைதான் இது! வலத் தோளும் வலக்கண்ணும் துடிக்கின்றன.

முனிவர் இருவரும் :—(பிரவேசித்துக் கோபத்துடன்) அம்பரீஷா! இப்படி எங்களை வஞ்சித்த உன்னைப் பேரிருள் சூழக் கடவது! பிடி சாபம்! உன் னறிவு உனக்கில்லாமற் போகக் கடவது! பிடி சாபம்!!

அம்பரீஷன் :—அந்தோ பரந்தாமா! இந்தக் கொடிய சாப மேற்கவா நான் உன்னிடம் இடைவிடாமல் பக்தி செய்தது?

அசரீரி :—அம்பரீஷா! அஞ்சாதே! சக்கரத்தைப் பிரயோகம் செய்.

முனிவர்கள் :—அந்தோ—செத்தோம். சக்கரம் விரட்டுகிறதே! தப்ப வழி காணேமே! அந்தப் பரந்தாமனையே சரண மடைவோம்.

## காட்சி 8

இடம் :—வைகுண்டம்—பரந்தாமன் ஸந்நிதி

முனிவர் :—ஹரி ஹரீ அபயம்! ஹரி ஹரீ அபயம்! அபயம்!

பரந்தாமன் :—முனிவர்களே! அஞ்சாதீர்கள். இதோ சக்கரத்தை மீட்டுக் கொண்டேன்.

முனிவர் :—வைகுண்டநாதா! ஏனிந்தச் சோதனை?

பரந்தாமன் :—முனிவர்களே! நான் பக்த பராதீனனாதலால், பக்தர்களுடைய கோரிக்கையை நிறை வேற்றினேன்!

முனிவர் :—எப்படி?

பரந்தாமன் :—அம்பரீஷனும் ஸ்ரீமதியும் பரம பக்தர்கள். அம்பரீஷன் பக்தியை உலகுக் குணர்த்துவதன் பொருட்டு, என்னையே அடைய விரும்பித் தவமிருந்த ஸ்ரீமதியை எடுத்து வந்தேன்!

முனிவர் :—ஓகோ அப்படியா? ஆனால் பக்தர்களாகிய எங்களுடைய கோரிக்கைக்கு விமோசனம்?

பரந்தாமன் :—உங்களுடைய கோரிக்கைப்படி உங்களிருவர் முகத்தையும் குரங்கு முகமாக்கினேன்! நீங்கள் ஸ்ரீமதியைக் கல்யாணம் செய்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வில்லையே!

முனிவர் :—ஓகோ! மோசம் போனேம். அதற்கும் உம்முடைய மாயைதான் காரணம். ஆதலால்—நீர் ஸ்ரீமதியை அபகரிக்க எந்த ரூபங் கொண்டீரோ அந்த ரூபத்துடன் அம்பரீஷன் வம்சத்தில் பிறக்கப் போகும் தசரதனுக்குப் புத்ரனுகப் பிறக்கவேண்டும்—

பரந்தாமன் :—ஆகா நல்லது—அப்பால்—

முனிவர் :—ஸ்ரீமதியும் ஜனக மகாராஜாவுக்குப் புத்திரியாக வேண்டும்.

பரந்தாமன் :—(பெருமூச்சுடன்) அப்பால்—

முனிவர் :—உமக்கு மனைவியாக வரும் ஸ்ரீமதியை, எங்களை நீர் ஏமாற்றியது போல் ஓர் இராக்ஷஸன் உம்மை யேமாற்றி அபகரித்துக்கொண்டு போகவேண்டும்.

பரந்தாமன் :—ஓகோ—கோரிக்கை தண்டனையாக வல்லவா மாறுகிறது! அப்பால்—

முனிவர் :—நாங்கள் இந்த ஸ்ரீமதியின் பொருட்டு எந்தத் துக்கத்தை அடைந்தோமோ அந்தத் துக்கத்தைத் நீரும் அநுபவிக்கவேண்டும். இவ்வளவுதான்.

பரந்தாமன் :—பரம ஸந்தோஷம். நீங்கள் என் பக்தர்கள். ஆதலால் நீங்கள் குரோதத்துடன் கோருவதையும் நான் அநுஷ்டிக்கிறேன். ஸந்தோஷமாய்ப்போய் வாருங்கள். முற்றத்துறந்த முனிவர்களாகிய நீங்கள் உங்கள் தருமம் தவறிய பாபத்தினால் வந்த அல்லல்கள் இவையெல்லாம்! இனிப் பெண்ணாசையை மறந்து ஆனந்தமா யிருங்கள்.

# கண்ணன் குழலோசை

[ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.]

இருளும் அச்சமும் நிறைந்த நீண்ட வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு சின்னத்தைத் தங்களுக்கு வழிகாட்டியாக வைத்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு சின்னத்தைச் சுற்றி அநேக அநுபவங்கள் வளர்ந்துவிடுகின்றன.

சிலுவையைப் பார்க்கிற ஒரு கிறிஸ்துவனுடைய மனத்தில் ஏசுநாதரின் பெரிய தியாகந்தான் எழும். ஆயிரம் நாக்குகளை நீட்டுகிற அக்கினியைக் காண்கிற பாரசீக தேசத்தவனுக்கு அசுத்தங்கள் எரிபட்டு அவைகளினின்று சுடர்விட்டெழும் தூய்மைதான் தென்படும். பிறைச் சந்திரனைத் தனக்கு அடையாளமாக வைத்துக்கொண்ட முசல்மான்கள் அதை நோக்குகிற பொழுதெல்லாம் ஒரு தனி உணர்ச்சியை நுகர்கிறார்கள். வெகு காலத்திற்குமுன் இருளில் ஆழ்ந்துகிடந்த அரேபிய நாட்டில் மகமது அவதாரஞ் செய்தபொழுது, அவ் விருட்டில் ஆகாயத்தில் வளர்பிறை ஞான சந்திரன் தோன்றினான். மகமது அவதரித்தபோதுதான் அந்நாட்டில் ஞானமும் பிறந்தது. அது முதற்கொண்டு பிறைச்சந்திரன் ஞான முத்திரையாக முசல்மான்களுக்கு விளங்கி வருகிறது.

இம் மூன்று சின்னங்களும் நமக்குத் தேவைதான். நமக்குத் தியாகம் வேண்டும்; தூய்மை வேண்டும்; ஞானம் வேண்டும். இத் தந்திகளினால் நம்முடைய வாழ்வு மகரயாழ் மீட்டப்பட வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான கானம் பிறக்கும். அக் கானத்திற்கு அப்பால் அமைதிதான் அரசு செலுத்துகிறது. கானத்தினின்று எழும் உவகையில் மனிதன் நடனமாடுகின்றான். கானத்தின் வெளிப்படையாயுள்ள சின்னம் நடனம். அதுதான் நடராஜ வடிவாக நம் முன் திகழ்கிறது.

கானந்தான் பகவானுக்கு நெருங்கிய சம்பந்தம் உடையது. எந்தக் கலையும் கான நிலை அடையவேண்டும். அப்படி அடைந்தால்தான் அது தன் முதிர்ச்சியை அடைந்ததென்று சொல்லிவிடலாம். கால ஒலிக் கூடத்தில் சதா கேட்கப் படுகிற பகவானுடைய சின்னம் கானந்தான். கானத்தில்தான் உலகங்கள் பிறக்கின்றன; உலகங்கள் மறைகின்றன. அக் கானத்தை உலகம் பருகத் தனக்குக் கருவியாகப் புல்லாங்குழலை வைத்துக்கொண்டான் பிருந்தாவனத்தில் ஓர் இடையன். அவன் சாதாரண இடையனில்லை. அகில புவனங்களையும் தன்னுடைய கானத்தில் சிறை செய்யும் ஆற்றல் உடையவன். அவன் ஊதின குழற் சிறப்பைப் பத்துப் பாட்டில் அமைத்திருக்கிறார் பெரியாழ்வார்.

அழகும் அமைதியும் வழிந்தோடும் காலைப் பொழுதில் இளங் காற்றில் மர்மர சப்தமிடும் அலைக்கின்ற புற்றடங்களில் நின்றுகொண்டு கண்ணன் குழல் ஊத ஆரம்பிக்கிறான். அக்கான ஒலி எங்கும் பரவுகிறது. அதைக் கேட்ட கோவலர் சிறுமியர் காவலையுங் கட்டையும் தவிர்த்து அவனை ஒரு மாலைபோலச் சுற்றிவிடுகிறார்கள். மங்கையர்கள் மலர்க் கூந்தல் அவிழ ஓடி வருகிறார்கள். வருகிற வேகத்தில் அவர்கள் உடை நெகிழ அதை ஒரு கையில் பற்றிக்கொண்டு விரைகின்றனர்.

வானவர் நாட்டு இளம் பெண்கள் மனம் உருகிக் கண்கள் பனிப்ப நிற்கிறார்கள். மேனகை, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி முதலியவர்கள் வாய் திறவாமல் கண்ணன் பாட்டைக் கேட்டுத் தங்கள் ஆடல் பாடல்களை நிறுத்துகின்றனர். நாரதனும் தன் வீணையை மறக்கிறான். அம்பரத்தில் திரிகின்ற இமையோர்கள் அமுத கீதவலையில் சுருக்குண்டு கைமறித்து நிற்கின்றனர்.

**நாகரிகத்திற்கு**
எடுத்தது மைசூர் ஸில்க்
ஆடைகள்தான். இவ்
வழகிய ஸில்க் ஆடை
கள் 100-க்கு 100 சுத்த
மானவை. மற்றவை
களைக் காட்டிலும் மேல்;
நீண்ட காலம் உழைக்கக்
கூடியவை.



## மைசூர் சில்க்
### ஆடைகள்

பல கலர்கள் கொண்ட ரகங்
கள் விற்பனைக்குத் தயாரா
யிருக்கின்றன. இன்றைக்கே
போய்ப் பார்க்கச் சொல்லுங்கள்

## கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி,
**மைசூர்.**

சரக்குகள் கிடைக்குமிடம் :—

## தி மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ்,
**1-11, மௌண்ட் ரோட்டு, மதராஸ்.**

பறவையின் கணங்கள் தங்கள் கூடுகளைத் துறக்கின்றன. ஆடுமாடுகள் கால்களைப் பரப்பிக்கொண்டு செவிகளை ஆட்டவில்லை. மான்கள் மேய்வதை மறந்து விடுகின்றன. மேய்ந்த புல்லும் கடைவாய் வழியாய் உதிர்கின்றது. எல்லாம் சித்திரத்தில் அயர்ந்தவைபோலக் காணப் படுகின்றன. மலர்கள் விழுகின்றன; வளர் கொம்புகள் தாழ்கின்றன. கண்ணன் பக்கம் அவைகள் கூம்புகின்றன.

இம் முறையிலே கானத்தின் செயலைக் கூறிக்கொண்டே போகிறார் பெரியாழ்வார். கானத்தின் உண்மை நிலையை அது எழுப்புகிற கிளர்ச்சிகளைக் கொண்டு சொல்லிவிடலாம். அதனுடைய ஆத்ம ஸ்வரூபத்தை விளக்காது அது பரிணமித்து எழுப்புகிற கிளர்ச்சிகளுக்குத் தக்க உருவளிப்பதுதான் கவிக்கழகு. கிளர்ச்சிகளில்தான் அருவ கானத்தின் ஜீவன் பிரதிபலிக்கிறது.

கிரேக்க தேசத்துப் புராண ஆர்பியுஸ் (Orpheus) காலம் முதற்கொண்டு கானத்தைச் சிறப்பித்துக் கூறுகிற விஷயம் படித்தவர்களுக்கும் புதியதல்ல. ஆர்பியுஸ் கானத்திலே மலைகள் உருகுமாம்; ஒலிக்கின்ற அலைகள் ஓய்ந்துவிடுமாம். மரங்கள் ஆயிரம் இலைச் செவிகள் கொண்டு பாட்டு வருகிற திசையை நோக்கிக் கானத்தைப் பருகுமாம்; ஆறுகள் ஓடுவதை நிறுத்திவிடுமாம். இவ்விதச் சிறப்பையும் ஆழ்வார் குறித்திருக்கிறார்.

“மரங்கள் நின்று மது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவைசெய்யும் குணமே”

பெரியாழ்வார் அலரவைத்த சித்திரங்களில் ஒன்று ஒளியிலும், அழகிலும் சிதையாது கால வெள்ளத்தை நீந்தி நிற்கும். பின்வரும் வரிகளில் துயின்று கிடக்கும் சித்திரம் கவனிக்கத் தகுந்தது.

மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர
இரண்டு மாடும் துலுங்காப் புடை பெயரா
எழுது சித்திரங்கள்போல நின்றனவே.

இவ் வரிகள் செவிகளில் ஒலிக்கவே, கண்ணன் குழலோசை உள்ளத்தில் பாயும்; மான்கள் மெய்ம்மறந்த காட்சி மனக் கண்ணுக்கு முன் அழியாச் சித்திரம் போல விரியும்.



# புது சங்கல்பம்

[ந. சிதம்பர சுப்ரமண்யன்]

வருஷம் பிறந்தது. வியாபாரிகள் லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பதுபோல் கவிஞர் ஒருவர் போட்டுப் பார்த்தார். அது வரையில் அவர் நடத்தியிருந்த வாழ்க்கையே பயனற்றதாகப்பட்டது.

"வாழ்க்கை எனக்குக் கொடுத்ததென்ன
முப்பத்திரண்டு வயதுகளைத் தவிர"

என்று சலித்துக்கொண்டார். அநேக சிறந்த காவியங்களை எழுதிய அவர் அப்படிச் சலித்துக்கொண் டிருக்கவேண்டியதில்லை.

ஆனால், கோடிக் கணக்கான இதர மக்கள் தங்கள் வாழ்க்கையின் கணக்கை முடித்துப் பார்ப்பதில்லை. பார்க்கவேண்டுமென்று நினைப்பதுமில்லை. வருஷம் இறப்பதும், வருஷம் பிறப்பதும், சாப்பாடு, ஸ்நானம், தூக்கம் முதலிய தினசரி நடக்கும் காரியங்களைப் போல, வருஷச் சடங்காக இருந்து வருகின்றன. வருஷப் பிறப்பன்று விருந்து சாப்பாட்டோடு, சடங்கு முடிந்துவிடுகிறது.

என் கணக்கை முடித்துப் பார்த்தேன். ஒரு வருஷம் முடிந்துவிட்டது. முழுவதும் நிமிஷம் தப்பாமல் இருந்துவிட்டுப் போய்விட்டது. இந்த வருஷத்தில் நான் அடைந்த அனுபவங்களையும் அடைந்திருக்கவேண்டிய அனுபவங்களையும் இனிமேல் அடைய முடியாது. போனது போனதுதான். வாழ்க்கையில் ஒரு வருஷத்தை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டுப் போய்விட்டது. கடியாரத்தின் உள்ளிருக்கும் யந்திரம் வெளியிலுள்ள முள்ளை ஒருவருக்கும் தெரியாமல் நகர்த்தி வைப்பது போல், என்னை லேசாக நகர்த்தி வைத்துவிட்டு அது போய்விட்டது. பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போனதைத் தவிர ஜனங்களுக்கு அது என்ன செய்திருக்கிறது?

ஒவ்வொரு வருஷம் பிறக்கும்போதும், நான் தீவிரமான திட்டங்கள் போடுவது வழக்கம். ஒரு நாடகம் அல்லது நாவல் எழுதவேண்டும். கடனில் ரூ. 500-வது தீர்த்தாகவேண்டும். பெண் குழந்தைக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கவேண்டும். கைக்குழந்தைக்குச் செய்துகொண்ட பிரார்த்தனையைக் கட்டாயம் இந்த வருஷம் திருப்பதி போய் நிறைவேற்றியாகவேண்டும்.

இப்படிப்பட்ட என்னுடைய பலவிதமான திட்டங்கள் வருஷம் பிறக்கும்போது மனத்தில் வேகத்துடன் பிறக்கின்றன. குடும்ப ஆசைகள், தேசாபிமானம், சமூகத் தொண்டின் ஆர்வம், பகற் கனவுகள், இவைகளெல்லாம் முண்டிக்கொண்டு கிளம்புகின்றன. வருஷம் முடிவதற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே அவைகள் தேய்ந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகின்றன. 'தட்டாமாலை' சுற்றும் குழந்தையைப் போல வருஷம் முழுவதும் 'தட்டாமாலை' சுற்றிக்கொண்டு காலத்தைக் கழித்துவிடுகிறேன். வருஷம் போய்விடுகிறது. என் திட்டங்களோ, நானோ சிறிதளவாவது முன்னேறுதில்லை.

இம்மாதிரி வியர்த்தமான மனோரதங்களால், நாம் நம்பிக்கை இழப்பதில்லை. இறந்தகாலம் நம் உத்ஸாகத்தை உறிஞ்சிவிட்டுச் சென்றாலும், வருங்காலம் நம்மைப் புன்னகையோடுதான் அழைக்கிறது. நிகழ்காலம், நம் கனவுகளைக் கொன்றுகொண்டேயிருந்தாலும், வருங்காலம் மாத்திரம், இன்ப மயமான வெற்றி மாலைகளை நமக்குச் சூட்டி வரவேற்கத் தயாராயிருக்கிறது. ஆனால், மரணத்தின் பலி பீடத்தில் உட்கார்ந்துகொண்டு, நம்மை மயக்கி அழைக்கிறது என்பதை அறிகிறோமா? அந்த இன்ப லாகிரியில் பலி பீடத்தை மறந்துவிடுகிறோம்; பொய்யான இன்பத்தில் திளைக்கிறோம் என்பதை நினைக்கிறோமா? ஓட்டப் பந்தயத்தில் ஜயிக்கவேண்டும் என்ற ஓர் ஆசையில்லாதவன் ஓடவேண்டிய அவச்யமேயில்லை, ஜயிக்க முடியாது என்று தெரிந்

தானும்கூடக் குருட்டு நம்பிக்கை அவனை ஓடச் செய்கிறது.

ஆனால், வாழ்க்கை வெறும் குருட்டு நம்பிக்கையில்தான் தொங்கிக்கொண்டு நிற்கிறதா? வருங்காலம் என்னும் திரைக்கு அப்பால் மரணத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லையா? வாழ்க்கையா? சை. "அது ஒரு நடமாடும் நிழல். மேடைமீது சிறிது நேரம் ஆடிப் பாடிக் குதித்துவிட்டு, போனவிடம் தெரியாமல் மறைந்து போகும் ஒரு கூத்தாடி. ஒரு பித்தன் சொன்ன கதை" என்று மாக்பெத் வேதனை மிகுதியில் கசந்து பேசின வார்த்தைகள் சரிதானா?

மாக்பெத் நினைத்தது சரியில்லை. வாழ்க்கையின் ஊன்றுகோல் சரியாகப் பதியாததால் உண்டான ஏமாற்றம்தான் அது. ஆசாபங்கத்தின் எதிரொலி. நாம் போட்டிருந்த வியாச்சியம் தோற்றுப் போனதற்கும், ஆரம்பித்த தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதற்கும், மனைவி அழகில்லாம விருப்பதற்கும் சம்பாதித்துக்கொண் டிருந்த தகப்பனார் இறந்துபோனதற்கும் கடவுளைக் கசந்துகொண்டு, உலகத்தை வெறுத்து, வாழ்க்கையையே, ஒரு துன்ப சாகரமாகவும், ஊமை கண்ட கனவாகவும் நினைப்பது சரியாகாது.

ஒளியை விட்டு நிழலையும், நீருக்குப் பதிலாகக் கானலையும் தேடி அலைவதில்தான் இந்த நிலை ஏற்படுகிறது. லக்ஷ்யம் சரியானபடி இல்லாததால்தான் பாண்டு புத்ரனை அர்ச்சுனனுக்குப் பெரிய பிரமை ஏற்பட்டது. கௌரவர்களுக்கு முன்னால் யுத்த சன்னத்தனாக நின்ற அர்ச்சுனனும் மனச் சோர்வடைந்து, வாழ்க்கையின் உண்மை தெரியாமல் பிரமித்தான். எந்த வெற்றிக்காகத் தவங்கிடந்து தவித்தானோ அந்த வெற்றி அவனுக்குப் பாபமும், சோகமும் கலந்த துன்பக் கதம்பமாகத் தோன்றியது. "இவர்கள் என்னைக் கொன்றாலும் சரி, மூன்று லோகங்களையும் நான் ராஜ்யமாக அடைவதானாலும் சரி; நான் இவர்களைக் கொல்ல விரும்பவில்லை. பூமியின் ஒரு சிறு பாகத்திற்காக இவர்களை நான் எப்படிக் கொல்வேன்?" என்றான்.

இந்தக் குழப்பம் அவனுக்கு ஏன் ஏற்படவேண்டும்? ராஜ்யத்தை ஜெயிப்பதற்காகவா குருக்ஷேத்ர யுத்தம் நடந்தது? பாகப் பிரிவினைக்காகவா கோடிக் கணக்கானவர்கள் உயிர் துறக்கவேண்டி வந்தது? மண்ணாசையை ஸ்தாபிக்கவா, பகவான் மண்ணில் பிறந்து பார்த்தசாரதியாக வந்து யுத்தத்தை நடத்திவைக்க வேண்டி வந்தது? தரும தேவதையின் சுக்ஷியில் நின்றுகொண்டு சண்டை போடுவதைப் பார்த்தன் மறந்துவிட்டான். சீர்குலைந்த தருமத்தை ஸ்தாபிக்க வந்த கடவுள் பக்கத்திலிருப்பதை அவன் அறியவில்லை.

அறநெறியில் போகிறவர்களுக்கு ஏமாற்றம் கிடையாது. தர்மத்தைக் கைப்பிடிப்பதில் ஆனந்தத்தைத் தவிர வேறு ஒன்றும்கிடையாது. ஆசையால் தூண்டப்பட்டு நாம் செய்யும் காரியங்கள் பயனில்லாமல் போகும்போது நமக்கு ஏமாற்றமும், துன்பமும் உண்டாகின்றன. அறத்தின் தூண்டுகோலால் நாம் செய்யும் காரியங்கள் பலிக்காமல் போகும்போது, மனக்கசப்பு ஏற்பட நியாயமில்லை.

'பற்றின்றிக் காரியங்களைச் செய்' 'பற்றின்றிக் கர்மாவைச் செய்' என்ற வாக்கியங்களின் சூக்ஷ்மத்தை, கவிஞர் உணர்ந்திருந்தாரானால், அவர் வாழ்க்கையைக் குறைகூற வேண்டியிருந்திருக்காது. வாழ்க்கையில் அவர் என்ன எதிர்பார்த்தார்? ஏன் எதிர்பார்த்தார்?

கண்ணன், அர்ச்சுனனுக்கு உபதேசித்தது, ஏட்டுச் சுரைக்காய் வேதாந்தம் அல்ல. தினசரி நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை வேதாந்தம். இறந்த காலத்தின், ஆசாபங்கங்களும், வருங் காலத்தின் மரண பயமும், நம் ஆர்வத்தைக் குறைத்துச் சோம்பேறிகளாக்கி, பொய் வேதாந்தம் பேசிப் பொழுதுபோக்காமல், நம்மை உழைக்கச் சொல்லிச் சவுக்கடி கொடுக்கிறது கீதை.

இதைநாம் மனனம் பண்ணிக்கொண்டேயிருந்தால், நமக்கு ஜயமுண்டு, பயமில்லை. எல்லாம் தானே வந்து சேரும்.

வருங்காலத்தை, இறந்த காலமாக ஆக்காமல் இருக்கச் செய்வதற்கு இதுதான் மந்திரம். இதுவே, புது வருஷ சங்கல்பம்.

# மன நிழல்

[ஏ. முகம்மது ரஷீத், பீ. எஸ் ஸி. (ஆனர்ஸ்) தஞ்சை.]

"ஆணிக்கல் மாணிக்கல், பேஷானகல்!
எங்கப்பன் பண்ணிவச்ச பேஷானகல்!
பையாஸ்கோபி, பையாஸ்கோபி
பலே ரங்கா ஸைன்! பலேரங்காஸைன்!

என் குழந்தை பிரேமா, தன் தளர் நடையுடனும் பச்சரிசிச் சிரிப்புடனும், சினிமா டான்ஸ் ஆடியவாறே ஓடி வந்தாள். என்னைக் கண்டதும் 'களுக்' கென்று சிரித்தாள்.—அவள் குதூகலம் அவளுக்கு! உலகமே தலைகீழாக நின்று தத்தளித்துப் போரில் புதைந்திருந்த போதிலும் அவளுக்கு அதைப்பற்றி அக்கறையில்லை.

* * *

எனக்கும் மிகவும் அக்கறை என்று சொல்வதற்கில்லை. அக்கறை இருந்தாலும் கைகால்களைக் கட்டிப் போடப்பட்டவன் போன்ற நான்—ஏன், நாங்கள்—என்ன செய்ய முடியும்?

மெதுவாக ஜன்னலைத் திறந்தேன். ஏழெட்டு வயதுப் பாலகன் ஒருவன் வாயில் தங்கரத்தினம் பாட்டு' ரீங்காரித்துக்கொண் டிருந்தது. என்றாலும் அவன் ஞாபகம் எல்லாம் தன் வலது கையிலுள்ள நெய்த் தொன்னையின் மேலும், இடது கையிலுள்ள சர்க்கரைப் பொட்டலத்தின் மேலுந்தான். அவன் நாக்கில் ஜலம் ஊறுகிறது. ஒரு திண்ணையில் உட்கார்ந்து தின்னலாம்—சாவகாசமாக; ஆனால் நேரமாகிவிடும். ஒரு யோசனை—பொட்டலத்தின் அடிப்பாகத்தைப் பல்லால் கடிக்கின்றான். வேண்டிய வரையில் சர்க்கரை வாயில் நிரம்புகிறது. அடுத்த விநாடி நாக்கு நெய்யுடன் கலக்கின்றது. ஆஹா! என்ன சுகம்! என்ன ருசி!'

* *

பையனுக்கு இது சுவர்க்கம். ஆனால் ஒரு பச்சிளங் குழந்தைக்கு நெய்யும் சர்க்கரையும் ஏற்குமா? நிலைமைக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கின்றது—சிறு சிசுவுக்குத் தாய்ப்பால்; இளைஞனுக்கு ஜீரணமாகக் கூடிய ஆகாரம்; விலாப் பழுத்தவனுக்கு இரும்பும் கல்லுங்கூட; நோயாளிக்குப் பத்தியம்; கிழவனுக்கு மென்மையான உணவு. ஆகாரம் என்று பொதுவாகச் சொன்னபோதிலும் நிலைமைக்கும் சக்திக்கும் ஏற்றவாறு மாற்ற வேண்டி யிருக்கின்றது.

* * *

கூலியாட்களெல்லாம் 'ஹாய்' யாகப் போகின்றார்கள்—கூண்டிலிருந்து வெளிப்பட்ட பறவைகளைப் போல! சிலருக்குத்தான் சுயப் பிரக்ஞை இருக்கின்றது. ஆனால் மற்றவர்கள் ராஜா, மந்திரியாக மாறி விடுகின்றார்கள். அவர்கள் நடையும், ராஜ கம்பீரமும்......இவர்களுக்கே இப்படி என்றால் அதோ வருகின்றாரே பணம் படைத்த தர்ம ராஜா அவர் நடை எப்படித் தானிருக்கும்?—வலது முன் காலை உயரத்தூக்கி நிற்கும் உயர்தரக் குதிரையைப் போல காற்றில் காலடி.

* * *

நாடகக் கொட்டகைகளும் சினிமாத் தியேட்டர்களும் நிறைவது குறையா விட்டாலும் எங்குப் பார்த்தாலும் பண நெருக்கடி! ஜனங்களுக்கு உற்சாகமில்லை.

நிலத்தை வாங்குவோரில்லை; தங்கத்தைத் தான் வாங்குகிறார்கள். ஆம். பணம், பணம்,பணம்—இதுதான் மூச்சு.மனிதன் ஜீவன் இழந்து, பிணமாகப் போனால், மண்ணோடு மண்ணாகக் கலக்க வேண்டியது தான். ஒப்பற்ற வீரனும் மரித்து விட்டால் பிரேதக் கணக்கில் அவனும் தாக்கலாக வேண்டியதுதான். பிரேதங்கள் எல்லாம் அழுகிப் போய்த் துர்நாற்றம் வீசத்தான் செய்யும். யார் பிரேதமும்—பணக்காரன் பிரேதங்கூட!—மணக்காது.

எதிர் வீட்டில் ஒருவர் குடியிருக்கின்றார்—பெரிய சம்சாரி; அரசனுக இருக்கும் பாக்கியமில்லாமல்தான் ஆண்டியாகப் போய் விட்டார்—ஐந்து பெண்களையுடைய ஆண்டி. மூன்று பெண்களுக்குக் கலியாணமாகி விட்டது. பாக்கி இரண்டு.

பிரமசாரி கோர்ட் திறக்கும் காலம். ஜவுளிக் கடை, புஷ்பக் கடை, பாத்திரக் கடை......—ஏன், வியாபாரத்திற்கே புதிய பேரேடு, பெண் பெற்றவர்களுக்குப் புதிய வரியோடு. பெண்களை வளர்த்து வைத்துக் கொண்டு இரவும் பகலும் சமூகத்தின் வாய்க்குப் பயந்துகொண் டிருந்தவர்களில் சிலர்—எதிர் வீட்டுக்காரர்கூட — மூச்சு விடுகின்றார்கள். மூச்சு விடத்தானே என்னவோ அவர் வெளியே போகின்றார்?

* * *

“யாரையா அது ஊட்டுலே?......”

சரிதான், அதட்டுகிற தினுசைப் பார்த்தால் இவர் ஒரு கடன் கொடுத்த பேர் வழி என்று தெளிவாகத் தெரிந்துவிடுகின்றது. ஆகாயப் பந்தல் என்னவென்று உங்களுக்குத் தெளிவாகத் தெரியவேண்டுமா? அந்தக் கடன்காரருக்கு அந்த இரண்டு ஸ்திரீகளும்—தாயாரும் மனைவியும் போலும்—சொல்லும் பதிலின் லளிதமான நடையையும், மென்மையான வார்த்தைகளையும் கவனியுங்கள்.

* * *

வறட்டு ஜம்பம்!...ஆம், நம்மில் அநேகரிடம் நம்மையும் அறியாமல் படிந்து போகும் ஒரு மினுக்கு!...இதோ வருகின்றானே பம்பரத்தைத் தூக்கிக் கொண்டு, அந்த வாண்டு, அவனுக்கு இன்னும் ஒன்பது ஆண்டுகள்கூடச் சரியாக முடியவில்லை. அவன் ஜம்பத்தைப் பாருங்களேன். நேற்றுத்தான் கார்த்திகை. இவன், சுட ஒரு கட்டுப் பட்டாஸுமில்லாமல் தவித்ததை இவன் தந்தை என்னிடம் சொல்லி வருத்தப்பட்டான். ஆனல் இவன் எதிரே வரும் இன்னெரு வாண்டினிடம் என்ன சொல்கின்றுன் என்பதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்டுப் பாருங்கள்: “நான் நேத்திக்கு நூறு கட்டு பட்டாஸு சுட்டேனே; எங்கம்மா குப்பையா இருக்குன்னு எல்லாத்தையும் வாரி எங்கேயோ கொட்டிட்டா...”

மூன்றிலைகள் சரியாகத் தளிர்க்காத சிறு பயல்!

* * *

சூரியன் ரணகளத்துடன் மறைய வேண்டிய ஆர்ப்பாட்டங்களைச் செய்ய ஆரம்பித்தான். அன்றைய உத்தியோகம் முடிந்ததும் வீட்டிற்குப் போகவேண்டியவனுக்கு ஏனிவ்வளவு மமதை? நீலவானத் திரைகளை எல்லாம் பளீர்பளீ ரென்று அறைந்து செக்கச் செவே லென்று ஆக்கி விட்டானே!... ...

என்றாலும் இயற்கைத் தேவி தன்னை இப்பொழுது தானே சிங்காரித்துக் கொள்ள ஆரம்பிக்கின்றாள்! ஆஹா! அந்தத் தோப்பு, திருட்டுக் கிரணங்களுக்கு வழி விட்டும் எவ்வளவு ரம்மியமாகச் சோபிக்கின்றது. அதோ அந்தத் தோப்பிலிருந்து குயில் கூவுகின்றது—என்ன குளுமை! என்ன இனிமை! எப்படி அலை அலையாய் மோதி அக்குரல் அந்தத் தோப்பினுள் ஒலித்துப் பரவுகின்றது......குக் கூ!...குக் கூஊ!...ஆஹா!...

* * *

“அட போடா! இன்னக்கி பொழுதெல்லாம் சும்மா வீணாப் போயிடுச்சுடா ...மியர் வேஸ்ட்!...வேஸ்ட்!...”

சிந்திப் போன பாலுக்கு இப்பொழுதென்ன செய்வது? ஒன்றும் மோசமில்லை. பருவ காலத்தில் பாம்பு சட்டையை உரித்தெறிந்து வெளிக் கிளம்புவதுபோல, பாய்ந்தெழுந்து இனியாகிலும் பொதுஜன வேலையில்—சகோதர மக்களுக்காக—ஈடுபடலாகாதா?

* * *

“ராஜு! நீ இன்று டிராமாவிற்கு வரவில்லை. ஸ்ரீ........அவரா மல்ல ராஜ பார்ட்?...”

என் நண்பன் தேவராஜ் இப்படிச் சொல்லியவாறே நாற்காலியின்மீது உட்காருகின்றான்.

ஹூம்! அவனைச் சுற்றி இருக்கும் உலக நாடகத்தைத் தினமும் அனுபவிக்கும் பாக்கியத்தின் மகிமையை அறியாதவன்!

# விஞ்ஞானமும் மக்கள் வாழ்க்கையும்

[டி. பி. நவநீத கிருஷ்ணன் எம். ஏ. அண்ணாமலை நகர்.]

விஞ்ஞான மென்பது குறித்த சில பொருள்களைப் பற்றி மட்டும் கூறும் சாஸ்திரமன்று. அது, பலகாலங்களில் பலநாடுகளில் பலவாறான வகைகளில் பலரால் அறியப்பட்டு வெளியிடப்பட்ட இயற்கையின் இரகசியங்களைத் தன்னுள் கொண்ட அறிவுக் களஞ்சியமாகும். ஆதலின், அது, எக்காலத்தில் எவரால் தோற்றுவிக்கப் பட்டது எனக்கூற இயலாத தொன்றாகும். அது, காலாந்தரத்தில் பரிணமித்தும், இன்னும் பரிணமித்துக் கொண்டும் இருக்கும் சாஸ்திரமாம்.

பண்டைக் காலங்களில், நம் முன்னோர்கள் நெருப்பின்றியும் பாண்டங்களின்றியும் ஒழுங்கின்றியும் பருவ காலங்கள் உண்டென்றறியாமலும் குகைகளில் வசித்து வந்தனர் என நாம் மக்கள் சரித்திரத்தினின்று அறிகிறோம். அவர்கள் இதர பிராணிகளைக் கொன்று தின்றும், வனங்களில் கிடைத்த கனி, கிழங்குகளைப் புசித்தும், உயிர் வாழ்ந்து வந்தனர். காலக்கிரமத்தில் அவர்கள், இயற்கையைக் கவனித்தலால், அதன் இரகசியங்களில் சிலவற்றை அறிந்து, அவற்றைத் தம் வாழ்க்கையில் பயன் படுத்திக் கொள்ளலாயினர். அக்காலத்திலேயே, அவர்கள், இயற்கையில் ஒழுங்கு உண்டென்று உணரலாயினர். ஆயினும், இவ்வொழுங்கைப் பற்றி விவரமாய் அவர்களால் அறிய முடியவில்லை.

இயற்கையின் சிறப்பான ஒழுகலாற்றைக் கண்டு வியப்புற்றனரே யன்றி, அதற்கடிப் படையான காரணங்களைக் கண்டுபிடிக்க அவர்களால் இயலவில்லை. ஆதலின், உணர்ச்சி மிக்க சிலர் தாமடைந்த வியப்பை, அழகிய கதைகள் வழியே வெளியிடலாயினர்; இயற்கை நிகழ்ச்சிகளுக்கு மானிட உருவைத் தந்து, அக்கதைகளில் வைத்து அமைத்தனர்.

நாம், இக்காலத்தில், சிறுவர் சிறுமிகளுக்கேற்ற யக்ஷிணிக் கதைகள் (Fairy Tales) என்று அழைக்கும் கதைகள் இவ்வாறானவையேயாம். அவை, இயற்கை நிகழ்ச்சிகளையே தம் உட்கருத்தாய்க் கொண்டவை. மேற் கூறியதற்கு உதாரணமாக, 'துயில் கொண்ட கட்டழகி' (Sleeping Beauty) என்ற கதையைக் கூறலாம். அக்கதை வட துருவத்தின் அருகேயுள்ள பனிவெளி நாடுகளின் பருவகால நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகும். அந்நாடுகள், வேனிற்காலம், குளிர்காலம் என்னும் இரண்டு பருவங்களையே கொண்டுள்ளவை. அக்கதையைச் சுருக்கமாய்க் கூறிய பின், அது பருவகால நிகழ்ச்சிகளை எவ்வாறு குறிக்கின்றது என்பதை விளக்கலாம்.

"ஒரே யொரு ஊரில் ஒரே யொரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு பெண் பிறந்தது. தன் பெண்ணை வாழ்த்திவிட்டுப் போக வேண்டு மென்று, அவ்வரசன் யக்ஷிணிகளை யெல்லாம் அழைத்தான் ஆனால் ஒரு யக்ஷிணியை மட்டும் அழைக்க மறந்து விட்டான். அவன் அழைத்த யக்ஷிணிகள் எல்லோரும் வந்து அக்குழந்தையை வாழ்த்திவிட்டு, ஒவ்வொருவரும் ஒரு வரம் தந்து விட்டுப் போயினர்.

"ஒரு யக்ஷிணி அழகைக் கொடுத்தாள். மற்றொருத்தி குணத்தைக் கொடுத்தாள். இப்படிப் பலரும் பல நற்பொருள்களைக் கொடுத்தனர். அழைக்கப்படாத யக்ஷிணி கோபா வேசத்துடன் ஓடோடியும் வந்து, அக்குழந்தை பதினாறாவது வயதில் இராட்டையின் கதிர்க் காம்பினால் கீறப்பட்டு இறக்கும் என்று சாபமிட்டாள். அரசன் கலங்கினான். அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவளுக்கும் சற்றுக் கோபம்

தணிந்தது. தன் சாபத்தை மாற்றி, அக் குழந்தை கதிர்க்காம்பினால் குத்தப்பட்டு இறக்க மாட்டாளென்றும், நூறாண்டுகள் உறங்குவாளென்றும் அதன் பின் எழுவாள் என்றும் சொல்லிவிட்டுச் சென்று விட்டாள்.

"அரசன் தன் நாட்டில் யாரும் இராட்டினம் வைத்திருக்கக் கூடாதென்று உத்தரவிட்டான். ஆயினும், அரண்மனையின் உச்சி மாடியிலே யிருந்த ஒரு கிழவி இவ்வாணையைப்பற்றிக் கேள்விப் படவில்லை. ஆகையால் அவள் தன் இராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டேயிருந்தாள். பதினாறாண்டுகள் கழிந்தன. இளவரசி யொருநாள் யாருக்கும் தெரியாமல் கிழவியிருந்த மேல் மாடிக்குத் தற்செயலாய்ச் சென்றாள். அங்கு, தான் அது வரை கண்டிராத இராட்டினத்தைக் கண்டாள். அதைச் சுற்றிப்பார்த்தாள். கையில் கதிர்க்காம்பின் கூரிய முனை குத்தித்து. உடனே அவள் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள். அக்கணமே அவ்வரண்மனையிலுள்ள எல்லோரும் அவரவர்கள் இருந்த இடத்திலேயே மூர்ச்சையுண்டு விழுந்து உறங்கலாயினர்.

"நூறாண்டுகள் சென்றன. காட்டில் வேட்டை யாடிக்கொண்டிருந்த இளவரசன் ஒருவன் வழிதப்பி யலைந்து அந்நகரை யடைந்தான். அங்குள்ள அரண்மனையிலெல்லோரும் துயிலில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு வியந்தான். தன்னை யறியாமலே அவன் கால்கள் அவனை மேல் மாடிக் கேற்றின. அங்குக் கீழே விழுந்து துயிலிலாழ்ந்திருந்த இளவரசியைக் கண்டான். அவளை ஆசையுடன் முத்தமிட்டான். அவளும் தன் கண்களைத் திறந்து எழுந்தாள். அவ் வரண்மனை முழுதும் விழிப்புச் சின்னங்கள் தோன்றலாயின. கொம்புகள் ஊதின; காகங்கள் கரைந்தன; தவளைகள் கத்தின; போர் வீரர் எழுந்தனர்; காவலாளர் விழித்தனர்; வேலையாட்கள் வேலை செய்யத் தொடங்கினர். இளவரசன் இளவரசியை மணந்தான். எல்லோரும் சுகமாய் வாழ்ந்தனர்."

அவ் வரண்மனை இவ் வுலகைக் குறிப்பிடும். 'கட்டழகி' குளிர் காலத்துறைந்த பனியின் கீழ் இறவாமலும் தளிராமலும் புதைந்து கிடக்கும் விதைகளுக்கு உவமையாவாள். அவளைக் காயப் படுத்திய 'கதிர்க் கொம்பு' உறைபனிப் படலத்திற்கு உவமானமாகும். 'நூறாண்டுகள்' நீடித்த குளிர் காலமாகும். அக்காலத்தில் உலகமே உயிரற்றதெனத் தோன்றுவது போலவே, அவ் வரண்மனையிலும் எல்லோரும் உறங்கினர். 'இளவரசன்' வேனிற் காலத் தொடக்கத்தில் உலகம் பெறும் ஞாயிற்றின் இளங் கிரணங்களை ஒத்தவன். இளவரசன் இளவரசியை அன்புடன் முத்தமிட்டது போலவே, இளங் கிரணங்களும் கனிவுடன் இவ் வுலகின் மீது விழுகின்றன. இவ் விரண்டும், உயிரையூட்டி இன்பம் தருகின்றன. அவ் விதை முளைவிட்டுத் தளிர்வது போலவே, அவ் விளவரசியும் எழுந்து நின்றாள். 'போர் வீரர்கள்' குளிர் காலம் முழுதும் நிலத்தின் கீழுள்ள குகைகளில் உறங்கி, வேனிற் காலத்திலெழும் கரடிகளுக்கும் முள்ளம் பன்றிகளுக்கும் ஒப்பாவர். 'காவலாளர்' வெளவால்களாம். 'வேலையாட்கள்' சுண்டெலிகளையும் பெருச்சாளிகளையும் போலத்தாமிருக்கும் இடத்தைச் செம்மையாக்கும் வேலையைச் செய்தனர். தேனீக்களும் வண்டுகளும் மலர் தோறும் சென்று உலகம் விழித்தது என்னும் நற்செய்தி யறிவிப்பதுபோல், ரீங்காரம் செய்துகொண்டு செல்வது, 'கொம்புகள் ஊதுவது' எனக் கொள்ளப்பட்டது.

பின்னர், மக்கள் தாம் கண்ட இயற்கையின் தோற்றங்களை, நுண் கலைகள் (arts) வாயிலாக வெளியிடலாயினர். ஓவியமும் காவியமும் சங்கீதமும் உணர்ச்சியை வெளிப்படுத்தும் சாதனங்களாயின.

இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு வியப்புற்று மக்கள் முதலில் செயலற்றிருந்தனர். பின்னர் கதைகள் வாயிலாகவும், அதன் பின்னர், நுண் கலை வாயிலாகவும் தம் வியப்பை வெளிப்படுத்தினர். இதன் பின் அந் நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனித்து, அவற்றிற்கான காரணங்களைச்

சிறிது சிறிதாய் அறியலாயினர். காரணங்களை முற்றும் அறிய இயலாவிடினும் தாமறிந்த சிலவற்றினின்று இயற்கை வளத்தைச் செயற்கை முறைகளால் வளர்க்கும் வழிகள் சிலவற்றை யடைந்தனர். இவ்வாறு, உழவுத் தொழில் போன்ற தொழில் முறைகள் தோன்றலாயின. நாளடைவில் அநேக வகைகளான தொழில்களும் அவை யாற்றும் முறைகளில் முன்னேற்றங்களும் ஏற்பட்டன. தொழில் முறைகள் சிறப்புற்றோங்கி வளரலாயின. அக் காலத்தே, சில அறிஞர்கள் தொழில் முறைகளினின்று கிடைத்த அறிவை ஒழுங்கு படுத்தலாயினர். இவ்வாறு இயற்கையினின் றறியப்பட்ட செயல் முறைகளை வரையறுத்து ஒழுங்குபடுத்தி, அவற்றினிடையிலுள்ள இணைப்புக்களைப்பற்றி, அவர்கள் சிந்திக்கலாயினர். இவ்வாறான சிந்தைகளினின்றே விஞ்ஞானம் எழுந்தது எனலாம். ஆதலின், விஞ்ஞானம் காலாந்தரத்தில் எழுந்த சாத்திரமாகும். எனவே, அது என்றும் முன்னேற்றமடைந்துகொண்டேயிருக்கும் தன்மை வாய்ந்தது. இன்னும், பலவகையான தொழில்களின் உறவாலும், இயற்கையை ஆராய்வதாலும் கிடைத்த அறிவே விஞ்ஞான நூல்களுக்கு அடிப்படையாகவுள்ளதென்றும். இதனாலேயே "சகல விதி முறைகளும் (Theories) அறிவும் விஞ்ஞானத்தின் பல தொகுதிகளும் மக்கள் தம்முடைய பல தொழில்களின் வழியே சேமித்த அனுபவத்தினின்றே தோன்றியவையாம்" என பெஞ்சரா ப்ரான்போர்ட் (Benchara Branford) கூறியுள்ளார். நாம், பல்வேறான விஞ்ஞான நூற் பகுதிகளைப்பற்றியும் அவை எவ்வகையான தொழில் முறைகளினின்று தோன்றின என்பதைப் பற்றியும் இப்பொழுது சுருக்கமாய்க் கூறலாம்.

முதலாவதாக, கணித நூல் (Mathematics) எவ்வாறு எழுந்தது என்பதைப் பற்றிக் கூறலாம். உழவுத் தொழில் தோன்றிய பின், மக்கள் ஒத்துழைத்தல் இன்றியமையாததாயிற்று. இதனால் சமூகமும் சமூக வாழ்க்கையும் ஆரம்பமாயின. இவ்வாறு 'பலர் ஒன்று கூடல்' என்ற கருத்து உண்டான பின், 'எத்தனை?' என்ற வினவும் எழுதல் இயல்பே. 'எத்தனை?' என்ற வினவிற்கு விடையளிப்பதினின்றே 'எண்ணிக்கை' உண்டாயிற்று. இவ்வாறு படிப்படியாய் 'கணித நூல்' தோன்றியது. கணித நூலின் ஒரு பகுதியான 'வடிவ-நூல்' (Geometry) நில அளவை (Surveying)யினின்று வெளிப்பட்டது. அரண்கள் அமைக்கும் தொழிலினின்று, 'கன-வடிவ நூல்' (Solid Geometry) எழுந்தது. இங்ஙனம் கணித நூலும் அதன் பல பகுதிகளும் தொழில் முறைகளினின்று தோன்றியவையேயாம்.

உழுது பயிரிடுவதற்கேற்ற கலப்பை முதலிய சாதனங்களை யுண்டாக்குவதற்கும், போர்க் கருவிகளைச் செய்வதற்கும், வீடு கட்டுவதற்கும், இன்னும் இவை போன்ற பலவற்றிற்கும், கருமார் தொழில்—தச்சர் தொழில் — கொத்தர் தொழில் — போன்றவை இன்றியமையாதவையாயின. இவற்றினின்றே பின்னர் இயந்திரத் தொழில் முறையும் தோன்றியது. இவை யாவற்றினின்றும், பௌதிக நூல் (Physics) எழுந்தது.

நோயாளிகளுக்கு மருந்து கொடுத்தல், சாயமேற்றல், சாராயம் காய்ச்சல், தோற் பதனிடுதல் முதலான தொழில்களினின்றே இரசாயன நூல் (Chemistry) உண்டாயிற்று.

உழவுத் தொழிலினின்றும் தோட்ட வேலையினின்றும் பயிர் நூல் (Botany) தோன்றியது என்பதைப்பற்றி அதிகமாய்க் கூறவேண்டியதில்லை.

வேட்டுவத் தொழிலினின்றும் செம்படவர் தொழிலினின்றும் பிராணி நூல் (Zoology) எழுந்தது.

இவ்வாறே பிணிகளை நீக்கும் தொழிலினின்று மருத்துவ நூலும் (Medical Science) உடல் நூலும் (Physiology), மாலுமித் தொழிலினின்று நிலப்பரப்பு நூலும் (Geography), வான நூலும்

(Astronomy), சுரங்கத் தொழிலினின்று, நில நூலும் (Geology) தோன்றின.

எனவே, பல தொழில்களினின்று கிடைத்த அனுபவக் கல்விச் செல்வத்தினின்றே விஞ்ஞான நூல்கள் பலவும் தோன்றின வெனலாம். இங்ஙனம் தோன்றிய விஞ்ஞான நூல்கள் தம்முடைய தேர்ந்த முறைகளால் தொழிற் கலைகளை வளர்த்துள்ளன என்பதையும் நாம் காண்கிறோம். இன்னும், விஞ்ஞான விதியியல் முறைகளால் (Theory) கண்டுபிடிக்கப்பட்டவற்றினின்று பல புது வகையான தொழிற் கலைகள் எழுந்துள்ளன. இதற்குப் பல உதாரணங்கள் கூறலாமாயினும், சிலவற்றையே இங்குக் கூறுகிறோம்.

மின்சாரம் பயன்படும் தொழின் முறைகள் யாவும் விஞ்ஞானம் தோற்றுவித்தவையே யாம். இயைபு நூல் உண்டாக்கிய தொழில்கள் அளவற்றன. கரியெண்ணெய் (Coal-Tar) என்ற வொன்றைப் பற்றின தொழில்களே பல உள்ளன. இன்னும் உழவுத் தொழிலைப் பயிர் நூலும் இயைபு நூலும் பல வகைகளிலும் பெருக்கியுள்ளன. நில நூலும், பூத நூலும் சுரங்கத் தொழிலின் விளைவுகளைப் பன்மடங்காக்கியுள்ளன. இங்ஙனம், விஞ்ஞானமும் தொழின் முறைகளும் ஒன்று மற்றொன்றை ஆக்கிக் கொண்டும், தான் அதனால் ஆக்கப்பட்டுக் கொண்டும், இருப்பதனாற்றான், மக்கள் முன்னேற்ற மடைகின்றனர்.

இவ்வாறிருந்தும் சிலர் விஞ்ஞான விதியியல் கல்வி (Theoretical Science) பயனற்றதென்றும், விஞ்ஞான விளைவியல் கல்வி (Applied Science) போதுமானதென்றும், கூறுகின்றனர். அவர் கூறியவாறு, விளைவியல் கல்வியில் மட்டும் கருத்தூன்றினோமாயின், விதியியல் கல்வியினின்று, விளையும் பல பலன்களை நாம் இழப்பது திண்ணம். எனினும், விதியியலானவற்றில் மட்டுமே கருத்தூன்றுவதும் நன்றன்று.

விஞ்ஞானத்தை மக்கள் முன்னேற்றத்திற்கான பயனுறு முறையில் எவ்வாறு அவர் வாழ்க்கையில் இணைக்கலாம் என்பதைப் பேராசிரியர் ஆர்தர் தாம்ஸன் (Professor Arthur Thomson) கூறிய மொழிகளால் காட்டிவிட்டு, இச்சிறு கட்டுரையை நாம் முடிக்கலாம். அவர் கூறுவதாவது :—

“விஞ்ஞானம் பெரிதும் மக்களுக்குப் பயன்பட வேண்டுமாயின், அரசியலார் விஞ்ஞானமளித்துள்ள செயல்முறையான செல்வத்தை, மக்களின் இன்னல்களைத் தீர்க்கும் வகையில் பயன்படுத்த வேண்டியதே தம் கடமையென உணரவேண்டும். இயற்கையளிக்கும் பொருள்களைப் பயனற்ற அழிக்கும் முறைகளில் வீணாக்காமல், பயனுறு முறையில் உபயோகிக்க வேண்டும். கடல்களினின்றும் நிலத்தினின்றும் விளையும் பொருள்களின் செல்வத்தைப் பெறுவதற்கும்-தொழிற்சாலைகளை உடல் நலத்திற்கேற்றவாறு அமைப்பதற்கும்-மக்களைச் சூழ்ந்துள்ளவற்றை அழகுறச் செய்வதற்கும்-தொத்து நோய்களை அறவேஒழிப்பதற்கும்-மக்களை உடல் உரம் பெறும்படி செய்வதற்கும்,-என்றவற்றிற்கான வழிகளையறிந்து, அவற்றைச் செய்வதற்கும் திறமைபெற்ற பல விஞ்ஞான நிபுணர்கள் மலிந்து கிடக்கும் இந்நாளில், அரசியலார் அவர்களது அறிவையும் திறமையையும் பயன்படுத்தாம லிருப்பதைக் கண்டு நாம் வியப்புறுகிறோம்.”

# தங்க மோதிரம்

[ஆ. வே. ஜேயராமன்]

தாதுலிங்கம் பிள்ளை வக்கீல் குமாஸ்தாக்களுள் எல்லாவிதத்திலும் கியாதி பெற்றவர். உத்தியோகத்தில் நுழைந்ததிலிருந்து இன்று வரையிலும் அவர் பல பெயர் பெற்ற வக்கீல்களிடம் வேலை செய்திருக்கிறார். இவருடைய வேலையைச் சம்பாதித்துக் கொண்ட வக்கீல்களெல்லாம் இப்பொழுது பெரிய பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள். பிள்ளை நம்பிக்கை வைக்கத் தகுந்த மனிதர். அதிக செலவாளியல்ல. பாங்க் குமாஸ்தாக்கள் அவர் பாங்கில் பணம் போடுவதைக் கண்டிருப்பார்களே யல்லாது, பணத்தை எடுத்தறியார்கள். பாங்க் மனிதர்கள் இவரைப் பார்த்துப் புன்முறுவலுடன் சலாம் செய்யும் பொழுதெல்லாம், பிள்ளை சட்டைக் காலரை இழுத்துவிட்டு நிமிர்ந்து நோக்குவார்.

அச்சமயம் தாதுலிங்கம் பிள்ளை, வக்கீல் சண்டமாருத மய்யரிடம் வேலையிலிருந்தார். சண்டமாருத மய்யருக்கு முப்பது வயதிருக்கும். தடி பிரம்மசாரி. அவரைக் கேட்டால், தான் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லை யென்றும், சீக்கிரமே தொழிலை விட்டுவிட்டுப் பாண்டிச்சேரிக்காவது அல்லது திருவண்ணாமலைக்காவது செல்லப் போவதாகச் சொல்லிக்கொள்வார். ஆனால் தாதுலிங்கம் அன்று வக்காலத்து வாங்க வந்த கௌண்டரிடம் வேறு ஒரு கதை கூறினார். அதற்கும் வக்கீல் கூறுவதற்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது. ஆனால் அந்த வம்பெல்லாம் நமக்கு இப்பொழுது எதற்கு?

சண்ட மாருத மய்யர் ஹைகோர்ட்டிற்கெதிரிலிருந்த ஒரிஜனல் மாடர்ன் கேப் மூன்றாவது தளத்தில் தன் சொந்த அறையையும், ஆபீஸ் அறையையும் வைத்திருந்தார். சாப்பாடு அவர் அறைக்கே வந்துவிடும். ஹைகோர்ட் இருக்கும் நேரந் தவிர மற்ற நேரங்களில் அவர் தன் விடுதியில் அதிக நேரம் தங்குவதில்லை. காலையில் அவர் தன் நண்பர் வக்கீல் வாசுதேவ ராயரைப் பார்க்கச் சென்றுவிடுவார். மாலையிலோ சினிமாவுக்குப் போகாத நாட்களில்கூட அறைக்கு வருவதற்கு எட்டு அல்லது ஒன்பது மணியாகும். தாதுலிங்கமும் மாலையில் கோர்ட் கலைந்ததும் வெளியே சற்று உலாவிவிட்டு வருவார். ஆனால் சரியாக ஆறு மணிக்கு நேரே ஆபீஸ் அறைக்கு வந்து அய்யர் வரும் வரையிலும் இருந்துவிட்டுப் பிறகு தன் விடுதிக்குச் செல்வது வழக்கம்.

அன்றும் அவர் சிறிது தூரம் கடற்கரையில் உலாவிவிட்டுச் சரியாக கைக்கடியாரத்தில் ஆறுமணி யிருக்கும் பொழுது மூன்றாவது தளத்திற்கு வந்து சேர்ந்தார். வெளிக் கதவு திறந்திருந்தது. வக்கீல் அறைக் கதவு ஒருக்களித்தாற் போல சாத்தி யிருந்தது. மின்சார விளக்கும் எரிந்துகொண் டிருந்தது. தாதுலிங்கம் மாலையில் வக்கீல் வருவதற்குப் பிறகு வருவது அன்றுதான் முதல் தடவை. அவர் மெதுவாக ஆபீஸ் அறைக்குள் நுழைந்தார். தான் வந்துவிட்டதைத் தெரிவித்துக் கொள்ள ஓர் கனைப்புக் கனைத்தார். அய்யர் கூப்பிடுவா ரென்று எதிர்பார்த்து நின்றார். ஆனால் அவர் கூப்பிடவில்லை. சிறிது தாமதித்து வந்ததற்கு மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளக் கதவை மெதுவாகத் திறந்து உள்ளே நுழைந்தார். அங்கே கண்ட காட்சி அவரை ஒரு முழம் தூக்கிப் போட்டது. வக்கீல் சண்டமாருத மய்யர் தாறுமாறாகத் தரையில் கிடந்தார். மூக்கின் வழியே ஓடிய ரத்தம் காய்ந்திருந்தது. அதனால் அவர் இறந்துபோய் இரண்டு அல்லது மூன்றுமணி நேரமிருக்கும் என முடிவுக்கு வந்தார்.

தாதுலிங்கம் நிதான புத்தியுள்ளவர். எக் காரியத்தையும் அவசரப்பட்டுத் தாறு

மாறுகச் செய்யமாட்டார். ஒரு முறை உடலை நிதானமாகப் பரிசோதனை செய்தார். உடல் பனிக் கட்டி போலக் குளிர்ந்திருந்தது. சரேலென்று கீழே பாய்ந்தார். நடு ஹாலில் இருந்த சிங் இவரைக் கண்டதும் அடக்க ஒடுக்கமாகச் சலாம் செய்தான்.

"குர்ஸிங், ஒரு விஷயம். வக்கீல் அய்யா எப்பொழுது வந்தாரென்று உனக்குத் தெரியுமா?"

"நீங்க வந்தீங்கில்லே, அதுக்குக் கொஞ்சம் முன்னுடிதான் வந்தாங்கோ"

"அய்யா வந்த பிறகு யாராவது மாடிக்குப் போனுங்களா?"

"எவரும் போகல்லீங்களே. ஏன் சாமி கேக்கரீங்கோ?"

"அய்யர் தரையில் இறந்து கிடக்கிறர்"

"செத்தா போயிட்டாங்கோ! அட பாவமே! வலி கிலி வந்திருக்குங்களா!"

"என்ன காரணம் என்று தெரியவில்லை. சீக்கிரம் கருப்பனைப் போலீஸை அழைத்து வர அனுப்பு" எனக் கூறிவிட்டு மாடிக்குச் சென்றார். தாதுலிங்கம் பிள்ளை.

சிறிது நேரத்தில் போலீஸும் வந்து சேர்ந்தது. தாதுலிங்கம் நடந்ததை ஆதியோடந்தமாகக் கூறி முடித்தார். "விஷயம் வேறு" என்று சொல்லிக்கொண்டே திறந்திருந்த பீரோவை இன்ஸ்பெக்டர் சுட்டிக் காட்டினர். பீரோமட்டு மல்ல; பெட்டி, டிராயர் எல்லாங்கூட திறக்கப்பட்டு அவைகளிலிருந்த சாமான்கள் கீழே தாறுமாறுகத் தள்ளப்பட்டிருந்தன.

"திருட்டுக்கேஸ் ஸார், அத்துடன் கொலையுங்கூட" என்றார் இன்ஸ்பெக்டர்.

தாதுலிங்கம் அதற்கு எவ்வித பதிலும் கூறவில்லை. தரையில் கிடந்த காற்றில்லாப் பையைக் கூர்ந்து கவனித்தார். அவ்விதம் கவனிக்கையில் பிணத்தினருகில் தரையில் ஒரு சாமான் மின்னிக்கொண்டிருந்தது. அதை அவர் எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு பிணத்தை மறுபடியும் கூர்ந்து கவனிக்கலானர்.

"இதோ பாரும், திருடன்தான் வந்திருக்கவேண்டும். திருட்டு நடக்கும் பொழுதே அய்யர் உள்ளே நுழைந்து திருடர்களைப் பிடித்திருக்கிறர். ஆனல் அவர்கள் கொலை செய்துவிட்டுத் தப்பியோடிவிட்டார்கள்" என்றார் இன்ஸ்பெக்டர்.

தாதுலிங்கம் ஒரு முறை சுற்றிலும் நோக்கினர். பெட்டி பீரோ எல்லாம் திறக்கப்பட் டிருந்தாலும் எதுவும் திருட்டுப் போகவில்லை. விலை யுயர்ந்த வெள்ளி சாமான்களும், தங்க கை கடிகாரமும், ரூபா நோட்டுக்களும் கீழே சிதறிக் கிடந்தன.

"ஆச்சர்யமாக இருக்கிறது! ஏன் அவர்கள் பணத்தையோ அல்லது விலை யுயர்ந்த சாமான்களையோ தொடவில்லை? ஒரு வேளை பயந்துவிட்டார்கள் போலிருக்கிறது," என்றார் இன்ஸ்பெக்டர் மறுபடியும்.

"மேல் தளத்திற்கு வர ஒரே வழிதான் இருக்கிறதா, அல்லது வேறு வழி இருக்கிறதா?" என்று கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"வேறு வழியொன்றும் இல்லீங்களே" என்றான் சிங்.

"அய்யர் அறைக்கு வந்த பிறகு வேறு யாராவது இங்கே வந்தார்களா?"

"ஒருவரும் வரலீங்களே."

இவ்விதமாகப் பல கேள்விகள் கேட்ட பிறகு பிணம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பிடரியில் பலமான குத்துப் பட்டதினல் இறந்தார் எனப் பரிசோதனை செய்த டாக்டர் கூறினர். இது போலீஸ் கேஸானதால் வெகு பலமாக நடந்தது. சண்டமாருதமய்யரின் பல நண்பர்களும், உறவினர்களும் கூண்டில் ஏறிச் சாட்சியம் கூறினர்கள். நாட்கள் பல சென்றனவேயொழிய வழக்கு முடிந்த பாடில்லை. தாதுலிங்கம் சில காலம் போலிஸ் பாதுகாப்பில் இருந்ததுதான் கண்ட பலன்.

சண்டமாருத மய்யரின் ஈமக் கடன் நிறைவேறியது. அவர் சொத்துக்களையெல்லாம் தம்பி பிள்ளை ஸ்வீகரித்துக்

கொண்டான். "மூன்றாவது தளத்தில் இரண்டு அறைகள் குடக்கூலிக்கு விடப்படும்" என்று 'கேப்' வாயிலில் அட்டை தொங்கியது. தாதுலிங்கம் மறுபடியும் எஜமானரில்லா மனிதரானர்.

ஒரு நாள் காலையில் தாதுலிங்கம் சிற்றுண்டி அருந்திவிட்டு 'ஹிந்து' பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதில் அட்வொகேட் வராக ஐயங்காரைப் பற்றிச் சில வரிகள் எழுதப்பட்டிருந்தன. தாதுலிங்கம் அவரிடம் ஒரு காலத்தில் வேலையிலிருந்தவர்தான். ஒரு சமயம் அவர் வடக்கே கல்கத்தா, பாம்பே செல்லுகையில் தாதுலிங்கத்தையும் அழைத்தார். ஆனல் பட்டினத்திற் கப்பால் மற்ற இடங்களெல்லாம் பொட்டைத் திடலென்றெண்ணும் தாதுலிங்கத்திற்கு அவருடன் செல்ல மனமில்லை. அதுதான் தாதுலிங்கம் அவரிடமிருந்து விலகியதற்குக் காரணம்.

வராக ஐயங்கார் பட்டணம் வந்து மூன்று மாதங்களாகின்றன. அதே ஒரிஜனல் மாடர்ன் கேபில்தான் அவரும் வசிக்கிருர். தாதுலிங்கம்கூட அவரை இரண்டு மூன்றுதரம் கண்டு பேசியிருக்கிருர். ஆனல் அன்று தாதுலிங்கம் பத்திரிகையில் வாசித்த விஷயமோ வேறு. மறுபடியும் வராக அய்யங்கார் வடக்கே செல்லப்போவதாக எழுதியிருந்தது. தாதுலிங்கத்திற்கு அவருடன் வடக்கே செல்ல இஷ்டமில்லாவிட்டாலும், அவரைப் பார்த்துவிட்டு வருவோமே என நினைத்துக் கொண்டு கிளம்பினர்.

தாதுலிங்கம் சென்ற சமயம் ஐயங்கார் பெட்டியில் எதையோ வைத்துக் கொண்டிருந்தார்.

"என்ன பிள்ளைவாளா, வாரும். எங்கு இப்படி அத்தி பூத்தாற் போல" என்று கூறிக்கொண்டே சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் ஐயங்கார். பிள்ளை விநயமாக ஓர் கும்பிடு போட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"ஹரித்துவாரம், ரிஷிகேசம் வரையிலும் போய்விட்டு வரலாமென்று ஏற்பாடு செய்கிறேன்" என்ருர் ஐயங்கார்.

"பத்திரிகையில் கூடப் பார்த்தேன். திரும்ப வெகு நாளாகும்!"

"ஒரு வருஷம் ஆனலும் ஆகும். அதிருக்கட்டும். நம்ப குமாஸ்தா என்னுடன் வரமாட்டார் போலிருக்கிறது. தங்களைத்தான் உதவிக்கு அழைத்துப் போகலாம் என்று யோசனை."

"ரொம்ப சந்தோஷம். இருந்தாலும் இந்த ஊரைவிட்டு நகர்வதற்கே எனக்கு விருப்பமில்லை. ஆனல் வெடு வெட்டியாய் ஊரைச் சுற்றுவதில் என்ன பயன். வேலை போனதுகூட உமக்குத் தெரிந்திருக்கலாம். அதுதான் அக் கொலைக்குப் பிறகு—"

"கேள்விப்பட்டேன். போலீசால்கூடக் கண்டு பிடிக்க முடியவில்லையே! ஆச்சரியமாகன்ன இருக்கிறது!"

"ஸப்-இன்ஸ்பெக்டர் அன்று என்னைக் கண்டபொழுது 'ஜபமொன்றும் சாயவில்லை'யெனக் கூறினர். அதனல் கேஸையே நழுவ விட்டுவிட்டாராம்." என்று கூறிக்கொண்டே தாதுலிங்கம் தன் பழைய எஜமானரின் முகத்தை நோக்கினர்.

"அப்படியா! உமக்கு ஒன்றும் துப்பு கிப்பு கிடைக்கவில்லையா?" என்று ஆச்சரியப்பட்டவர் போலக் கேட்டார் ஐயங்கார்.

இதைக் கேட்ட தாதுலிங்கம் ஒரு கனைப்புக் கனைத்தார். அக் கனைப்பு வராக ஐயங்காரைக் குலுங்க வைத்தது. அதையும் தாதுலிங்கம் கவனியாமலில்லை.

"துப்பா? கிடைக்காமலென்ன? ஆனல் அது என்னைத் தவிர வேறு எந்தப் பிராணிக்கும் தெரியாது. தெரியவும் கூடாது என நான் சித்தப்படுத்திவிட்டேன். உண்மையைக் கூறிவிடுகிறேன். அன்று பிணத்தைக் கூர்ந்து கவனிக்கையில் இது கிடந்தது" என்று கூறிக் கொண்டே உள் பையிலிருந்த பர்ஸை எடுத்து அதிலிருந்த சாமானைக் காட்டினர்.

"அதிர்ஷ்டவசந்தான் என்று கூற வேண்டும். ஏனென்ருல் இதை நான் குனிந்து எடுக்கும்பொழுது எவரும் பார்க்கவில்லை. இது தங்களுடையது

என்று பார்க்கும்பொழுதே தெரிந்துவிட்டது. விலாசம் போட்டிருக்கிறதல்லவா."

ஒரு நிமிஷம் அறையில் நிசப்தம் உலவியது. வராக ஐயங்கார் எதையோ நோக்கிக்கொண்டிருந்தார். பின்பு தாதுலிங்கத்தினருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டார்.

"பிள்ளைவாள்! என்னை உமக்கு வெகு நாட்களாகத் தெரியும். இவ்வித காரியத்தை நான் செய்வேன் என்று எண்ணுகிறீரா?"

"அடாடா, அந்த எண்ணமே எனக்கில்லை. மனத்திலும் நினைக்கலாமா!"

"நான் கொலைஞனல்லன். ஆனாலும் நான்தான் கொலை செய்தேன். கொலை நடக்குமென்று நான் எண்ணவில்லை. இப்பொழுது வருத்தப்படுகிறேன்."

இதற்குத் தாதுலிங்கம் ஒன்றும் பதில் கூறவில்லை. தன் கையிலிருந்த தங்க மோதிரத்தை அவரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கித் தன் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார்.

"அவனுக்கும் எனக்கும் எவ்விதப் பகையுமே கிடையாது. இருந்தாலும் எனக்கு என்னவோ அவனைக் கண்டால் பிடிப்பதில்லை. அயோக்கியன். நம்பிக்கைத் துரோகி. என் காரியத்திலும் குறுக்கிட்டான். பிள்ளைவாள், ஒன்று சொல்கிறேன் கேளும். என் காரியத்தில் எவன் குறுக்கிட்டாலும் அவன் கட்டாயம் 'குளோ'ஸா வான். என்ன சொல்கிறீர்?"

"அதற்கென்ன சந்தேகம்?"

"சுத்த கயவாளிப் பயல்."

"நான் அறிவேன்."

"நல்லது. இதை எவரும் அறிந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறேன்."

"ஈ. காக்காய்க்குக்கூடத் தெரியாது. என்னை இன்னும் நீங்கள் அறிந்து கொள்ளவில்லையே."

"ரொம்ப ஸந்தோஷம். இங்குதான் வேலையொன்றுமில்லையே. என்னுடன்தான் வாருமே."

"அதற்கென்ன, ஆனால் வேலையையே விட்டுவிட உத்தேசித்திருக்கிறேன். ஏதோ கொஞ்சம் சம்பாதித்த பணம் இருக்கிறது. அதைக்கொண்டு ஒரு பலசரக்குக்கடை ஆரம்பித்துவிடலாமென்று எண்ணம்"

"போதிய பணமிருக்கிறதா?"

"ஏதோ இருக்கிறது. போதாததற்கு பாங்கிலேயே கடன் வாங்க உத்தேசித்திருக்கிறேன்,"

"கடனா! எதற்கு வாங்கவேண்டும்!" எனக் கூறிக்கொண்டே ஐயங்கார் உள்ளே சென்று ஒரு கவரை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார்.

அறையைவிட்டு வெளியே வந்த தாதுலிங்கம் பிள்ளை கவரைப் பிரித்து அதிலிருந்த பாங்க் செக்கைப் பார்த்தார். வேறொருவராக இருந்தால் அதிலிருக்கும் தொகையைக் கண்டு துள்ளிக் குதித்திருப்பார். ஆனால் தாதுலிங்கம் பிள்ளையோ நிதானமாக அதை மடித்துப் பையில் போட்டுக்கொண்டு பாங்கை நோக்கி வீசி நடந்தார்.

# மோகத்தின் வேகம்

[எஸ். ஸோமாஸ்கந்தன்]

"முந்தாநாள் காலையில் புறப்பட்டுத் திருவேந்திபுரம் போனான். இன்னும் வரவில்லை. ஆனால் அவ்வூரை விட்டு நேற்றுக் காலையிலேயே புறப்பட்டுவிட்டதாகச் சமாசாரம் வந்துவிட்டது. அந்தச் சமாசாரம் கொண்டு வந்த மனிதன் நேற்றிரவு எட்டு மணிக்கே வந்துவிட்டான். இவனை யிதுவரையிற் காணோம். காரணமென்ன வென்று தெரியவில்லை. தவிர, இனி நாம் என்ன செய்வ தென்கிற யோசனையும் பலமாய் விட்டது. ஆட்களையும் அனுப்பி யிருக்கிறேன்"—என்றார் சிவப்பிரகாச முதலியார் தம் நண்பர் ஒருவரிடம். குழப்பமும் தடுமாற்றமும் அவர் மனத்தில் குடிகொண் டிருப்பதை அவர் முகம் நன்றாய் எடுத்துக்காட்டியது.

"ஒரு வேளை சற்று நேரம் பொறுத்து வரக்கூடு மல்லவா?"—என்றார் முதலியாரின் அருகிலிருந்த நண்பர்.

"அப்படி யெண்ண இடமில்லையே! நேற்றுப் புறப்பட்டவனல்லவா அவன்? நேற்றிரவே வந்திருக்க வேண்டுமே! அதுதான் தப்பிப் போய் விட்டது. இன்று காலையில் இந் நேரம் வரையில் வராதது பற்றிப் பல பல யோசனைகள் தோன்றுகின்றன. வழியில் ஏதேனும் ஆபத்து நேர்ந்ததோ வென்று சந்தேகமுண்டாகிறது. என்ன அவமானம்! இருந்திருந்து நான் ஒரு பெண்ணுக்கு விவாகம் செய்யப் போய் அது இப்படியா முடிய வேண்டும்?"—என்று கூறிச் சிவப்பிரகாச முதலியார் பெரு மூச்சு விட்டுத் தலை குனிந்தார். அவரது உடைந்த மனத்தில் சிதைந்த எண்ணங்கள் பல தோன்றி அவரைச் சோர்வடையச் செய்தன.

* * *

சந்திரபுரம் என்பது ஒரு சிறிய கிராமமாதலால் அவ்வூரில் சிவப்பிரகாச முதலியாரின் புத்திரியின் விவாகத்தைப் பற்றிப் பேசாதவரில்லை. முதலியார் வீட்டு வாசலில் அழகாகப் பந்தல் போடப்பட்டு வாழை மரங்கள் கட்டப்பட் டிருந்தன. பந்து மித்திரர்க ளெல்லாம் வந்து கல்யாண வீட்டில் கூடி யிருந்தனர்.

முகூர்த்தம் எட்டு மணிக்கு வைக்கப்பட்டிருந்தது. மணி ஒன்பது ஆகியும் மணமகனாகிய கருணாகரன் வரவில்லையென்றால் பெண்ணின் தகப்பனாகிய சிவப்பிரகாச முதலியாருக்குத் தடுமாற்றமும் குழப்பமும் உண்டாகாம லிருக்குமா?

கல்யாண வீட்டில் மணமகனைப்பற்றிய பேச்சே எங்கும் நிறைந்திருந்தது. மூலைக்கு மூலை பெண்க ளெல்லாம் கூடிக் 'குசு, குசு'வென்று பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது மணப் பெண்ணாகிய சுந்தரவல்லியின் மனம் அனலிடை மெழுகென உருகியது. அழகில் ரதியைப் பழிக்கும் அந்தப் பூங்கொடியின் முகம் அழுது அழுது வாடிப் போயிருந்தது. வில்லையொத்த அவள் புருவங்கள் அடிக்கடி துள்ளி நிமிர்ந்து அவள் மனத்தில் வீசும் துக்க அலைகளை மிகவும் பரிதாபகரமாகக் காட்டின.

புதுப்புடவை உடுத்துக் கொண்டு, மணக்கோலமாக ஜகன்மோகன ரூபத்துடன் விளங்கும் சுந்தரவல்லி ஸந்தோஷமாக இருக்க வேண்டிய இந்த வேளையில் ஆழங்காண முடியாத துயரக் கடலில் மூழ்கி யிருந்தாள். நேற்றைய தினம் காலையில் சுந்தரவல்லி கட்டுக்கடங்கா மகிழ்ச்சியுடன் உல்லாஸமாக இருந்தாள். தன் மனதுக்குகந்த காதலனாகிய கருணாகரனையே மணக்கப் போகிறோம் என்பதை நினைக்கும் பொழுது அவளுக்கு ஸந்தோஷம் உண்டாகாதா? இன்று காலை முகூர்த்த வேளை தவறியும் மணமகனாகிய கருணாகரன் வரவில்லை யென்றால் சுந்தரவல்லியின் மனம் எவ்வளவு பாடுபடும்?

* * *

பச்சை மரமும் பட்டுப் போகும்படியாகக் காய்கிறது கடும் வெயில். 'சலசல' வென்னும் சப்தத்துடன் கோமதியாற்றில் ஜலம் தெளிந்து ஓடிக் கொண்டிருக்கிறது. ஆற்றங்கரையின்மேல் ஒரு சிங்காரத் தோட்டம். அந்தத் தோட்டத்தில் காற்று 'ஜில்' என்று வீசி வெயிலின் கடுமையைப் போக்கி மனத்துக்கு ஸந்தோஷத்தைக் கொடுத்தது. சிங்காரத் தோட்டத்தில் ஒரு மாமரத்தடியில் இரண்டு வாலிபர்கள் ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

இந்தச் சிங்காரத் தோட்டத்தை யொட்டினாற்போல் ஓர் ஒற்றையடிப் பாதை வளைந்து வளைந்து சென்றது. அந்த ஒற்றையடிப் பாதையில், வனப்பு மிகுந்து வனதேவதையைப் போல் விளங்கும் பதினாறு வயது நிறைந்த ஒரு யுவதி வெகு வேகமாக ஆற்றை நோக்கி வந்து கொண்டிருந்தாள். இந்த வனிதை முப்பதடி தூரத்தில் வரும்பொழுதே இந்த இரண்டு வாலிபர்களும் அவளைப் பார்த்து விட்டனர்.

"அடே கருணாகரா, பாரடா அங்கே!" அந்தப் பெண் எங்கே அவ்வளவு வேகமாகப் போகிறாள்? இவள் சிவப்பிரகாச முதலியார் பெண் சுந்தரவல்லி தானே?"— என்றான் பாலசுந்தரம்.

அந்த யுவதியின் அழகைக் கண்களால் பருகியபடி மெய்ம்மறந்திருந்த கருணாகரன் பாலசுந்தரத்தின் பக்கம் திரும்பி— "ஆமாம். அது இருக்கட்டும். தலைவெடிக்கும்படியான இந்தக் கடும் வெயிலில் தனியே இவள் எங்கே செல்கிறாள்? முகத்தைப் பார்த்தால் மிகவும் வருத்தத்துடன் இருப்பதாகத் தெரிகிறது"—என்றான். இதற்குள் சுந்தரவல்லி யென்ற அந்த நங்கை இவர்களிருக்கு மிடத்தை நெருங்கி விட்டாளாதலால் கருணாகரன் பேச்சை நிறுத்தி விட்டான்.

சுந்தரவல்லி நாலா பக்கமும் திரும்பித் திரும்பி மான்போல் மருண்ட தன் பார்வையைச் செலுத்தினாள். ஆயினும் கருணாகரனும் பாலசுந்தரமும் அமர்ந்திருந்த அந்த இடத்தைச் செடி கொடிகள் சூழ்ந்து மறைத்துக்கொண் டிருந்தபடியால் அவள் அவர்களைப் பார்க்கவில்லை. அவள் வெகு வேகமாகச் சென்று ஆற்றங்கரைப் படிக்கட்டை யடைந்தாள்.

ஒரு மங்கை ஒரு வாலிபனைத் தனித்த இடத்தில் சந்திக்க நேரிடின் அவள் மனம் மாறுதலடையாமலிராது. அதுபோலவே வாலிப னொருவன் ஒரு மங்கையைத் தனித்த இடத்தில் சந்தித்தால் அவன் மனமும் மாறுதலடையாமலிராது. இது சகஜம். அப்படிப்பட்ட சமயங்களில் மனத்தை யடக்கி யாளவல்லவன் ஆயிரத்தி லொருவ னிருப்பதும் முயற் கொம்பே யாகும். கருணாகரனும் பாலசுந்தரமும் ஆற்றை நோக்கிச் சென்ற சுந்தரவல்லியின்மீது கண்ணைச் செலுத்தியவாறு மனத்தையும் செலுத்தினார்கள். இதையவர்கள் அறியாமலில்லை. ஆனால் வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளவில்லை. அப்படிப் பேசிக்கொள்ள வொட்டாமல் அவர்களைத் தடுத்தது வெட்கம் என்னும் காவலாளி தான்.

## [2]

"தெய்வமே, என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் இந் நாள் வரையில் எந்த வரனையும் ஏதேனும் ஒரு குறை கூறித் தள்ளிக்கொண்டே வந்து இப்போது வரன் சரியாக அகப்படாமற் போகவே என்னை, எனக்குச் சிறிதும் சம்மதமில்லாத என் அத்தை மகனுக்குக் கொடுக்க நிச்சயித்திருப்பது நீ யறிந்த விஷயமே! ஆபத்பாந்தவா, இவனா எனக்குத் தகுந்த நாயகன்? அந்த ஹநுமந்தஸ்வரூபியினுடைய முகத்தை என்னுடைய இந்த விழிகளா ஏறிட்டுப் பார்க்கும்? அநாத ரக்ஷகா! உன் எண்ணம் இதுவோ? அல்லது என் விதி செய்யும் சதியோ இது? எப்படியாயினும் சரி! உன்னையே நம்பியிருக்கும் இந்த ஏழையை நீயே காக்க வேண்டும்!"—என்று கூறிச் சுற்று முற்றும் பார்த்து "ஆ" என்று கதறி ஆற்றில் விழுந்தாள் நங்கை!

கருணாகரனும் பாலசுந்தரமும் இந்தப் படித்துறைக்குச் சுமார் இருபத்தைந்தடி தூரத்தில் இருக்கிறார்கள். அவள் ஆற்

றில் விழுந்த சத்தம் கேட்டதும் இருவரும் திடுக்கிட்டுப் படித்துறைக்கு ஓடி வந்தார்கள். வனிதை முழுகி முழுகி யெழுந்திருக்கிருள். ஒரு கண நேரம் இருவரும் பிரமித்து நின்றனர். கருணுகரன் நீந்துவதில் சமர்த்தனுகையால் கரை புரண்டோடும் ஆற்று வெள்ளத்துக்கு அஞ்சாமல் சரேலெனக் குதித்தான்.

பாலசுந்தரம் நீந்தத் தெரியாதவனுகையால் கரையில் நின்று கொண்டு விழித்தான். ஒரு விநாடிக்குள் கருணுகரன் அடர்த்தியாயிருக்கும் அவள் கூந்தலைப் பிடித்து வெளியே கொண்டுவந்து கரை யேற்றினன். அவள் விழுந்து இரண்டு முழுக்கே முழுகி யிருந்தாளாதலால் சிறிதும் நீர் அருந்தவில்லை. கருணுகரனும் பாலசுந்தரமும் சுந்தரவல்லியைச் சிங்கா ரத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றனர். சுந்தரவல்லி களை தெளிந்து தன் சேலையைப் பிழிந்து ஒரு பக்கத்தை யுடுத்துக் கொண்டு மறு பக்கத்தையும் அவ்வாறே யுடுத்துக் கொண்டாள்.

"சுந்தரவல்லி, நீ இந்த வேளையில் ஆற்றுக்குக்கு ஏன் வந்தாய்? வெயிலின் கொடுமை சகிக்க முடியாமலிருக்கிறதே! ஆற்றில் தவறி விழுந்து விட்டாயோ?"-என்று கருணுகரன் அன்பு ததும்பக் கேட்டான்.

"ஆம், தவறி விழுந்து விட்டேன். இப்பொழுது திடீரென்று தீட்டுப்பட்டு விட்டேன். அதற்கு முழுகி விட்டுப் போக வந்தேன். நான் போய் வருகிறேன். நேரமாகிறது"—என்று கூறி அவள் கருணுகரனைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவன் ஹிருதய ஆழத்துக்குச் சென்று தொட்டது. குறு குறுப்பான அவள் விழிகளிரண்டும் ஒரு விநாடிக்குள் எவ்வளவோ சமாசாரங்கள் பேசி விட்டன.

"விழுந்த ஓசையைக் கவனித்ததில் தவறிவிழுந்தது போற் காணப்பட வில்லையே!"—என்றுன் கருணுகரன்.

இல்லை.........! இரண்டு மூன்று படிகளுக் கப்பாலிருக்கும் பொழுதே தவறி விழுந்து விட்டேன்........." என்று தழுதழுத்த குரலில் சுந்தரவல்லி பதில் கூறியதில் அவள் தற்கொலை செய்து கொள்ள முயன்றதை மறைத்துப் பேசியது நன்றுய் விளங்கியது.

உண்மையை விசாரித்து அந்த வனிதைக்கு வருத்தம் கொடுக்கக் கருணுகரன் விரும்பவில்லை.

"நீங்கள் எனக்கு உயிர்ப்பிச்சை தந்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக!"—என்று கூறிச் சுந்தரவல்லி அங்கிருந்து புறப்பட்டாள்.

* * *

பாலசுந்தரத்தின் மனத்தில் பொருமைக் கனல் கொழுந்துவிட்டுப் படர்ந் தெரிய வாரம்பித்தது. சுந்தரவல்லி கருணுகரனை நேசிக்கிருள் என்பதுதான் அதற்குக் காரணம். கருணுகரனும் பாலசுந்தரமும் சிறு வயது முதல் இணை பிரியா நண்பர்கள். இது வரையில் அவர்களுக்குள் சிறு மனஸ்தாபமும் ஏற்பட்டதில்லை. இப்பொழுது சுந்தரவல்லியினுல் அவர்களுக்குள் ஒரு பிளவு ஏற்பட்டுவிட்டது. ஆனல் கருணுகரன் இதை அறியவில்லை; களங்கமற்ற மனத்துடன் எப்பொழுதும் போல் பாலசுந்தரத்துடன் பழகினன்.

பொருமைக்கு மனதில் இடங்கொடுத்து விட்டால் அது செல்லரிப்பதுபோல் மனிதனை அரித்துத் தின்றுவிடும். அதுவும் பாலசுந்தரம் கருணுகரனிடம் கொண்டது காதற் பொருமை. காதலில் பொருமை ஏற்பட்டுவிட்டால் அது செய்யும் விபரீதங்க ளனந்தம்.

இருபத்திரண்டு வயது வாலிபனுகிய கருணுகரன் முகத்தில் வாலிபத்தின் ஜீவ களை ததும்பி நின்றது. அவன் கம்பீரமாக அழகு பெற்று விளங்கினன். கருணுகரன் கலாசாலையில் உயர்தரப் படிப்புப் படித்துத் தேறியவன். பாலசுந்தரத்துக்குப் படிப்பு ஏறவில்லை. படிப்பை நிறுத்தி விட்டுப் பிதுரார்ஜிதமாக இருந்த நிலத்தில் பயிர்த் தொழில் செய்துவந்தான். கருணுகரனுக்கும் பாலசுந்தரத்துக்கும் தாய் தந்தையரில்லை. பீ. ஏ. பாஸ் செய்த கருணுகரன் வேலையில்லையே யென்று

வருந்தவில்லை. ஏனெனில் அவனுக்கும் அன்ன வஸ்திரத்துக்குக் குறைவற்ற பூஸ்திதி இருந்தது; விவசாயத்தைக் கவனித்து வந்தான். கருணாகரனையும் பாலசுந்தரத்தையும் அந்யோந்ய நட்புக்கு உதாரணமாகக் கூறி அவ் வூரார் மகிழ்வர்.

* * *

புவனகிரி

என் அன்பே,

"நான் என் விவாகத்துக்காகப் பணம் சேகரித்துக் கொண்டு திரும்புகையில் என்னைத் திருடர்கள் வழியில் மடக்கிக் கொண்டு பணத்தைப் பிடுங்கிக்கொண்டது மல்லாமல் என் குடுமியையும் கத்தரித்துக் கொண்டு ஓடிவிட்டனர். இந்தக் கோலத்தோடு மணம் செய்துகொள்ளப் பிரியமில்லை. இந்த விவரத்தை நீ உன் தந்தைக்குத் தெரிவித்துவிடு. நீ இதைக் குறித்து வருந்தாதே. இது ஈசன் செயல். உன் தந்தை என்னை மன்னிப்பாரென நம்புகிறேன்."

உன் அன்புள்ள
கருணாகரன்.

இக் கடிதத்தைப் படித்ததும் சுந்தரவல்லி மெய்ம்மறந்து நின்றுவிட்டாள். அவளுக்குச் செய்வதின்னதென்று தோன்றவில்லை. சுந்தரவல்லியின் விவாகம் ஏற்படுத்தப்பட்டிருந்த தினத்துக்கு அடுத்த நாள்தான் இக் கடிதம் வந்தது. சுந்தரவல்லி இக்கடிதத்தைத் தன் தந்தையினிடம் கொடுத்தாள். சிவப் பிரகாச முதலியார் இக்கடிதத்தைப் பார்த்ததும் மிகவும் வருந்தினர். அவருக்கு உறவினர்களிடமும் நண்பர்களிடமும் அவமானம் ஏற்பட்டு விட்டதல்லவா? மணமகனாகிய கருணாகரன் திருடர்களிடம் அடிபட்ட விஷயம் அவர் மனத்தில் பெரிய வேதனையை உண்டுபண்ணியது.

[3]

"சுந்தரவல்லி, நீ எங்கே என் கல்யாணத்துக்கு வராமலிருந்து விடப் போகிறாயோ என்று நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்து விட்டாய்"—என்று சுந்தரவல்லியின் மாமன் மகளாகிய கனகவல்லி கூறினாள்.

"நான் வராமலிருப்பேனா? உன்னைப் பார்த்து வெகு நாட்கள் ஆகிவிட்டனவல்லவா? கல்யாணத்தைச் சாக்கிட்டு வந்தால் தானே வரமுடிகிறது?"

"சுந்தரவல்லி, அது இருக்கட்டும். நீ, யாரோ கருணாகரனும் அவனையே விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று பிடிவாதமா யிருக்கிறாயாமே?"

"கனகம், என்ன நீ யிந்தக் கேள்வி தெரியாத்தனமாகக் கேட்கிறாய்? ஸ்திரீகளுக்குப் புருஷனையல்லாமல் யாரிருந்தென்ன? வேஷ்டியுடுத்தவனும் மீசை முளைத்தவனுமாகத் தெருவில் எத்தனையோ பேர் போகிறார்கள். அவர்களெல்லோரும் புருஷனாய் விடுவார்களா? புருஷலக்ஷணம் என்பது வேறல்லவா? கம்பீரமான தோற்றம், அழகிய பார்வை, தைரியம், வீரம், அறிவு, கல்வி, இரக்கம் முதலிய உத்தம குணங்களமைந்தவனல்லவா புருஷன்? அத்தகைய உயர்ந்த குணங்களமையப் பெற்றவர் கருணாகரன். அவரிடம் என்னை யறியாமலே என் மனம் சென்று லயித்து விட்டது. ஆற்றில் விழுந்து உயிர் துறக்கவிருந்த என்னை ஆற்றில் குதித்து நீந்திக் கரை சேர்த்துக் காப்பாற்றினர் அவர். அன்று முதல் என் மனம் அவரை மறக்க மாட்டேனென்கிறது—" என்றாள் சுந்தரவல்லி.

* * *

திருடர்களிடம் பணத்தைப் பறிகொடுத்ததுமல்லாமல் குடுமியும் அறுபட்டு மனமுடைந்த நிலையில் விரக்தியடைந்திருக்கும் கருணாகரன் புவனகிரி தாலுகா ஆபீஸில் இப்பொழுது குமாஸ்தா வேலை பார்த்து வருகிறான். தாங்க முடியாத இந்த அவமானத்துடன் தன் சொந்த ஊராகிய சந்திரபுரம் போகக் கருணாகரனுக்கு விருப்பம் இல்லை. வேலையிலீடுபட்டிருக்கும் அவன் மனம் சுந்தரவல்லியை மறந்து விடவில்லை. இருந்த போதிலும் அவன் மனம் இப்பொழுது விவாகத்தை வெறுக்கத் தலைப்பட்டது. முதலெடுப்

பிலேயே அவமானம் ஏற்பட்டு விட்டதல்லவா?

சுந்தரவல்லியும் கனகமும் பேசிக்கொண்டிருந்த இடம் வீட்டுப் பின்புறத் தோட்டம். அது தெருவுக்குச் சமீபமாயிருப்பதால் தெருவில் போகிறவர்களுக்கு ஸம்பாஷணை நன்ருய்க் கேட்கும். கருணாகரன் இந்தத் தெருவழியாகத்தான் ஆபீஸுக்குப் போவான். வழக்கம்போல் ஆபீஸுக்குப் போன கருணாகரன் செவியில் சுந்தரவல்லியும் கனகமும் பேசியது விழுந்து அவன் நடையைக் கொஞ்சம் கட்டுப்படுத்தியது. இப்பொழுது அவன் மனம் பாலைவனம்போல் வறண்டு கிடந்தது. பேச்சு தன்னைப் பற்றியதாக இருக்கவே கருணாகரன் அங்கேயே நின்று கூர்ந்து கவனித்தான். அந்த ஸம்பாஷணை அவன் வறண்ட மனத்தின் இருண்ட தன்மையைப் போக்கி ஓர் ஒளியைக் கொடுத்தது. சுந்தரவல்லி தன் மீது கொண்டிருக்கும் அன்பை இன்று தான் கருணாகரன் நன்ருய் அறிந்தான். இப்பொழுது அவன் மனம் தாமரை யிலை மேல் நீர் தத்தளிப்பதுபோல் தத்தளித்தது. சுந்தரவல்லி புவனகிரிக்கு வந்திருப்பது கருணாகரனுக்குத் தெரியாது. இப்பொழுது அவள்பேசியதைக் கேட்டு யாவும் தெரிந்துகொண்டான்.

* * *

புவனகிரி

"என் ஆருயிர் நண்ப,

நீயும் நானும் கொண்டிருந்த நட்பைப் பற்றி நான் இங்கு எழுதவேண்டியதில்லை. நான் என் ஆருயிர் நண்பனுகிய உனக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டேன். சுந்தரவல்லிக்கும் உனக்கும் நடக்க விருந்த விவாகத்தைத் தடுத்தவன் நான்தான். திருடர்களைத் தூண்டி உன் கையி லிருந்த ரூபா ஐந்நூறையும் பிடுங்கச் செய்ததும் நான்தான்! நீ உன் குடுமி யறுபட்டுத் தாங்க முடியாத அவமானத்துக்காளானதற்கும் காரணம் நான்தான். என்னை இந்தத் தீயசெயல்களைச் செய்யும்படி தூண்டியது சுந்தரவல்லியினிடம் நான் கொண்ட மோகத்தின் வேகம் தான்!

என் நெஞ்சம் நான் செய்த அக்ரமங்களுக்காக இப்பொழுது தூண்டிற் புழுவைப்போல் துடிக்கிறது. நண்பா, என்னை நீ மன்னிப்பாயா? நேரில் உன்னிடம் வந்து மன்னிப்புக் கேட்க மனந் துணியவில்லை! ஆப்த நண்பனை உனக்குத் தீங்கு செய்த நான் மகா பாவி! நீ மன்னித்தால் தான் என் ஆத்மா சாந்தி யடையும்! கருணாகரா, நான் செய்த-இந்த மன்னிக்க முடியாத—மகா பாதகமான செயலுக்கு நானே எனக்குத் தண்டனை விதித்துக் கொள்ளத் தீர்மானித்துக்கொண்டு விட்டேன். இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும் நேரமும் என் ஆத்மா பிரியும் நேரமும் ஒன்ருக யிருக்கும். புவனகிரி ஆற்று வெள்ளத்தோடு கலந்துவிடும் என் சரீரம்! நீ என்னை மன்னித்துவிட்டுச் சுந்தரவல்லியை மணந்துகொண்டு இன்பமாயிரு. என் நிலங்களையும் நீயே கவனித்துக்கொள்! நான் போகிறேன்.

மனப் பூர்வமான உன் மன்னிப்பை நாடும்,

உன் நண்பன்
பாலசுந்தரம்"

இந்தக் கடிதத்தைப் படித்ததும் கருணாகரன் தன்னையே நம்பவில்லை. அவனுக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்தான். ஆம். பாலசுந்தரத்தின் கையெழுத்துத்தான். சந்தேகமில்லை. உடனே வாயு வேகமாகப் புவனகிரியாற்றை நோக்கி ஓடினான் கருணாகரன். அவனைப் பார்த்தால் பித்துப் பிடித்தவனைப் போலிருந்தது.

ஆகா! என்னென்று கூறுவது அக்காட்சியை! பெருந்திரளான ஜனங்கள் ஆற்றங்கரையில்! கையும் காலும் கயிற்றினுல் கட்டப்பட்டு ஆற்றில் மிதந்து வந்தது இருபத்தைந்து வயதுள்ள ஒரு வாலிபனின் பிரேதம்! இதைக்கண்ட கருணாகரன் பிரமை பிடித்தவன் போல் ஒன்றுந் தோன்ருமல் நின்று விட்டான். பால சுந்தரத்தின் பிரேதம் கருணாகரனைப் பார்க்க வருவது போல் ஆற்றங் கரையோரமாக வந்து ஒதுங்கியது. கருணா

கரன் உடனே பிரேதத்தைக் கரை சேர்த்தான். பழைய காட்சிகளெல்லாம் வெகு துரிதமாக அவன் மனதில் சினிமாக் காட்சியைப் போல் சென்றன. ஆம்! அப்பிரேதத்தின் முகத்தில் மோகத்தின் வேகம் தெரிந்தது.

*   *   *

பிறகு கருணாகரன் சந்திர புரத்துக்குச் சென்றான். சிவப்பிரகாச முதலியார் சுந்தரவல்லியை அவள் மனதுக் கொத்த காதலனாகிய கருணாகரனுக்கே மணம் செய்வித்தார். கருணாகரன் வேலைக்கு ராஜிநாமா கொடுத்து விட்டுத் தன் நிலங்களைக் கவனித்து வரலானான். சுந்தரவல்லியும் கருணாகரனும் கிராம புனருத்தாரணத்தி லீடுபட்டு உழைக்கலானார்கள். கோமதி யாற்றங்கரையிலிருந்த சிங்காரத் தோட்டத்தில் சுந்தரவல்லியும் கருணாகரனும் உட்கார்ந்து உல்லாஸமாகப் பேசும் பொழுதெல்லாம் பாலசுந்தரத்தின் மோகத்தின் வேகம் தான் தங்கள் ஸந்தோஷத்துக்குக் காரணமென்று நினைக்காம லிருப்பதில்லை.

---

"எவனொருவன் உலகத்தாருடன் வாழ்ந்துகொண்டே உலக இச்சைக்கு ஆளாகாமல் வெளிக்கு எல்லாவற்றிற்கும் ஈடுபடுபவன்போ லிருந்து உள்ளத்தில் துறவை அநுசரிக்கிறானோ அவன்தான் உண்மைத் துறவி."

ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்ஸர்.

"கோடிக்கணக்கான மக்கள் இந்தியாவில் பட்டினி கிடக்கின்றனர்; அறியாமையில் கிடந்து உழலுகின்றனர்; ஸந்தோஷம், சௌக்யம் முதலியன எதுவுமின்றிச் சாரமற்ற வாழ்க்கையை நடத்துகின்றனர். இதற்குக் காரணம் நம் நாட்டின் அடிமைத்தனம்தான்."

ஜி. சுப்ரமண்ய ஐயர்.


இன்ஷ்யூர் செய்யுங்கள்!

# ஜூபிடர் ஜெனரல்

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:

ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

**பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:

**ஒன்றரைக்கோடி ரூபாய்**

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:

**99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.**

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# சாப விமோசனம்

[எச். வைத்யநாதன்]

ஆறுவது வகுப்பில் கணபதி ஐயர், கரும்பலகையில் எழுதப் போகும்போது ஒரு மூலையிலிருந்து "வாத்தியார் கழுத்தைப் பாருடா, ஒட்டைச் சிவிங்கியின் கழுத்துமாதிரி இருக்கு" என்று ஓர் குரல் கிளம்பிற்று. உடனே அதை ஆமோதிப்பதுபோல் கொல்லென்ற சிரிப்பு வகுப்பு முழுவதும் பரவிற்று. கணபதி ஐயர் கண்களில் தீப்பொறி பறக்கத் திரும்பிப் பார்த்தார். உடனே வகுப்பு முழுவதும் நிச்சப்தம் நிலவியது. ஒரு தடவை அவ்வகுப்பிலுள்ள ஐம்பது மாணவர்களையும் ஏற இறங்கப் பார்த்து விட்டு, "யாரடா அவன் அப்படிச் சொன்னது?" என்று ஒரு அதட்டல் போட்டார். பதில் இல்லை. "சொல்லுகிறீர்களா இல்லையா? பிரம்பினால் எல்லோரையும் வாங்கி விடுவேன்" என்று இரண்டாவது அதட்டலையும் போட்டார். உடனே எல்லா மாணவர்களது விழிகளும் மிரண்டு மிரண்டு அவ்வகுப்பில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த ரகுநாதனை நோக்கின. இனிமேல் சந்தேகமென்ன! கணபதி ஐயருடைய அடி வயிற்றிலிருந்து "ரகு! எழுந்திரு" என்று கிளம்பியது.

இச்சப்தத்திலேயே ரகுநாதன் பதறிப் போய் விட்டான். உடனே கணபதி ஐயர் ஒன்றும் யோசிக்காமல் பிரம்பை எடுத்து ரகுவின் கையில் நான்கு அடிகளும் முதுகில் நான்கு அடிகளும் கொடுத்தார். அவர் ரகுவை அடித்த அடி அவ்வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனது ஹிருதயத்திலும் போய்த் தாக்கிற்று. ரகுவை அடிக்கும் போது வகுப்பில் 'ஸ், ஸ்' என்று அநுதாப ஒலி கிளம்பியது. இந்த ஒலியைக் கேட்டும்கூட கணபதி ஐயர் அடிப்பதை நிறுத்தவில்லை. சுடச்சுட எட்டு அடி கொடுத்துவிட்டு "போக்கிரிப் பயல்" என்று கூறி ரகுவை ஏற இறங்கப்பார்த்து விட்டு நாற்காலியில் அமர்ந்தார். உடனே எல்லா மாணவர்களுடைய கண்களும் ரகுவினிடமிருந்து கணபதி ஐயர் பக்கம் திரும்பின. "அட பாவி மனுஷா! ஒரு வார்த்தைக்காகவா இவ்வளவு அடி? நெஞ்சில் கொஞ்சம்கூட கருணை இல்லையா?" என்று கேட்பதுபோலிருந்தன அப்போது எல்லாப் பையன்களுடைய கண்களும். ரகு தன் கண்ணீரினாலும், அடிபட்ட கையை ஊதுவதினாலும் தனது அளவு கடந்த வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு, கணபதி ஐயரைப் பரிதாபமாகப் பார்த்தான். அப்பார்வையும், அவனது கண்ணிலிருந்து பெருகிய நீரும் கணபதி ஐயரது கோபக் கனலை அவிக்க ஆரம்பித்தன.

இதற்குள் வகுப்பு முடிந்தது. உடனே நிச்சப்தமாக இருந்த ஆறுவது வகுப்பு மாணவர்கள் பேரிரைச்சலுடன் புஸ்தகப் பையைத் தூக்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தனர். அக்கூட்டத்துடன் ரகுவும், சோகத்தால் சிவந்த தன் முகத்தைத் துடைத்துக்கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்த கணபதி ஐயரை மற்றுமொரு முறை பரிதாபகரமாகப் பார்த்துவிட்டுச் சென்றான். இப்பார்வை கணபதி ஐயரது எஞ்சிய கோபத் தீயையும் அவித்தது. உடனே தன்னை யறியாமலேயே "ரகு, ரகு" என்று இரண்டு தடவை கூப்பிட்டார். ஆனால் ரகு திரும்பிப் பாராமலே போய் விட்டான். கணபதி ஐயரும் உடைந்த ஹிருதயத்துடன் வீடு நோக்கிச் சென்றார். வீட்டு வாசற்படி ஏறியதும் "அப்பா!" என்று கூப்பிடுக் கொண்டே அவரது செல்வப் புதல்வன் காலை வந்து பிடித்தான்.

## 2

கணபதி ஐயர் ஓர் ஸெகண்டரி ஸ்கூல் தமிழ் உபாத்தியாயர். மிகவும் நல்ல மனிதர். கருணை நிறைந்த உள்ளம்; சாந்த

மான ஸ்வபாவம்; கர்வமற்ற ஒழுக்கம்; மொத்தத்தில் அவர் கருணை மூர்த்தியாகவே விளங்கினார். அவருக்கு ஓர் ஆண் குழந்தை, நான்கு வயதிருக்கும். தங்க விக்ரஹம் போன்ற மனைவி; குணங்களிலும் அவருக்குப் பின்னடைந்தவள் அல்லள். அடிக்கடி இவர்களுக்கு நற்புத்தி புகட்ட கணபதி ஐயரின் தாயார் இருந்தாள். இவ்வளவு ஆட்களையுடைய கணபதி ஐயரின் சிறு குடும்பம் ஒரு கவலையுமில்லாமல் வாழ்ந்து வந்தது.

கணபதி ஐயர் ஒவ்வொரு தினமும் பள்ளிக்கூடம் போகும்போது தன் தாயாரிடம் சென்று "அம்மா! பள்ளிக்கூடம் போய் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே போவார் அப்போது அவர் தாயார் "அப்பா! போய் வா. குழந்தைகளை அடிக்காதே. அக் குழந்தைகளின் அன்புதான் நம் குடும்பத்தையும், செல்லத்தையும்—அது தான் கணபதி ஐயர் புத்திரன் பெயர்—கவலையில்லாமல் வாழ்விக்கும். ஆகையால் குழந்தைகளை அடிக்காதே" என்று சொல்வாள். கணபதி ஐயர் சிரித்துக் கொண்டே அம்மொழிகளை ஹிருதயத்தில் தாரணம் செய்து கொண்டு போவார்.

ரகுவை அடித்த அன்று கணபதி ஐயர் வீட்டிற்கு வந்ததும் பித்துப் பிடித்தவர் போல் ஆய்விட்டார். "அடடா! எவ்வளவு நாட்கள் தாயார் குழந்தைகளை அடிக்காதே என்று நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறாள்? அவை எல்லாம் இன்று எங்கேயோ சென்று விட்டனவே! பாவம் சிறிய பையன். விளையாட்டாகச் சொல்லி விட்டான். அதற்கு எவ்வளவு கோபத்துடன் எத்தனை அடிகள் அடித்தேன்? குழந்தைகளின் அன்புதான் நம்மைக் கடைசிவரை உய்விக்கும் என்று அன்னை கூறுவாளே! அவை எல்லாவற்றையும் இன்று மறந்து விட்டேனே! அது போகிறது. ஒரு வேளை நான் அடித்த அடி முதுகில் தடித்திருக்குமோ? அத்தடிப்பைக் கண்ட ரகுவின் தாயார் உள்ளம் என்ன பாடுபடும்? நான் இப்போதே ரகுவின் தாயிடமும் தந்தையிடமும் சென்று மன்னிப்பு கேட்டுக் கொள்ளட்டுமா?" இவ்வித சிந்தனை அலைகள் கணபதி ஐயரது உள்ளக் கடலுள் மோத ஆரம்பித்தன.

இச் சமயத்தில் செல்லம் மெல்லக் குறு நடையாக நடந்து வந்து மழலை மொழியில் "அப்பா! பீச்சுக்குக் கூட்டிக் கொண்டு போ" என்று கூறிக் காலைக் கட்டிக் கொண்டான். உடனே கணபதி ஐயர் எல்லாவற்றையும் மறந்து விட்டுக் குழந்தையின் கன்னத்தில் அன்பு முத்திரையை இட்டுத் தூக்கிக் கொண்டு பீச்சுக்குப் போனார்.

## 3

தினந்தோறும் கணபதி ஐயர் அதிகாலையில் எழுந்திருந்து ஸ்நாநம் செய்து காப்பி சாப்பிட்டுவிட்டு டியூஷனுக்குப் போவது வழக்கம். அவர் வெளியிற் சென்ற இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அவரது செல்வக் குழந்தை எழுந்திருப்பான். உடனே அவன் தாயார் அவனது தேகத்தை நன்றாகத் துடைத்து, அலங்கரித்து "அப்பா வருகிறாரா பார். சாப்பிடலாம்" என்பாள். இதற்குள் மணி ஒன்பது ஆய்விடும். கணபதி ஐயரும் டியூஷனிலிருந்து திரும்பி வருவார். வந்ததும் குழந்தையோடுகூட உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போவார். இவ்விதம் நாள் தவறாமல் நடக்கும்.

ரகுவை அடித்த தினத்திற்கு மறுநாள் காலை, கணபதி ஐயர் டியூஷனுக்குப் போய்விட்டுச் சரியாக ஒன்பது மணிக்கு வீடுவந்து சேர்ந்தார். அப்போது வழக்கம் போல் குழந்தை செல்லம் அவரை எதிர்கொண்டழைக்கவில்லை. அதனால் அவர் "செல்லம்" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார். அச்சமயத்தில் அவருடைய தாயார் "அப்பா! குழந்தைக்கு நல்ல ஜுரம் அடிக்கிறது. கண்ணை முழிக்கல்லை! டாக்டரை அழைச்சுண்டுவா" என்று கூறினாள். இதைக் கேட்டதும் கணபதி ஐயர் ஸ்தம்பித்து விட்டார். ஐந்து நிமிஷங்களுக்கு அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மறுபடியும் அவர் தாயார் "என்னடா! நிக்

கறே? சீக்கிரமாய்ப் போய் டாக்டரைக் கூட்டிக் கொண்டுவா" என்று சொன்னாள்.

உடனே கணபதி ஐயர் டாக்டர் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார். போகும் வழியில் "சரிதான். தாயார் கூறியது சரியாய் விட்டது போலிருக்கிறது. ரகுவை நேற்று அடித்தேன். அதற்கு இன்று கடவுள் என்னைத் தண்டிக்க நினைத்திருக்கிறார் போலிருக்கிறது. ஐயோ! நேற்று ரகுவை எவ்வளவு ஓங்கி அடித்தேன்! அப்போது அவன் மிகவும் வருந்தி என்னைச் சபித்து விட்டான் போலிருக்கிறது. குழந்தைகள் தெய்வத்திற்குச் சமானம் என்று சொல்வார்களே. அதனால் ரகுவின் சாபம் பலித்து விட்டதோ? இனி நான் எவ்விதம் ரகுவின் அன்பைப் பெறுவேன்?" என்று பலவாறு சிந்தித்துக் கொண்டே டாக்டர் வீட்டையடைந்து அவரை அழைத்துக் கொண்டு போனார். டாக்டர் செல்லத்தைப் பார்த்தார். அப்போது கணபதி ஐயரும் அவரது தாயாரும், "என்ன! எப்படி இருக்கிறது?" என்று கேட்டனர். அதற்கு டாக்டர் "ஒன்றுமில்லை. ஜல தோஷத்தினால் ஏற்பட்ட ஜ்வரம். ஒன்றும் செய்யாது. நாலைந்துநாட்களில் சரியாய்விடும்" என்றார்.

"இன்னும் ஐந்தாறு நாட்கள் ஆகுமா?" என்று கேட்டனர் இருவரும்.

"ஆம். ஐந்து நாட்களுக்குள் குணப்படுத்திவிடுகிறேன். கவலைப் படாதீர்கள்" என்று தைரியம் கூறிவிட்டுச் சென்றார் டாக்டர். கணபதி ஐயர் குழந்தையைப் பார்த்தார். ஆனால் அவருக்கு அப் படுக்கையில் தன் அருமைக் குழந்தை செல்லம் இருப்பதாகத் தோன்றவில்லை. ரகுவே வந்து படுத்துக்கொண்டு தன்னை, கையைக் காட்டி பயமுறுத்துவதாகத் தோன்றியது. உடனே "அப்பா! ரகு!" என்று கூறிக் கீழே உட்கார்ந்து விட்டார்.

## 4

நாலைந்து நாட்களும் சென்றன. செல்லத்திற்கு உடம்பு சரியாகவில்லை. கணபதி ஐயரின் தாயாரும் மனைவியும் அழ ஆரம்பித்தனர். அச் சமயத்தில் கணபதி ஐயர் தன் துக்கத்தை வெளியே காட்டாமல் கண்ணில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு தன் அறையில் போய் உட்கார்ந்து பின்வருமாறு யோசித்தார். "சந்தேகமே யில்லை. இது, ரகுவினுடையவும், அவனை அடித்ததால் திகிலடைந்த மற்றப் பிள்ளைகளுடையவும் சாபந்தான். இச் சாபத்திலிருந்து நாம் விடுதலையடைவதற்கு அக் குழந்தைகள் ரூபமான தெய்வமே கதி. எந்தத் தெய்வம் சாபத்தையளித்ததோ அந்தத் தெய்வமே அதற்கு விமோசனத்தையும் கொடுக்கும். இந்த விமோசனம் அக் குழந்தைகளின் அன்பினாலேயே ஏற்படவேண்டும். அந்த அன்பை இன்றே பெறவேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டு அன்னையிடம் வந்தார்.

"அம்மா! நான் இன்று பள்ளிக்கூடம் போகிறேன்."

"ஏன்? குழந்தை இப்படி யிருக்கும் போது பள்ளிக்கூடம் போகவேண்டாம். ஐந்து நாட்கள்தான் லீவு எடுத்தாயே, இன்னும் ஒரு வாரம் லீவு எடுத்துக் கொள்."

"அப்படிச் சொல்லாதே. இக் குழந்தையின் நன்மைக்காகவேதான் பள்ளிக்கூடம் போகிறேன்.

"உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?"

"ஆம்" என்று கூறிவிட்டுச் சட்டையைப் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டார் கணபதி ஐயர். அன்று வழக்கம்போல் அவர் தாயார் புத்திமதி கூறவில்லை. அவரும் அதை எதிர்பார்க்கவில்லை.

வீட்டை விட்டுப் புறப்பட்ட கணபதி ஐயர் நேராகக் கடைக்குச் சென்று ஐந்து பவுண்டு பிஸ்கத்தும் சாக்லெட்டும் வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடம் சென்றார்.

மணி அடிக்கப்பட்டுப் பள்ளிக்கூடம் ஆரம்பமாகிவிட்டது. முதல் 'பீரியட்'டில் அவர் எட்டாவது வகுப்பில் உட்கார்ந்திருந்தாரே தவிர உள்ளம் முழுவதும் ஆறும் வகுப்பிலேயே இருந்தது. இரண்டு, மூன்று, 'பீரியட்'களும் கழிந்தன. நான்

காவது பீரியட் ஆரம்பத்தில் கணபதி ஐயர் ஆறும் வகுப்பில் நுழையும்போது அவரது உள்ளக்கனிவு கண்கள் மூலமாக வெளியே வர அதைத் துடைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தார். ரகுவை அடித்த மறு நாளிலிருந்தே ஐந்து நாட்களாகப் பள்ளிக்கூடத்திற்கு வர வில்லை கணபதி ஐயர். ஆகையால் இன்று கணபதி ஐயரைக் கண்டதும் மாணவர்கள் அன்று நடந்த விஷயத்தை நினைத்துக் கொண்டு மௌனமாக அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

கணபதி ஐயர், ரகு உட்பட்ட எல்லா மாணவர்களையும் அன்பு கனியப் பார்த்து விட்டு சாக்லட்டையும் பிஸ்கத்தையும் எடுத்தார். எல்லா மாணவர்களும் அப் பொட்டலத்தையே உற்றுப் பார்க்க ஆரம் பித்தனர். அப்போது கணபதி ஐயர் "குழந்தைகளே! இன்று என் செல்லத் திற்குப் பிறந்த நாள். அதற்காக உங்களுக் குப் பிஸ்கத்தும் சாக்லெட்டும் வாங்கி வந் திருக்கிறேன்" என்று கூறிவிட்டுப் பொட் டலத்தைப் பிரித்து ஒவ்வொரு மாணவ னுக்கும் பிஸ்கத்தும் சாக்லெட்டும் கொடுத் துக்கொண்டே வந்தார். அப்போது ரகு விற்கு மட்டும் மற்ற மாணவர்களைவிட இரண்டு பங்கு மிகுதியாகக் கிடைத்தது என்று சொல்ல வேண்டியதில்லை.

பிஸ்கத்தையும் சாக்லெட்டையும் பெற் றுக்கொண்ட எல்லா மாணவர்களுடைய முகங்களும் மலர்ந்தன. அதிலிருந்து அவர்களிடமிருந்த திகைப்பும் உள்ளக் கலவரமும் நீங்கி, அவர்களுடைய நிர்மல மான ஹிருதயத்தில் அன்பு ஊற்று பெருக ஆரம்பித்துவிட்டது என்பது நன்கு விளங்கியது. இச் சமயத்தில் ஒரு பையன் தன் அருகிலுள்ள பையனிடம் "நம்ம வாத்தியார் ரொம்ப நல்லவர்டா, சாக்லெட்டெல்லாம் வாங்கித் தருகிறார்," என்று சொன்னான். இவ் வார்த்தை கண பதி ஐயர் காதில் விழுந்து அவர் உள்ளத் தைக் குளிர்வித்தது. அப் பையன் கூறிய வார்த்தை ரகு உள்பட அங்குள்ள ஒவ் வொரு மாணவனது உள்ளத்திலும் இருக் கத்தானே வேண்டும்? அன்பு விஷயத்தில் எல்லாக் குழந்தைகளின் உள்ளமும் ஒன்று தானே? இதை நினைத்து நினைத்து கண பதி ஐயர் அகமகிழ்ந்தார்.

இதற்குள் நான்காவது பீரியடும் முடிந் தது. எல்லாப் பையன்களும் வீட்டுக்கு உற்சாகத்துடன் செல்லும்போது ஒவ் வொரு ஆறும் வகுப்பு மாணவனும் "தமிழ் வாத்தியார் சாக்லெட் கொடுத் தார்" என்று உரக்க உற்சாகத்துடன் கூறினான். அதைக்கேட்ட கணபதி ஐயர் தனக்குள் "இக் குழந்தைகளின் ஹிருதயத்தில் இன்று என் விஷயமாக ஊறிய அன்பாகிய அமிர்தம் என் செல் லத்தின் நோயை ஒரு கணத்தில் நீக்கி விடும்." என்று கூறிக்கொண்டே வீட்டிற் குச் சென்று தன் குழந்தையின் முகத் தைப் பார்த்தார். அன்று ஆறும் வகுப்பு மாணவர்களின் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சி, செல்லத்தின் முகத்திலும் பிரதி பலித்தது. அதைக் கண்ட கணபதி ஐயர் அகமகிழ்ந்தார். அம் மகிழ்ச்சியை ஆமோ திப்பதுபோல் செல்லமும் தன் முத்துப் போன்ற பற்களைக் காட்டிச் சிரித்தான்.

---

"எந்த அறிவினால் மனம் சுத்தமடை கிறதோ அதுதான் உண்மை அறிவு. புத்தகத்தினால் அடையும் வெறும் அறிவு, ஆத்ம சுத்தியையும் ஹிருதய சுத்தியை யும் தராது. கேள்வி ஞானம்தான் இவை களைத் தரவல்லது."

ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்ஸர்.

"தாயையும் தந்தையையும் கடவுளின் பிரதிநிதிகளாக நினைக்கவேண்டும். மாதா பிதாக்களுக்குச் செய்யும் சுச்ருஷை தெய்வ சுச்ருஷைக்கும் மேலானதாகும்."

ஸ்வாமி விவேகானந்தர்.

# கவலை

[பி. எல். ரங்கநாதன், எம். ஏ.]

விடியற்காலம் எனது ஜப்பான் கடியாரம் இன்ப நாதத்துடன் மணி அடித்தது. அதைக் கேட்டுப் பொறாமை கொண்டு பக்கத்து வீட்டுக் கடியாரம் 'கிர், கிர்' என்று ஐந்தடித்தது. சற்று தூரத்திலுள்ள பார்த்தசாரதி கோயில் மணியும் ஒன்று, இரண்டு என்று மணி ஐந்தென்று தன் ஒலியைப் பரப்பியது. இன்னும் கறவைப் பசு மாடுகள் தங்கள் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளை ஆட்டி மணி ஐந்தென்பதை ஊர்ஜிதப் படுத்தின.

ஆனால் எனக்கு இந்த மணிகளின் ஓசை வேண்டியதில்லை. சுபாவத்திலேயே நான் விழித்துக் கொண்டால் மணி ஐந்தென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். எனது ஜப்பான் கடியாரம் சாவி இல்லாமல் நின்று போனாலும் போகலாம். பக்கத்து வீட்டு மணி கேட்காமல் போனாலும் போகலாம். கோவில் மணி அடிக்கும் வேலையாள் உறங்கினாலும் உறங்கி விடலாம். கறவைப் பசுக்களின் மணி முத்துக்கள் ஆடாமலு மிருக்கலாம். நான் சோம்பல் முறித்துக் கண்ணை விழித்துக்கொண்டால் விடியற்காலம் மணி ஐந்தென்பதற்கு ஐயமே யில்லை.

இன்னும் என்னைவிட நிச்சயமாய்க் காலை மணி ஐந்தைச் சொல்லுவாள் என் மனைவி. அவள் பின் தூங்கி முன்னெழுந்து, கீழேசென்று காப்பிக் கெட்டிலில் குழாய்ஜலம் நிரப்புவதும், கொழுந்து விட்டெரியும் குமிட்டித் தணலில் அக் கெட்டிலை அழுத்தி வைக்கும் சப்தமும் கொஞ்சங்கூட மயிரிழை தப்பாமல் விடியற்காலம் ஐந்து மணியைக் காட்டும்.

விடியற்காலம் மணி ஐந்து. கீழே என் மனைவி 'காப்பி' தயார் செய்து கொண்டிருந்தாள். இன்னும் அரைமணி நேரம் என் படுக்கையில் அங்கு மிங்கும் புரளலாம். அதன் பிறகு கீழிறங்கிப் பல் விளக்கிக் காப்பி அருந்த வேண்டும்.

மணி ஐந்தரை. சரேலென்று சுருட்டி மடக்கி எழுந்து தடதட வென்று மாடிப் படி இறங்கி வந்தேன். பாதிப் படிகள் தாண்டியவுடன் சற்றுத் தாமதித்து உள்ளே கவனித்தேன்.

சமையலறையில் என் மனைவி பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவளது வைரத் தோடும், வைர பேசரியும் மின்சார ஒளியை உள்ளே வாங்கி, வெளியில் அழகுறச் சிதறி எறிந்தன. அவள் கருங்கூந்தல் நாகரிகமாய்க் கட்டப்பட்டிருந்தது. முகத்தில் ஒரு வசீகரப் புன்னகை. இடுப்பில் ரிப்பன் கரைப்புடவை. உடலில் புடவைக் கேற்ற 'பைப்பிங்' வைத்த ரவிக்கை. இரண்டு அல்லது மூன்று நிமிஷம் அவ்விடமே நின்று அவளைப் பார்த்தேன். அடிக்கடி அவளது மையுண்ட கண்கள் அவள் முன் விட்டிருக்கும் பாலகன் மேல் தாவியது.

செறிந்தகாட்டின் ஊடேயுள்ள குகையிலிருந்து தோன்றும் சிங்கம்போட்ட ஜப்பான் பாய். அதன் மேல் துல்லிய வஸ்திரத்தில் தங்கப் பதுமை போன்ற இளங்குழந்தை. தன்சொந்தப் பாஷையில் பேசியபடி கையையும், காலையும் உதைத்துக் கொண்டு பூரித்து விளையாடிக் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் 'செல்லுலாய்ட்' பொம்மைகள், ஜப்பான் கிலுகிலுப்பைகள், இன்னும் மற்ற விளையாட்டுச் சாமான்கள் சிதறிக் கிடந்தன.

என் குழந்தையையும், மனைவியையும் மாறி மாறி நோக்கிய வண்ணமா யிருந்தேன். என் உள்ளத்தில் ஒரு பூரிப்பு, ஒரு பேரின்பம். அந்த இரண்டு மூன்று நிமிஷத்தில் இவ்வுலகம் பேரின்ப வீடாய் விளங்கியது. என் மனத்தில் அன்பும், ஆசையும், இன்பமும் பொங்கி வழிந்தன.

'ஏன், அங்கிருந்து என்ன வேடிக்கை! இன்னும் நாழியாகலையா? காப்பி தயா

ராகி விட்டது' என்று சொன்னாள் என் மனைவி.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவளுக்குத் தெரியாமல் அவளைப் பார்த்துக்கொண் டிருக்கிறோம் என்று நான் நினைத்தேன். எப்படியோ நான் ஒளிந்து பார்ப்பதை அறிந்துவிட்டாள். என் மனைவியை ஏமாற்ற முடியாது.

'இதோ, வந்துட்டேன்' என்று ஓட்டம் பிடித்தேன். ஐந்து நிமிஷத்திற் கெல்லாம் அவளருகில் வந்து 'காப்பிக்குத் தயார்' என்றேன்.

மூக்கு வைத்த வெள்ளிப்பட்டை 'டம்ளரில்' பொன்னிறக் காப்பியை எனக்குக் கொடுத்தாள்.

'அப்பாடா! என்ன சுகம்! ஒரு முழுங்கு போதும். மனத்திற்கு மிகவும் சாந்தியாய் இருக்கிறது. ஏது இன்னிக்கு இப்படி முதல்தரமா யிருக்கிறது?'

'நம்மாத்தில் எப்பொழுதுதான் இரண்டாம் தரமாய் இருந்தது? நரசுக் காப்பிக் கடை 'பீபரி' பவுடரின் மணம் கேட்கவேணுமா? மேலும் கள்ளிச் சொட்டாட்டமுள்ள பால். நல்ல பாலும், காப்பிக்கொட்டையும், சர்க்கரையும் இருந்து விட்டால் காப்பிக்கு என்ன கேடு?'

'இல்லை, அதில் ஏதோ இன்னும் ஒன்று கலக்கிறாய் ?!

'என்ன! ஒன்றும் கலப்பதில்லையே'

'இல்லையா ?, உன்னுடைய அன்பையும் பிழிந்து தருவதில்லையா ?'

'போதும், உங்களுக்கு என்ன வேலை? எப்பொழுதும் ஸ்தோத்திரம்தான்'

'அதெல்லாம் சரி, இன்றைக்கு எத்தனை—' என்று கேள்வியை முடிக்கு முன், நான் என்ன கேட்கப்போகிறேன் என்று தெரிந்துகொண்டாள் என் மனைவி.

ஒரே நிமிஷம் நான் அவள் முகத்தைப் பார்த்தேன். அழகிய அவள் முக மண்டலம் மேகத்தின் சாயை பட்டது போலாயிற்று. அவள் மனத்தில் மேன்மேலும் எழும் எண்ணங்களை நான் நன்கு அறிவேன். அதே நிமிஷத்தில் அவள் என்னை உற்று நோக்கினாள். என் மன வேதனையை அவள் கண்கள் துருவி ஆராய்ந்தன. சரேலென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது அவள் வதனத்தில்.

'உங்களுக்கு என்ன வேலை? என் வீணாய் மனத்தைப் புண்ணாக்கிக் கொள்ளுகிறீர்கள்? ஒன்றும் கவலைப்பட வேண்டாம்' என்று புன்சிரிப்புப் பூத்த முகத்தை என் பக்கம் திருப்பினாள்.

ஆனால் எனக்கு மன அமைதி ஏற்படவில்லை. 'இதோ பாருங்களேன், உங்களைப் பார்த்துச் சிரிக்கிறது' என்றாள் குழந்தையைத் தன் கையில் ஏந்தி.

என் இன்பமெல்லாம் எங்கேயோ போயிற்று. 'உர்' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டேன். பெருமூச் செறிந்தேன்.

'இதோ, உங்களிடம் தாவி வருகிறது. எடுத்துக்கொள்ளுங்கள்' என்று என் கையில் குழந்தையைக் கொடுத்தாள்.

வாரி, முத்தம் கொடுத்தேன்.

மறுபடியும் என் கவலையை ஒரு கணம் மறந்தேன். எனது வாழ்க்கை சரியாகச் சுருதி மீட்டிய வீணையை ஒத்திருந்தது. ஆனால் அவ் வீணையினின்று எழும் நாதம் சற்றுத் தாறுமாறாய் இருக்கலாம். அவ் வீணையையும் சற்றுத் தாறுமாறாய் வாசிக்க நேரிடலாம்.

'அதெல்லாம் சரி! இன்னைக்கு என்ன இருபத்தேழு நாளா ?' என்று மறுபடியும் அதே கேள்வியைப் பிரஸ்தாபித்தேன்.

'இப்பொழுதுதான் குழந்தைக்கு ஒரு வயது நிறைந்து ஒரு மாதம் ஆகிறது. அதற்குள் வயிற்றில் வந்துவிட்டால்? மேலும், அப்பாடா, போனதரம் என்ன கஷ்டம்! அதை நினைத்தாலே உடம்பு நடுங்குகிறது. பலதரம் யமலோகத்தை எட்டிப் பார்த்துத் திரும்பினேன்' என்று அவள் கண்களில் நீர் பெருகச் சங்கடப்பட்டாள்.

நான்கு, ஐந்து கண்ணீர்த்துளிகள் கீழே விழுந்து தரையில் உலர்ந்தன.

அவள் அழுவதைப் பார்த்ததும் என் வேதனை பதின் மடங்கு அதிகரித்தது.

இருந்தாலும் மனத்தைத் தேற்றிக்கொண்டேன்.

'சை, இந்தச் சிறு விஷயங்களுக்கா கண்ணீர் விடுகிறது? தைரியமாய் இருக்கப்படாதா?' என்று அவளுக்குத் தைரியம் கூறினேன்.

ஆனல் எனக்கு மட்டும் அமைதி ஏற்படவில்லை. இருந்தாலும் சற்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டேன். என் கலவரத்தை என் மனைவி உணர்ந்தாள்.

'என்னவோ இரண்டு நாள் தள்ளிப் போகிறதாக்கும். இதற்கு ஏன் இவ்வளவு கலவரப்படுகிறீர்கள். அப்படித்தான் இருந்தால் என்ன?' என்று தாழ்ந்த, மெல்லிய குரலில் என்னைத் திரும்பத் தைரியப்படுத்தினுள் என் மனைவி.

'சரி, 'மார்க்கட்டில்' ஏதேனும் வேணுமோ? சமையலுக்கு ஏதாகிலும் வாங்கி வருகிறேன்' என்று நான் புறப்பட்டேன். என் மனைவியும் தன் அலுவலில் ஈடுபட்டாள்.

ஆனல் 'மார்க்கட்டிலும்' என் மன வேதனை என்னை விட்டு அகலவில்லை. என் சிநேகிதர்களைக் கண்டு பேசினேன். அவர்கள் அறிவார்களா என் கலவரத்தை? உலகில் பத்து அல்லது பன்னிரண்டு குழந்தைகள் பெற்ற பெண் மணிகள் இல்லையா? எவ்வளவு திடசாலியாகவும், கொஞ்சங்கூட அழகு அழியாமலும் இருக்கிறார்கள்! நமக்கு வாய்த்தது ஒரு நோஞ்சல் பெண். ஏதோ முகத்தின் லட்சணத்தையும், தந்த நிறத்தையும் கண்டு மயங்கிப் போனேன். மேலும் அவள் பிரஸவத்தின்போது படுத்திருந்த படுக்கையை நினைத்தால், அப்பாடா, போதும், போதும் இக் குடும்ப வாழ்க்கை யென்று தோன்றிவிட்டது. மறுபடியும் அவள் அத் துன்பத்திற்கு இலக்கானல்?

வீடு திரும்பினேன். கதவைத் தட்டினேன். உடனே கதவு திறக்கப்படவில்லை. ஒரு வேளை—என்று யோசிப்பதற்குள் என் மனைவி ஓடி வந்து 'புழக்கடை பக்கமிருந்தேன்' என்று கதவைத் திறந்தாள்.

அவளைக் குறிப்பாய்க் கவனித்தேன். அவளும் என்னை யுற்று நோக்கினள். இருவரும் வாய் திறவாமலே எங்கள் மன வேதனையை ஊகித்துக்கொண்டோம்.

சாயங்காலம் கொஞ்சம் கடற்கரை யோரம் உலாவச் செல்லலாம் என்று என் மனைவியை அழைத்தேன். 'நீங்கள் போய் வாருங்கள் எனக்கு அடுப்பில் வேலையிருக்கிறது' என்றாள் அவள்.

'சரி' என்று புறப்பட்டேன்.

'வரபோது' என்று ஆரம்பித்தாள்.

'வரபோது என்ன வேணும்?'

'இரண்டு 'பில்ஸ்' வாங்கிண்டு வாருங்கோ'

'சரி'

வெளியில் உலாவிவிட்டு வந்தேன். ஆனல் என் மன வேதனை என்னை விட்டபாடில்லை. சந்தோஷமா யுள்ளவர்களைக் கண்டால், நமக்கும் சந்தோஷம் ஏற்படுமென்று நினைத்தேன். ஆனல் என் ஆழமான வேதனை அதிகரித்ததே யொழிய, அமைதி ஏற்படவில்லை. என்னை மட்டும் கடவுள் இப்படிப் படைப்பானேன் என்று என் மனத்தைப் புண்படுத்திக்கொண்டேன்.

இரவு பத்து மணி. எனது தனியான அறையில் தூக்கம் பிடிக்காமல் வேதனையை விழுங்கிக்கொண் டிருந்தேன்.

எனது மனைவியின் அறையில் மின்சார வெளிச்சம் பெருக் கெடுத்திருந்தது. அவள் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு மேஜையின் மேலுள்ள நிலக் கண்ணாடியில் தன் அழகைப் பரிசோதித்துக்கொண் டிருந்தாள். அப்பொழுது அவள் தந்தத்தில் கடைந்தெடுத்த பதுமைபோல் விளங்கினள். வைரத் தோடுகளும், தனிச் சோபையோடு மின்னும் மூக்குப் பொட்டும், முத்தும், தங்க ஒட்டியாணமும் அவள் எழிலைப் பன்முறை பெருக்கின.

என் அறையின் கதவுச் சந்திலிருந்து அவள் என்ன செய்கிறாள் என்று உற்று நோக்கினேன். நடுவே நடுவே பெருமூச் செறிந்தேன். மற்ற நாட்களில் வேடிக்கையாய் இருவரும் ஸல்லாபிப்போம். இன்று என் அவளிடம் கசப்பு? அவளுக்குத்தான்

என்ன மன வேதனை? ஒவ்வொரு நாளும் அன்பு பெருகப் பெருக நாம் என் இருக்கக் கூடாது? சிறு விஷயங்கள், துரும்பென்று தள்ளக்கூடிய குப்பைச் சமாசாரங்கள் இன்ப வாழ்க்கையைக் கைக்கச் செய்கின்றன.

மேஜை 'டிராயரை' த் திறந்தாள் என் மனைவி. நான் உற்றுக் கவனித்தேன். ஒரு சின்னஞ் சிறிய சிகப்பு டப்பாவை எடுத்தாள். அதைத் திறந்து சில மாத்திரைகளைத் தன் உள்ளங்கையில் போட்டுக் கொண்டாள். மேஜையின் மேல் ஒரு 'கிளாஸ் டம்ளரில்' தண்ணீர் வைத்திருந்தது. உள்ளங்கையிலுள்ள மாத்திரைகளை வாயிடம் கொண்டு போனாள். கண்ணை மூடிக் கொண்டாள். அச்சமயத்தில் பிரம்புத் தொட்டிலில் மெய்ம்மறந்து தூங்கும் குழந்தை வீறிட்டுக் கத்திற்று. சரேலென்று மாத்திரைகளை டப்பாவில் போட்டு மேஜை மேல் எறிந்து விட்டு, குழந்தையைத் தாலாட்டினாள். அவனும் உடனே உறங்கி விட்டான்.

மறுபடியும் மாத்திரைகளை எடுத்துக் கொண்டு, உள்ளங்கையில் போட்டுக் கொண்டாள். 'இந்த மாத்திரைகளா எனக்கு உதவப்போகிறது. ஏ, பகவானே நீ தான் காப்பாத்த வேண்டும். எதற்கும் இந்தச் சனியனைப் போட்டுக் கொள்ளுகிறேன்' என்று கண்ணை இறுக மூடினாள். அம்மாத்திரைகளை வாயில் போட்டுக் கொண்டு, சரேலென்று 'கிளாஸ்' தண்ணீரை வாயில் ஊற்றிக் கொண்டாள். 'ஐயோ, என்ன கசப்பு! வயிற்றை என்னமா சங்கடப்படுத்துகிறது! ஏ ஈசா!' என்று புலம்பினாள். உடனே 'கிளிக்' என்று விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் அயர்ந்தாள்.

எனக்குச் சற்றேனும் தூக்கம் வரவில்லை. அங்கு மிங்கும் புரண்டு கொண்டிருந்தேன். அரைகுறைத் தூக்கம்; அசட்டுப் பிசட்டென்ற கனவு. "நானும் என் மனைவியும் ஒரு ரிக்ஷாவில் போய்க் கோஷா ஆஸ்பத்திரியில் இறங்குகிறோம். மணி அடிக்கிறது. அங்கிருந்த லேடி டாக்டர் என் மனைவியைப் பரிவுடன் பார்த்துச் சோதிக்கிறாள். என் மனைவி நகைகளைக் கழற்றி என்னிடம் கொடுக்கிறாள். குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அன்பு ததும்ப என்னை நோக்கிச் சொல்லிவிட்டு, பிரஸவ அறைக்குச் செல்லுகிறாள். நான் ஆஸ்பத்திரிக்கு வெளியிலே ஏதோ குற்றஞ் செய்தவன் போல் தயங்குகிறேன். 'குவா, குவா' என்று பிறந்த குழந்தையின் கூச்சல் என்காதைத் துளைத்தது. 'ஏன், இவ்வளவு சீக்கிரமாகப் பிரசவித்து விட்டாளா?' என்று யோசித்தேன்"

தொட்டிலில் கிடந்த குழந்தை அழுதது.

'என்ன தூக்கம் இது — பத்து நிமிஷமா குழந்தை கத்தி விரைச்சுப் போகிறதே. எடுத்துக் கொள்ளுங்கள்' என்று என் மனைவி உரத்துக் கூவுவது என் செவியில் விழுந்தது.

'நீ தான் எடுத்துக்கோ. என்னைத் தொந்தரவு பண்ணாதே' என்று பாதி விழித்துக் கொண்டு பதில் சொன்னேன்.

'நான் அங்கே வரத்துக்கு இல்லை' என்றாள் என் மனைவி.

# தமிழும் ஆங்கிலமும்

[புரசு பாலகிருஷ்ணன். எம். பி. பி. எஸ்]

ஆங்கில பாஷைப் பயிற்சி இந்தியாவில் எவ்விதம் புகுந்தது என்ற விஷயத்தை இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். "ஆராய்ந்து பார்க்கவேண்டியது என்ன? ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள்; அவர்களுடன் அவர்களுடைய பாஷையும் வந்தது. அவர்கள் ஒரு சாம்ராஜ்யத்தை இங்கு ஸ்தாபித்தனர்; அத்துடன் அவர்களுடைய பாஷை அரசியல் பாஷையாய் விளங்கலாயிற்று," என்று சொல்வீர்கள். ஆமாம்; நீங்கள் சொல்லுவது முற்றிலும் வாஸ்தவமே. ஆனால் இந்தச் சூசனையைக் காட்டிலும் உண்மை வரலாறு மிகவும் ஸ்வாரஸ்யமானது. அதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

கி. பி. 1835 வருஷம் மார்ச்சு மாதம் 7-ம் தேதி யன்றுதான் ஆங்கிலம் இந்தியாவில் கல்விக்குரிய பாஷையாகச் செய்யப்பட்டது. சாஸனத்தை விளம்பியவர் அக்காலத்தில் கவர்னர் ஜெனரலா யிருந்த பென்டிங் பிரபு. இந்த ஏற்பாட்டிற்கு மூல கர்த்தாவாக இருந்தவர் மெகாலே பிரபு. மெகாலே ஓர் ஆங்கில இலக்கியப் பேராசிரியர். அவர் நம் பாஷைகளின் மீதும் நம் நாகரிகத்தின்மீதும் அவதூறுகளைச் சுமத்தி, இங்கிலீஷ் பாஷையை இந்தியாவில் புகுத்தினர். அதனால் பல நன்மைகளும் பல தீமைகளும் உண்டாயின; அவைகளைப்பற்றிப் பேச இது சந்தர்ப்பமில்லை. ஆனால் அவர், தமக்குத் தெரியாத விஷயங்களிலும் தம்மை ஸர்வக்ஞனைக மதிப்பிட்டுக்கொண்டு, காரியத்தை நடத்தி வைத்தார். தம்முடைய அறிவீனத்தால் அவர் ஒரு மகத்தான இந்திய சமூகத்தை மூடமாக்கினர். அதை அநாகரிகம் என்றுதான் சொல்லவேண்டும்.

அக் காலத்தில் ஜன சிக்ஷைக்கென்று ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஜன சிக்ஷை என்றால்—எல்லாப் பாமர ஜனங்களுக்கும் படிப்பு வசதி அளிப்பது என்ற கருத்துடன் இல்லை. சாம்ராஜ்யத்தை நடத்தி வைப்பதற்கு ஆட்கள் தேவையா யிருந்தனர். சிலருக்குச் சிக்ஷை அளித்தால், அவர்கள் மூலம் சிக்ஷை தேசம் முழுவதும் பரவிவிடும் என்ற நோக்கமே யாகும். அந்தக் கமிட்டியில் பத்துப் பெயர்கள் இருந்தனர். அவர்களுக்குள் ஒரு பெரிய பிரச்னை. "தேச பாஷைகள் மூலம் சிக்ஷை அளிக்கவேண்டும்; அதன் பொருட்டு மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதமும் பாரசீயமும் கற்க வசதிகள் ஏற்படுத்தவேண்டும்" என்று ஐவர் கூறினர். மெகாலே உள்பட மற்ற ஐவர் ஆங்கிலத்தின் மூலம் ஐரோப்பிய நாகரிகத்தை இந்தியாவில் பரவச் செய்ய வேண்டும் என்று சாதித்தனர். 1835-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 2-ம் தேதி மெகாலே அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பு விடுவித்தார். படிக்கப் படிக்க ஆச்சரியம் விளைக்கும் குறிப்பு அது:

"விஷயம் சிக்கலானதில்லை; மிகவும் சுலபமே. நாம் நமது பாஷையை அவர்களுக்குக் கற்பிக்கக் கூடும். அதை விட்டுவிட்டு, புஸ்தக மணமே யில்லாத அவர்களுடைய பாஷைகளைக் கற்றுக் கொடுப்பதா? நம் சாஸ்திரங்கள் முற்றிலும் உண்மையானவை; அவர்களுடையதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லுவதற்கு இடமில்லை. நம் கொள்கைகள், சரித்திரங்கள் எல்லாம் முதல்தரமானவை; அவர்களது கதைகளெல்லாம் பொய்க் கதைகள்: சாஸ்திரமாம் சாஸ்திரம்! அவர்களுடைய வான சாஸ்திரிகள் நம் பள்ளிக்கூடச் சிறுமிகளின் நகைப்பிற்கு இடமாவார்கள்! அவர்களுடைய வைத்திய நிபுணர்கள் நம் குடியானவர்களிலும் கேடு கெட்டவர்கள்! அவர்களுடைய சரித்திரக்காரர்கள் முப்பது அடி உயரமுள்ள அரசர்களையும் முப்பது ஆயிரம்

வருஷங்கள் நீடித்திருந்த ஆட்சிகளையும் பற்றிக் கட்டுக் கதை கூறுபவர்கள்! அவர்களுக்குத் தெரிந்த பூகோளம்—பாற்கடல்களையும் அமிர்த வெண்ணெயையும் வர்ணிக்கும் சாஸ்திரம்! இவற்றையா நாம் பணம் செலவழித்துச் சிக்ஷை என்று பரப்புவது?" *

மெகாலே பாஷையைக் கையாளுவதில் அதி சமர்த்தர். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று விளக்கும்படியாக அவர் வார்த்தைகளை அடுக்கடுக்காய்ச் சேர்த்து, சமுத்திர அலைகள்போல் ஒன்றன்பின் ஒன்று ஒலிக்கும் வாக்கியங்களை அமைக்கக் கூடியவர். இலக்கியத்தில் மேதாவி என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவர். ஆகவே அவர் சேர்ந்த கட்சி வெற்றி அடைந்தது. 1835-ம் வருஷம் மார்ச்சு மாதம் 7-ம் தேதி, அக் காலத்தில் கவர்னர் ஜெனரலாயிருந்த வில்லியம் பென்டிங் பிரபு, "இந்திய ஜனங்களிடையே ஐரோப்பிய சாஸ்திரங்களையும் இலக்கியங்களையும் பரப்புவதே எமது அரசாங்கத்தின் கொள்கையாகும்" என்ற அறிக்கையை வெளிப்படுத்தினர். மெகாலே ஜன சிக்ஷைக் கமிட்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

மேற்படி கொள்கைக்கு முக்கிய காரணமாயிருந்த மெகாலே, அக் கொள்கையை அமுலுக்குக்கொண்டுவந்த வில்லியம் பென்டிங் பிரபு ஆகிய இவர்களின் மனப்போக்குகளை இங்கு விளக்குவது அசந்தர்ப்பமாயிராது. விஸ்தீரணத்தில் அகண்டமாய், தங்களுக்குச் சற்றும் புரியாத பாஷைகள் வழங்கும் இந்தியாவின் மத்தியில் ஆங்காங்கு வெறும் வியாபாரிகளாய் இருந்தனர் ஆங்கிலேயர்கள். விஷயம் தெரிந்த எச். எச். வில்ஸன் முதலியவர்கள் கமிட்டியில் இக் கொள்கையை எதிர்த்தனர். ஆனால் சாதாரண ஆங்கிலேயர்களோ இங்கு அன்னியர்களின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டதனால், அவர்கள் மீது வெறுப்புக்கொண்டனர். இந்த 20-ம் நூற்றாண்டில் ரட்யார்டு கிப்லிங் (Rudyard kipling) என்ற ஆங்கில ஆசிரியர் செய்த விஷமத்தை, சென்ற 19-ம் நூற்றாண்டில் மெகாலே செய்தார்.

இந்தியா வேதாந்தத்தில் மாத்திரமில்லை, இலக்கியம், சித்திரம், சிற்பம் முதலிய கலைகளில் மாத்திரமில்லை, இலக்கணம், வானநூல், கணிதம், வைத்தியம், ரசாயனம், அரசியல் முதலிய சகல சாஸ்திரங்களிலும் முயன்று கண்டுபிடித்து விளக்கியிருக்கும் உண்மைகளும் தத்துவங்களும், அந்தந்த சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இன்றும் ஆச்சரியம் விளைவிக்கின்றன. ஸி. இ. எம். ஜோத் என்னும் ஆங்கில ஆசிரியர், "நாம் தற்காலத்தியக் கொள்கைகள் என்று சொல்லும் தத்துவங்கள் எல்லாம் இந்திய நூல்களில் ஏதோ சர்வ சாதாரண விஷயங்கள் போலக் கூறப்படுகின்றனவே" என்று ஆச்சரியப்படுகிறார். அப்படியிருக்க, விஷயம் தெரியாமல், ஒரு பிரும்மாண்டமான ஜன சமூகத்தை அவமானப் படுத்துவதற்கு எவ்வளவு அநாகரிகமான துணிச்சல் வேண்டும்!

இப்பொழுது பென்டிங் பிரபுவை நோக்குவோம். அவர் தம் அரசாங்கத்திற்குப் பணம் தேவையாயிருந்ததனால்,

---

*Ma''caulay's original minute:

"...The qustion now before us is simply whether, when it is in our power to teach this language, we shall teach languages in which by universal confession there are no books on any subject which deserve to be compared with our own; whether when we can teach European science, we shall teach systems which by universal confession when they differ from those of Europe differ for the worse; and whether when we can patronise sound philosophy and fine history, we shall countenance at the public expense medical doctrines which would disgrace on English farrier, astronomywhich would move laughter in girls at an English boarding school, history abounding with kings thirty feet high and reigns 30,000 years long, and geography made up of seas of treacle and seas of butter..."

தாஜ்மகாலே இடித்து, அதிலுள்ள சலவைக் கற்களை எடுத்து ஏலம் போடலாமா என்று ஒரு சமயம் யோசித்தாராம்! இதை E. B. Havell, "இந்திய சிற்பமும் சித்திரமும்" (Indian Sculpture and Painting) என்னும் தம் புஸ்தகத்தில் கூறுகிறார். ஆக்ரா அரண் மனையிலிருந்து பெயர்த்தெடுத்த சல வைக் கற்கள் சரியாய் விலைக்குச் செல் லாததனால், பென்டிங் தம் எண்ணத்தைப் பிறகு விட்டுவிட்டாராம்!

1835-ம் வருஷம் ஆங்கிலம் இந்தி யாவில் மெகாலே, பென்டிங் இவர்க ளுடைய ஆதரவில் இனிதே அரங்கேற் றப்பட்டது. இதற்கு ராஜாராம் மோகன் ராய் முதலிய இந்திய மேதாவிகளும் உதவினர். ராஜாராம் மோகன்ராய் இந் திய சரித்திரத்திலேயே புகழ் பெற்று விளங்கும் ஒரு மகான். அவரைப்பற்றிக் குற்றம் கூறமுடியாது. ஏனெனில், அவருக் குத் தம் நாட்டின் குணங்கள் குறைவு கள் எல்லாம் நன்கு தெரியும். இப்பொ ழுது பர்னார்ட்ஷா இங்கிலாந்தை இகழ்ந் தாலும், அவர், "இங்கிலாந்து ஒரு சிறந்த தேசம், ஆங்கிலேயர்கள் சிறந்த ஜயினர் கள்" என்பதை நன்றாய் அறிந்தவர். அது போலத்தான் அந்தக் காலத்தில் ராஜாராம் மோகன்ராய் என்பவரும்.

மெகாலேயின் கொள்கையை ஆங்கிலப் பாதிரிகளும் ஆதரித்தனர். அவர்கள் இந்தியாவிற்கு அதிக சேவை செய்தவர் கள். அதை மறுக்க முடியாது. இந்தியா வில் கல்வி பரவுவதற்கு அவர்கள் மிகத் தொண்டு செய்திருக்கின்றனர். ஆனால் ஒரு சிறு விஷயம். அக் காலத்தில் அவர் கள் எண்ணியது என்னவெனில் "ஆங் கில பாஷையை இந்தியாவில் பரவச் செய் தால், அத்துடன் ஆங்கில மதத்தையும்— அதாவது கிருஸ்துவ மதத்தையும்—பர வச் செய்துவிடலாம், என்பது. கல்கத் தாவில் ஸ்காட்ச் பாதிரியாயிருந்த (Rev. Alexander Duff) இதைத்தான் எடுத்துக் கூறினார்.

ஆனால் இந்திய மக்கள் அவ்வளவு மூடர்களாய்ப் போய்விடவில்லை. 19-வது நூற்றாண்டு முடியும் முன்பேயே, அர சாங்கத்தார் எதிர்பார்த்தது முற்றிலும் தவறு என்பதை அவர்கள் நிரூபித்து விட்டனர். திபேந்திரநாத் டாகுர், ராம கிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகா னந்தர் முதலியவர்கள் தோன்றினர். சிப் பாய்க் கலகம் ஏற்பட்டது. இந்தியர்கள் கிறிஸ்துவர்கள் ஆவார்கள் என்பது கன விலும் கருத முடியாத விஷயம் என்பது உலகத்திற்கே தெளிவாகிவிட்டது.

புதிதாய் உண்ட மது மயக்கத்தில் ஆழ்த்துவது போல் ஆங்கிலம் இந்தியர் களை முதலில் மயக்கத்தில் ஆழ்த்தி யது. இந்தியர்கள் ஆங்கில வெறி கொண்டனர். சொந்த நாட்டுச் சரக்குகள் எல்லாவற்றையும் யோசனை யில்லாமல், பக்குவ புத்தியில்லாமல், இகழத் தொடங் கினர். மேனாட்டுச் சரக்குகள் எல்லாவற்றி லும் அடிமைத்தனமான மோகம் கொண் டனர். ஆனால், ஏற்கனவே கூறியபடி, ஸ்வாமி விவேகானந்தர், ரானடே, திலக், கோகலே முதலிய பெரியோர்கள் தோன் றினர்; ஸர் வில்லியம் ஜோன்ஸ், எச். எச். வில்ஸன் முதலிய ஆங்கில இந்தியாபி மானிகளும் நம் பண்டைக் காலச் சிறப்பை நமக்கு எடுத்துக் காண்பித்தனர்.

தேசீயம் பிறந்தது. 19-ம் நூற்றாண்டின் முடிவில் வங்காளம் மயக்கம் தெளிந்து கண் களைத் திறக்கலாயிற்று. தமிழ் நாடு கண் திறந்தது வங்காளத்திற்குப் பிறகுதான். வங்காளம் ஆங்கில உணவை ஜீரணம் செய்து, இலக்கியத்தில் தற்காலம் செழிப் புற்றிருக்கிறது. தமிழ் நாடு இன்னும் செழிப்புறவில்லை. இன்று பெஸன்ட், டாகூர், காந்தி, இவர்கள் தோன்றிய பிறகு இந்தியா முழுவதுமே கண் விழித்துவிட்டது. இப்படியாகக் குழப்ப காலம் முடிவடைந்துகொண்டிருக் கிறது. ஆனால் தேசத்தில் எங்கும் சாப் பாட்டுக் கஷ்டம் நிறைந்திருக்கிறது. சுயராஜ்யம் கிடைத்தால்தான் இலக்கி யம் பூரணமாய் மலர்ந்து பரிமளிக்கும்.

(அடுத்த இதழில் முடிவடையும்).

# நம்பினாலும் சரி—

"குகப்ரியை"

அன்று சென்னை ஸங்கீத வித்வத் சபையிலே ஏகக்கூட்டம். ஒரே அமளி குமளி. வேறொரு விசேஷமுமில்லை. இலந்தங்குடி கிருஷ்ணய்யர் கச்சேரி. அதற்குத்தான் இவ்வளவு கூட்டம். பகல் பதினொரு மணிக்கு விவாதங்கள். ஸங்கீதத்தைச் சிலர் பாடுவார்கள். பலர் பேசிப் பேசித் தீர்ப்பார்கள். எங்கள் அடுத்தகத்துச் சாமு தாத்தா ஓலைச்சுவடியும் கையுமாய் ஐந்து நிமிஷத்திற்கு ஒருமுறை எழுந்து அந்தச் சுவடியிலிருந்து எதையோ ஒருவருக்கும் புரியாத பாஷையில் தனக்கு மட்டுமே கேட்கும்படி சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுவார். பிறகு முறை முறையாய் ஸங்கீத சரபங்கள், ஸங்கீத கேஸரிகள், ஸங்கீத சார்த்தூலங்கள் இவர்களின் சொற்பொழிவுகளும் நடைபெறும். இதற்குள் பெண்மணிகளுக்குள் மிகுந்த திறமை வாய்ந்த சில ரஸிகைகள் எழுந்து குறுக்குக் கேள்விகளைப் போட்டுத் திணற அடிப்பார்கள்.

ஒருவிதமாய் 3 மணிக்கு வாக்யுத்தம் முடிவடையும். குற்றவாளிகளாகக் கருதப்படும் ராகங்களின் அதிதேவதைகளும், இந்தக் குட்டித் தேவதைகளிடம் அடங்கியவர்களாய் உருவிழந்து, பொலிவிழந்து தவிப்பார்கள். கடைசியில் விசாரணை மறு தினத்திற்கு ஒத்திவைக்கப்படும். நீண்ட பெருமூச்சே துணையாக ஸங்கீத தேவதைகள் மறைவார்கள். மற்றவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச்சென்று கான மண்டபத்தை அலங்கரிப்பார்கள். இதுதான் அங்கே நடைபெறும் நிகழ்ச்சி நிரல்.

*　　*　　*

"மார்கழி மாதமல்லவா? பனி சிலுசிலுவென்று அடிக்கத் தொடங்கிவிட்டது. நாலு மணிக்கு முன்னமே குளிரத் தொடங்கிவிடுகிறது. சிவனே என்று வீட்டிலே அடைத்துக் கிடக்க முடிகிறதா? அதுதானே இல்லை. கிராமங்களிலே ஏராளமாகப் பொழுது மிகுதியாகிறதாம்! நமக்கோ இருபத்துநான்கு மணி நேரமிருந்தும் போதவில்லை. இன்னும் ஒரு ஆறு மணி நேரமிருந்தால் கூட அயர்ந்து தூங்கலாமென்று தோன்றுகிறது. எவ்வளவு பொழுதிருந்தாலும் போதவில்லை" என்று மிகுந்த சலிப்புடன் கூறினாள் செல்லம்.

"ஆமாம். கார்த்திகை மாதம் கலங் கழுவப் பொழுதிராது, தைமாதம் தரை மெழுகப் பொழுதிராது என்று வசனமாயிற்றே" என்றாள் ரங்கநாயகி.

ஆனால் மார்கழிக்கென்று ஒன்றும் முதுமொழி கிடையாதுபோலிருக்கிறது என்று எண்ணியவளாய், அவள் வார்த்தையை ஆமோதிப்பதுபோல் நான் தொண்டையைக் கனைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

பாடகர் வெகு அற்புதமாய் ஸ்வர வரிசைகளைப் பாடி ஜால வேடிக்கைகளைச் செய்துகொண்டிருந்தார். அவர் பாடல் முடிந்ததோ இல்லையோ மறு விநாடி புளியம்பழம் உலுக்குவதுபோல ஒரே சடபடவென்ற கரகோஷம் அந்த மண்டப முழுவதும் சிலையோடிற்று.

அடுத்தது மிருதங்கக்காரருடைய சந்தர்ப்பம். தனக்குத் தெரிந்தவைகளையெல்லாம் ஒரே மூச்சில் கொட்டிவிட எண்ணியவர்போல், வெகு உற்சாகத்துடன், கண்களையும் முகத்தையும் கோணிக்கொண்டு விதவிதமான பாவங்கள் தோன்ற அபிநயிக்கலானார். அதற்கு ஏற்றாற் போல முன் வரிசையிலுள்ள பிரமுகர்களில் சிலரும், மேடையின்மேல் பாகவதருடன் உட்கார்ந்திருக்கும் பால காயகர்களும், உரத்த சத்தமாய்க் கைகளால் தாளம் போடத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில் எங்கள் மகாசபையில் அங்கங்கே குட்டி விமரிசகர்கள், இரட்டைத்தவில் உயர்வா? மிருதங்கம் உயர்வா? என்று வெகு ஸ்வாரஸ்யமாய் ஜதிகளை ஒட்டி விமரிசனம் செய்வார்கள்

படிப்படியாய் விமரிசகர்களின் குரல் உயர்ந்து பாகவதருடைய சுருதிக்குமேல் பஞ்சமம் வரையில் போகும்.

எனக்கோ அசாத்யத் தலைவலி. "ஒரே படியாய் இந்தப் பாழும் மிருதங்கத்தை எத்தனை மணி நேரம் கேட்பது? தாள வாத்தியங்களிலேயே ஈடுபடும் பரம ரஸிகர்கள் மிருதங்கத்தையும் கஞ்சிராவையும் ஏன் தனிக்கச்சேரி வைத்துக் கேட்கக் கூடாது? அதற்குப் பக்க வாத்தியமாகச் சங்கு, சேகண்டி, கிரிகிட்டகம் இவைகள் இருந்துவிட்டுப் போகட்டுமே! ஓயாமல் இதென்ன தலைவேதனை? காதுகள் செவிடாகவேதான் போய்விடும் இந்த முழக்கம் தாளாமல்," என்று வெடு வெடுத்துச் சீறினேன்.

என் வார்த்தைகள் ரங்கநாயகிக்கு மிகுதியும் கோபத்தை மூட்டிற்று. "அடேயப்பா! என்ன இப்படிப் பேசத் தொடங்கிவிட்டீர்கள். ஆவேசம் வந்துவிட்டதா? தாளமில்லாவிட்டால் ஸங்கீதம் ஏது? தாளந்தானே ஸங்கீதத்தின் உயிர் நாடி. "ஸ்ருதிர்மாதா லயப்பிதா" என்று பிரமாணமில்லையா? உலகத்தில் தாளமில்லாமல் எது நடைபெறுகிறது. ஒவ்வொரு சிறு செயலும் ஒரு தாள ஒத்துக்கிசையத்தான் அமைந்திருக்கிறது. நம்முடைய இதயத் துடிப்பைப் பாருங்கள்! அது ஒரு நடைப்படிதான் அடிக்கிறது. இதே மாதிரி ஒவ்வொரு விஷயத்திலும் நாம் அனுபவ பூர்வமாகப் பார்க்கலாம். குதிரைகள் ஓடும்பொழுது ஏற்படும் 'டடடக் டடடக்' என்னும் ஓசையும் ஒரு தாளம் தான்"........

எனக்கோ ஏன் இவளுடன் பேச்சுக் கொடுத்தோம் என்று தோன்றிவிட்டது. வேறு வழியில்லை. அவள் பேசுவதை ஆமோதித்தே தீரவேண்டும். ஏன் தெரியுமோ? அவளுக்கும் எனக்கும் சீர்திருத்தம் செய்கிறவர்கள் என்று பெயர். எங்கள் சங்கத்தின் தலையிடாக் கமிட்டியில் அவள் ஒரு அங்கத்தினள். இன்று அவளை மடக்கிவிட்டால் நாளை எங்கேயாவது ஒரு பிரசங்கத்தில் என்னை அபாயத்தில் சிக்க வைத்துவிடுவாள். ஆகவே ஒப்புக்கொள்ளுவதற்கு அறிகுறியாய்த் தலையை அசைத்தேன்.

எழுந்து வீட்டிற்கே போய்விடலாமா என்று தோன்றிற்று. புது வருஷம் பிறப்பதற்குள் நூற்றுக் கணக்கான வேலைகள் வந்து குவிந்து கிடந்தன. ஒருநாள் ஓரிடத்தில் அக்ராசனம்; இன்னொரு நாள் இன்னொரு பள்ளிக்கூடத்தில் பரிசளிப்பு விழா. நான் வராவிட்டால் தீராதென்று வருந்தி அழைத்திருந்தார்கள். எப்படி மறுப்பது? நீங்களே சொல்லுங்கள். இவைகளைத் தவிரப் பாட்டுக் கச்சேரி, சினிமா, பந்தாட்டத்திலே போட்டிகள். எதை விடுவது?

கடைசியில் ஒன்றையும் விடமுடியாதென்று தீர்மானித்தவளாய் மறுபடி பேசுவதற்காகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்தேன். எதிரில் தோன்றிய காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. ஸ்ரீமதி கமலா ராமஸ்வாமி சர்வாபரண பூஷிதையாய் எனக்கு முன் வரிசையில் வந்து உட்கார்ந்தாள். "அடடா! அவள் புடவைதான் என்ன அழகு! அவள் முகத்திலேதான் என்ன மலர்ச்சி! கன்னங்கள் குழிய லோலக்கு அசைய அசைய அவள் பேச்சிலேதான் என்ன காம்பீர்யம்!" என்றேன்.

ரங்கநாயகி என் காதைக் கடித்தாள். "அவள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு வனஜாம்பரம் வாங்குகிறாளாம். ஒரு புது தினுசுத் துணியோ, மணியோ வந்ததென்றால் முதலில் அவளுக்குத்தான் அனுப்புவார்களாம். அவளுடைய ஸ்லிப்பரும் கையில் வைத்திருக்கும் பையும் 1943ம் வருஷத்து மாதிரிகளாம். நாகரிகத்தின் ஒரு எல்லை என்றுதான் அவளை மதிப்பிடுகிறார்களாம். வீட்டிற்கே அவளிட்டது சட்டம் என்று இருந்தாலும் அவள் சொந்த செலவுக்கென்று அவர் நூறு ரூபாய் தனியாய்க் கொடுத்துவிடுவாராம்."

என் மனம் நெடுந்தூரம் பின் சென்றது. நாமும் பிறந்தோமே! ஸங்கீத வித்வத் ஸபைக்கு மூன்று ரூபாய்க்கு டிக்கெட் வாங்க மூக்கால் அழுகிறார் நம் வீட்டில். மற்றவர்களைப் பார்த்தாலாவது

தெரிகிறதா? அவளுக்கென்ன குறை? மாதம் நூறு ரூபா கைச் செலவுக்கு! அடுத்த மாதமுதல் இவரையும் அப்படியே கொடுக்கும்படி சண்டையிட வேண்டும். அவளுக்கென்ன அதிர்ஷ்டசாலி என்று பெருமூச்சுவிட்டேன்.

திடீரென்று என் கனவு தடைபட்டது. பாகவதர் துரித காலத்தில் பல்லவி பாடி முடித்தார். ஒரே கரகோஷம். கமலா ராமஸ்வாமி முல்லைச் சிரிப்புடன் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் பார்வைக்கு வெட்கி நான் தலை குனிந்தேன். பாடகருக்கு ஓய்வு. மிருதங்கக்காரர் தம்முடைய திறமையைக் காட்டத் தொடங்கினர். நான் மறுபடி சிந்தையில் ஆழ்ந்தேன். குடும்பங்களில் பெண்களின் நிலையைப் பற்றி மிக மிக விரிவாக ஆராயத் தொடங்கினேன்.

அடுத்துப் புருஷர்கள் உட்காருமிடம். நான்கு வரிசைகளுக்கு முன் ஒருவர் உட்கார்ந்திருந்தார். என் கண்கள் அங்கேயே தங்கின. அவர் தலையில் ஒரு "மப்ளர்" கட்டி யிருந்தார். மப்ளர் முழுவதும் ஒரே பொத்தல். ஏதோ ஒரு கழுதை நிறமுள்ள கோட் கழுத்தின் பின்புறமெல்லாம் கந்தையாகிச் சிங்கம் பிடரியைச் சிலிர்த்து நிற்பதுபோல் நின்றுகொண் டிருந்தது.

"ஐயோ! பாவம்! ஒரு நல்ல மப்ளரும் கோட்டும்கூடக் கிடையாதுபோ லிருக்கிறது. ஆனால் இவ்வளவு ஏழைமையில் மூழ்கிக் கிடப்பவர் இரண்டாம் வகுப்புக்கு டிக்கெட் எப்படி வாங்கியிருப்பார்? ஒருவேளை நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். என்னதா னிருந்தாலும் ஒரு வீட்டில் பெண்கள் இவ்வளவு கேவலமாகவா இருப்பார்கள் புருஷனுடைய கிழிந்த சட்டையைக்கூடத் தைத்துக் கொடுக்காமல்? அடாடா! அந்த மப்ளர் தான் என்ன அற்புதம். 'ஸஹஸ்ராக்ஷம்' தான் சே! சே! என்ன பெண்கள். இப்படிப்பட்ட பெண்களால்தான் நம்முடைய நாடு மிகமிகக் கீழான நிலைக்கு வந்துவிட்டது. கணவனுடைய துணிமணிகளைக் கூடக் கவனியாத அந்த லங்கணி எப்பேற்பட்டவளா யிருப்பாளோ? அந்தப் புண்ணியவதியை ஒருமுறை பார்க்கத்தான் வேண்டும்" என்று எண்ணினேன். இதன் பயனாக அந்த மனிதரின்மேல் எல்லையற்ற கருணையும் அவர் மனைவியின்மீது அசாத்ய கோபமும் பொங்கி எழுந்தது. "இப்படிப் பட்ட பெண்கள் பெண் குலத்திற்கே ஒரு இழிவை உண்டுபண்ணுகிறார்கள்" என்று எண்ணிப் பெருமூச்செறிந்தேன். கச்சேரி முடிந்த பிறகு அவருடன் யார் போகிறார்கள் பார்த்துவிடுவோம் என்று தீர்மானித்தேன்.

* * *

பாகவதர் 'பவமான' என்று தொடங்கு முன்னரே நான் எழுந்து நின்றேன். ஆனால் அந்த அபூர்வ மனிதர் எனக்கு முன்னமே எழுந்து மறைந்து போயிருந்தார். மிகுந்த ஏமாற்றத்துடன் அந்த நாற்காலியைப் பார்த்துவிட்டு நானும் புறப்பட்டேன்.

மகா யுத்தத்தின் பயனாக வெளியே ஒரே இருள். மோட்டார் கார்களும், பஸ்களும், அதுவரையில் கேட்டநுபவித்த சங்கீதத்தை மனனம் செய்வதுபோல் மனம் போனபடி முழங்கிக்கொண் டிருந்தன. பஸ் கண்டக்டர் மாம்பலம்! மாம்பலம்!! என்று உச்சஸ்வரத்தில் கூவிக் கொண் டிருந்தான். அந்த ஊமை வெளிச்சத்தில் ஓட்டமும் நடையுமாய் வந்து ஒரு பஸ்ஸில் ஏறினேன்.

பஸ் புறப்பட்ட பிறகே 'பளிச்'சென்று விளக்குகள் எரியத் தொடங்கின. என்ன ஆச்சரியம்! நான் தேடிய அந்த மப்ளர் மனிதர் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தார். சரி எங்கே இறங்குகிறாரோ பார்ப்போமென்று எண்ணினேன். கண்டக்டர் டிக்கெட் கேட்க ஆரம்பித்தான்.

"மாம்பலம் ஒரு டிக்கெட்" என்ற குரல் கேட்டதும், திடுக்கிட்டேன். அந்த மனிதர் சில்லரை வாங்கும் பொருட்டுத் திரும்பினர். ஆச்சர்ய மிகுதியினால் நான் திகைத்தே போனேன். அவர் யார் தெரியுமோ? என் கணவரேதான்!

# ஆர்யமாலா

அல்லது

# காத்தவராயன்

தர்மபுர ஆதீன வித்வான் - திருவெண்காடு சுப்ரமண்யம் பிள்ளை

காளி என். ரத்தினம்
K. சாரங்கபாணி
P. B. ரங்காச்சாரி
M. லக்ஷ்மணன்
T. V. ஸேதுராமன்

M. ரஜினிதேவி
V. சுப்புலக்ஷ்மி
P. R. மங்களம்
அங்கமுத்து
வத்ஸலா

மாஸ்டர் செல்வரத்தினம்
மாஸ்டர் ஷண்முகாநந்தம்
முதலியவர்கள் நடித்தது.

துரிதமாகத் தயாராகிக்கொண்டு வருகிறது !

பாடல்கள் :— மாரியப்பசாமி

ஸ்டுடியோ :— பிராக்ஜோதி

டைரக்ஷன் :— ஜே. சி. ஸின்ஹா

விவரங்களுக்கு

## செல்வமணி பிலிம்ஸ்

ஆள்வார்பேட்டை, மயிலாப்பூர் மதராஸ்,

# தி நியூ கார்டியன் ஆப் இந்தியா

## லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**மதராஸ்.**

**டைரெக்டர்கள்.**

தி ஆனரபிள் M. CT. M. சிதம்பரம் செட்டியார் (சேர்மன்) பாங்கர், மதராஸ்.
சேர்மன், தி யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி. லிமிடெட்.

O. A. O. K. RM. அருணாசலம் செட்டியார், பாங்கர், பள்ளத்தூர்.

ராய்பகதூர் கேதார்நாத் கண்டேல்வால் அவர்கள், B.A., LL.B.,
Merchant & Financier கல்கத்தா.

S. T. சதாசிவன் M.A. ஜெனரல் மானேஜர்,
தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட், மதராஸ்.

**பாலிஸிதாரரின் டைரெக்டர்கள்.**

S. சிட்டநாத கரயாளர், M.A., B.L., அட்வகேட் & டெபுடி பிரஸிடெண்ட்,
திருவாங்கூர் ஸ்ரீமூலம் அஸெம்ப்ளி, திருவனந்தபுரம்.

T. RM. T. S. T. தின்னப்ப செட்டியார், பாங்கர், தேவகோட்டை.

முன்னேற்றத்தில் முன்னணியில் நிற்கும் இந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியில் ஒரு பாலிஸி எடுத்துக்கொள்வதானது நம் ஆயுளுக்கு ஒரு நிலைபெற்ற ஏற்பாடாகும்.

**தி நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமை ஆபீஸ்:—மௌண்ட் ரோடு, மதராஸ்.


**நோட்டீஸ்.**

**மன்னார்குடி. டி. மு. கோர்ட்டு**

1941 ௵ O. S. No. 27.

K. ஸ்ரீ ரெங்காச்சாரியார்—வாதி

மதராஸ் எழும்பூர் சின்னரெட்டித் தெருவில் இருக்கும் சடகோபய்யங்கார் குமாரரும் மதராஸ் ஹைகோர்ட்டில் Advocate practice செய்து வருபவருமான S. ராமானுஜய்யங்கார். } முதல் பிரதிவாதி

இதனால் ஷை முதல் பிரதிவாதிக்கு தெரிவிப்பது யாதெனில்:—ஷை நம்பரில் புரோநோட்டுப்படி தொகை கிடைக்க ரூ. 306—15—0 க்கு வாதியால் தாவா செய்யப்பட்டு, தாவாவில் 2 தடவைகளில் அறிக்கை சம்மன்கள் அனுப்பியும் சர்வு செய்துகொள்ளாமல் ஷை முதல் பிரதிவாதி தலை மறைவாக இருந்து வருகிறபடியால் Subsituated service க்கு மனுக்களுக்கு உத்திரவாகி ஷை நம்பரை 18-4-41 தேதிக்கு விசாரணைக்கு ஈரங்கி போட்டிருக்கிற விபரம் அறியவும். மேலும் ஷை 18-4-41 ல் பகல் 10 மணிக்கு ஆஜராகி முதல் பிரதிவாதி தன் கக்ஷியை தெரிவித்துக் கொள்ளாதவரையில் எக்ஸ்பார்ட்டி செய்து விசாரணை செய்யப்படுமென்பதை அறியவும்.

மன்னார்குடி 8—4—41 } V.K. ராஜகோபால ஐயங்கார் *Pleader for Plaintiff.*


**புத்திக்கு உணவு வேண்டாமா?**

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள் | 1 | 8 |
| 2. | அற்புத உலகம் (பெ. நா. அப்புசாமி அய்யர்) | 1 | 0 |
| 3. | விதியின் செயல் முதலிய கதைகள் (எ. எஸ். பஞ்சாபகேசய்யர், ஐ. ஸி. எஸ்.) | 0 | 6 |
| 4. | குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| 5. | சந்திரிகா (குகப்ரியை) | 0 | 12 |
| 6. | ஹிட்லரும் மகா யுத்தமும் (A. G. வெங்கடாசாரி, பி.ஏ.) | 1 | 4 |
| 7. | ஜடாவல்லவர் (வாகவி திரு அ. சுப்ரமண்ய பாரதி) | 1 | 2 |
| 8. | தேசபக்தன் கந்தன் (கே. எஸ். வேங்கடரமணி) | 1 | 0 |
| 9. | முருகன் ஓர் உழவன் (கிருஷ்ண குமாரி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |

**சுவேதாரண்ய ஆச்ரமம்**

12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், மதறாஸ்.




# புதுப்பேய்

"பாஸ்கரன்"

அம்மங்குடியில் அடுக்குருட்டி யென்றொரு குடியானவ னிருந்தான். அவனுக்கு, கலப்பை, உழவுகோல், ஏற்றம் முதலிய சாமான்களைச் செய்ய மரம் வேண்டியிருந்தது. அதற்காக அவன் அவ்வூரில் வாய்க்காலின் கரையின்மேலிருந்த ஒரு புளிய மரத்தை விலைக்கு வாங்கினான். அது வெகு காலங் கண்ட மரம். அதில் ஒரு பேய் வசித்துக்கொண்டிருந்தது. அது அடுக்குருட்டிக்கு எப்படித் தெரியும்? தெரியாதாகையினால் அவன் ஒருநாள் விடியற்காலையிலே போய் அந்த மரத்தை வெட்டப் போனான். அந்த மரத்தி லிருந்த பேய், அவனை "அடே, அடுக்குருட்டி," என்று அதட்டிக் கூப்பிட்டது.

அடுக்குருட்டி பயப்படாமல், "யாரடா, என் மரத்தின்மேலேறிக் கொண்டு என்னை அடே என்கிறவன்?" என்று கேட்டு "இன்று நீ தப்பப் போவதில்லை!" என்றான்.

மரத்தி லிருந்த பேய் நடுங்கிப் போய்விட்டது; அதற்குத் தூக்கி வாரிப் போட்டதுபோ லிருந்தது! "இவன் தைரியசாலியா யிருக்கிறான்! நமக்குப் பயப்பட மாட்டான்! இவனிடம் நமது ஆர்ப்பாட்டம் பலிக்காது! இவனை நயந்துதான் போகவேண்டும்!"—என்று நினைத்தது.

"அப்பா, கோபங் கொள்ளாதே! நான் வெகு காலமாய் இந்த மரத்தில் வசித்துவரும் பேய்! நீ ஏன் இந்த மரத்தை வெட்டுகிறாய்? அதைச் சொல்!"—என்று கேட்டது பேய்.

"நீ ஏன் அதைக் கேட்கிறாய்? என் மரத்தை நான் வெட்டினால் உனக்கென்ன?"—என்று கேட்டான் குடியானவன்.

பேய்—உன் இஷ்டப்படி நட! அதைப்பற்றி நான் உன்னை ஒன்றும் சொல்வதற்கில்லை. எந்த வேலைக்காக இதை வெட்டுகிறாய்?

அடுக்குருட்டி—நான் குடியானவனல்லவா? எனக்குப் பல வேலைகளுக்கு மரம் வேண்டி யிருக்கிறது. முக்கியமாக இப்பொழுது நான் எள் விதைக்க வேண்டும். நிலத்தை உழுவதற்குக் கலப்பையில்லை.

பேய்—இவ்வளவுதானா? நீ இதை வெட்டாதே! உனக்கு வருஷந்தோறும் தவறாமல் நான் எள் கொடுத்துவிடுகிறேன்.

அடுக்குருட்டி "ஸந்தோஷம்! நான் இந்த மரத்தை வெட்டவில்லை. எனக்கு வேண்டியது எள் தானே! ஆனால்—நீ சொன்னபடி எள் தராவிட்டால் நீயும் தப்பமாட்டாய்,

இந்த மரமும் தப்பாது! ஜாக்கிரதை!"—என்று கூறிவிட்டுப் போய் விட்டான்.

பேய், தான் அடுக்குருட்டியினிடம் சொன்னபடி வருஷந்தோறும் தவறாமல் அவனுக்கு எள்ளை மூட்டை மூட்டையாகக் கொடுத்து வந்தது. ஒருநாள் இந்தப் பேய் முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது வேறொரு பேய் அதனிடம் வந்தது. அது "ஏன் இப்படி விசனத்துடன் உட்கார்ந்திருக்கிறாய்?"—என்று கேட்டது.

பழைய பேய் புதுப்பேயைப் பார்த்து, "நான் என்னவென்று சொல்வேன்?" என்று கூறித் தனக்கும் குடியானவனுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைச் சொல்லி "தினந்தோறும் எள் தேடுவதிலேயே என் காலம் கழிகிறது. எத்தனைநாள் இப்படிக் கஷ்டப்படுவது? இன்றையதினம் மிகவும் அலுத்துப் போய்விட்டேன்! மனம் சோர்வடைந்து உட்கார்ந்திருக்கிறேன்--" என்றது.

"சை, உனக்கு வெட்கமில்லையா? நீ ஒரு பேயா? ஒரு அற்ப மனிதனுக்கு அஞ்சுவதா? நன்றாயிருக்கிறது உன் காரியம்! யாராவது கேட்டால் சிரிப்பார்கள்! இதோ, நான் போய் அந்த அடுக்குருட்டியைக் கொன்று உன் கஷ்டத்தை நீக்குகிறேன்!"—என்று கூறியது புதுப்பேய்.

புதுப்பேய் அடுக்குருட்டியின் வீட்டுக்குச் சென்று மாட்டுத் தொழுவத்தில் மறைந்துகொண்டு அவனைக் கொல்லச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அடுக்குருட்டி மாட்டுத் தொழுவத்துக்கு வந்து சில மாடுகளுக்குச் சூடு போட்டான்.

அடுக்குருட்டி அருகிலிருந்த தன் தம்பியைப் பார்த்து "அடே, புதுப் பேயைப் பிடித்து நன்றாய்க் கட்டு!" என்று சொன்னான். அவன் **புதுப் பேய்** என்னும் ஊரிலிருந்து ஒரு மாடுவாங்கி வந்திருந்தான். அது புது மாடு. ஆகையினால் அப்படிச் சொன்னான்.

புதுப்பேய் இதைக் கேட்டதும் தன்னைத்தான் கட்டச்சொல்கிறான் என்று பயந்து, "இவன் அசாத்யன்! இவனிடம் நமது சாமர்த்யம் செல்லாது! நாம் இங்கிருப்பதை எப்படியோ அறிந்துவிட்டான்—" என்றெண்ணிக் குடியானவனைப் பார்த்து "எனக்குச் சூடுபோட வேண்டாம்!" என்று கெஞ்சியது.

அடுக்குருட்டி அதைப் பேய் என்று தெரிந்துகொண்டான்; "நீ எங்கே வந்தாய்? சொல்"—என்று தைரியமாக அதட்டினான்.

புதுப்பேய்—"உனக்குப் புளிய மரத்துப்பேய் எள்ளல்லவா கொடுத்து வருகிறது? எள்ளாக வேண்டுமா அல்லது எண்ணெயாக வேண்டுமா? என்று கேட்டுவரச் சொல்லியது. அதற்காக உன்னிடம் வந்தேன்"—என்றது.

அடுக்குருட்டி—"ஸந்தோஷம்! நீயும் அதனோடிருந்து எண்ணெயாகக் கொண்டுவா!"—என்றான்.

புதுப்பேய், "நல்லது, அப்படியே செய்வோம்!"—என்று கூறிப் புளியமரத்துப் பேயினிடம் சென்றது; "ஐயோ, உன்னைப் பிடித்த மனிதப்பேய் என்னையும் பிடித்துக் கொண்டது. இத்தனை நாளாக அடுக்குருட்டிக்கு நீ எள்ளல்லவா கொடுத்துக் கொண்டு வருகிறாய்!

இனிமேல் நாமிருவரும் சேர்ந்து கொண்டு எண்ணெயாகக் கொடுக்க வேண்டும்" என்றது.

பழையபேய்—"உன்னுலான உபகாரமா இது? நல்லது. ஓட மருந்து உண்டு உறங்கி விழுந்த கதைபோலாச்சு உன் செய்கை!"—என்று கூறிப் புதுப்பேயை வெறுத்துக்கொண்டது. அன்று முதல் புதுப்பேயும் பழையபேயும் குடியானவனுக்கு எண்ணெய் கொடுத்துவரத் தொடங்கின.

---

## சரியான பதில்!

உபாத்தியாயர் :—(மாணவர்களைப் பார்த்து) நான் திடீரென்று இறந்துவிட்டால் என்ன செய்வீர்கள்?

மாணவரிலோருவன் :—விடுமுறை நாள் வந்ததேயென்று மகிழ்வோம்!

* * *

ஒருவர் :—ஐயா, கொஞ்சம் பொடி கொடுங்கள்!

மற்றவர் :—ஐயா, நான் உம்மைப்போல் பொடி மனிதனல்லன்!

"நம் நாட்டில் ஒற்றுமைக் குறைவும் ஜாதிச் சண்டைகளும் இருக்கும் வரையில் நாம் அன்னியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை யடைவது கூடாத காரியம். ஒற்றுமையே நமது சுதந்திரத்திற்கு முதற்படி; அந்த ஒற்றுமையை நாட்டில் வலுவடையும்படி செய்யுங்கள்."

மகாத்மா காந்தி

* * *

"மதம் என்பது தனிப்பட்ட மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள விஷயம். இதை அரசியல் விவகாரங்களுடன் கலந்து விடக்கூடாது."

புலாபாய் தேசாய்






# உதாரணம் போதுமா?

"கௌரீ சங்கர்"

ஓர் ஊரில் சின்னானென்ற ஒரு வண்ணான் இருந்தான். அந்தப் பிராந்தியத்தில் அவனே மிகவும் பிராபல்ய மடைந்த தொழிலாளி. பக்கத்திலுள்ள அநேக கிராமங்களிலிருப்பவர்கள் யாவரும் சின்னானையே ஆதரித்தனர். அவன் விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் அணிவதே நாசுக்குக்கும் நாகரிகத்திற்கும் ஒரு சிறந்த அறிகுறியாக இருக்கும்.

தன் தொழிலுக்குச் சாதனங்களாகப் பரம்பரை தர்மத்தை ஒட்டி ஒரு கழுதையையும் அதிகப்படியாக ஒரு காளை மாட்டையும் வைத்துக்கொண் டிருந்தான். அன்றாடம் குவியும் அழுக்கு மூட்டைகளை மேல்படி வாகனங்க ளிரண்டும் துறைக்கும் வீட்டுக்கும் சுமந்து செல்ல வேண்டும். சிலசமயம் சின்னான் காளையின் கால்களில் சலங்கைகள் கட்டி அதனை ஒற்றை வண்டியில் பூட்டிச் சலவைகளைப் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குக்கொண்டு போய்க் கொடுத்து வரவும் உபயோகிப்பான். வாகனங்களிரண்டிற்கும் ஓய்ச்சல் ஒழிவு என்பதே கிடையாது.

ஒரு நாள் சின்னான் துறையில் நடுப் பகலில் வெயிலுக்காக அரசமரத்தடியில் இளைப்பாறிக்கொண் டிருக்கையில் ஒரு தேவதை அவன் முன் தோன்றி மிருகங்களின் பாஷையை அறிந்துகொள்ளும் சக்தியை அவனுக்கு அனுக்கிரஹித்து மறைந்தது. ஆனால் ஒரு நிபந்தனை மட்டும் விதித்தது. மிருகங்களின் பேச்சிலிருந்து தான் அறிந்துகொண்டதை வேறு யாருக்கும் சொல்லக்கூடாது. நிபந்தனையை மீறினால் உடனே அவன் தலை சுக்கு நூறாக உடைந்து விடும் என்று சொல்லியிருந்தது அத் தேவதை. ஜெர்மானிய ரேடியோ வெளியிடும் செய்திகளைக் கேட்கலாம் ஆனால் பிறருக்குப் பிரசுரம் செய்யக் கூடாது என்ற உத்தரவை ஒத்ததாக இல்லையா அந்த நிபந்தனை? சின்னான் தனக்குக் கிடைத்த அபூர்வ சக்தியையும் விதிக்கப்பட்ட நிபந்தனையையும் பற்றித் துறைக்குத் தனக்கு ஆகாரம் கொண்டு வந்த மனைவிக்குத் தெரிவித்தான்.

சின்னான் அது முதல் மிருகங்களும் பறவைகளும் என்னதான் பேசிக்கொள்கின்றன என்று கேட்டுக்கொண்டு ஏகாந்தத்தில் ஆனந்தமடைந்து வந்தான். அவன் மெய்ம்மறந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் உண்மையில் ஸித்தி பெற்ற ஒரு பெரிய தபசியைப் போலவே காணப்படுவான்.

ஒருநாள் அந்திப் பொழுதில் கொட்டிலில் கட்டப்பட் டிருந்த காளைக்கும் வெளியில் பிணைக்கப்பட்ட முன் கால்களுடன் நின்று காற்று வாங்கிக்கொண் டிருந்த கழுதைக்கும் நடந்த ஸம்பாஷணையை 'இஸ்திரி' செய்துகொண் டிருந்த சின்னான் செவியுற்றான். வேலை செய்து களைத்துத் துவண்டு போயிருந்த அந்தக் காளை ஒரு நாளைய ஓய்வுக்காகத் தான் எதையும் அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருப்பதாகச் சொல்லிற்று.

கழுதை:—ரிஷபோத்தமா! ஏன் இப்படி மனம் கலங்குகிறாய்? இது என்ன பிரமாதம்? ஒரு சின்னஞ் சிறு யுக்தி செய்தால் தானாக ரஜா எடுத்துக்கொள்ளலாமே! உனக்கு ஏன் அந்த யோசனை தோன்றவில்லை?

காளை:—கர்த்தபச் சிரேஷ்டரே! அவ்வுபாயம் யாதென்பதை மனமுவந்து அடியேனுக்குச் சொல்லி அருள்புரியலாகாதா?

கழுதை:—சொல்கிறேன். சிரத்தையுடன் கேள். இரவு எஜமானன் போடும் வைக்கோலை ஒருவாய்கூடத் தின்னாமல் ஸத்யாக்கிரகம் செய். கருணை வள்ளலாகிய எஜமானன் காலையில் வந்து பார்க்கும்போது உனக்கு உடம்பு சௌக்யமில்லை என்று எண்ணி உன்னைக் கொட்டிலில் கட்டிப்போட்டு விட்டு வேலை வாங்




முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்
மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— "வான்கார்ட்"

காமல் விட்டுவிடுவான்! எப்படி என் யோசனே?

ஆலோசனையும் அங்கிகரிக்கப்பட்டு அதன்படியே அன்றிரவு நடந்தேறியது. மறுநாள் சின்னனும் உண்மையை உணர்ந்தும் காளையிட மிரக்கமுள்ளவனைக் காளையைக் கொட்டிலிலேயே கட்டிப் போட்டு விட்டு இரண்டு பங்கு சுமையையும் சேர்த்துக் கழுதையையே சுமக்கும்படி செய்து இன்புற்ருன்.

அன்றிரவு அக் கழுதை காளையிடம் நிச்சயம் ஏதாகிலும் சொல்லும் என்று மிகவும் ஆவலுடன்,—ரேடியோவைத் திருப்பிவிட்டுப் பிரபல பாடகன் பாட்டைக் கேட்கத் தயாராகக் காத்திருப்பது போல்—கவனித்துக்கொண்டிருந்தான் சின்னன். கழுதை இரட்டிப்புச் சுமையினல் உடம்பும் மனமும் ஒருங்கே வாடித் தள்ளாடிக் கொட்டிலின் வெளியியே படுத்திருந்தது. காளையும் உண்ணுவிரதத்தை விட்டதாகத் தெரியவில்லே. என்ன செய்யும் பாவம் கழுதை! மறுநாளும் எங்கே அதிகப்படி வேலே செய்யவேண்டுமோ என்று பயந்த கழுதையின் மூளே தீவிரமாக வேலே செய்ய ஆரம்பித்தது. ஒரு யுக்தி செய்துகொண்டு காளையைப் பார்த்துப் பின்வருமாறு மிகவும் இரக்கமான குரலில் உருக்கமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டே சொல்லிற்று.

"தம்பி ரிஷப! என்னென்று சொல்வேன்!! போராத காலம்!! விபரீதமாக வல்லவோ முடியும்போ லிருக்கிறது. எஜமான் இன்றும் நீ இரை எடுக்காமலிருந்தால் உன்னைக் 'கசாப்புக் கடை'க்கு அனுப்பிவிடப் போகிருன் பாவி! 'தாமதிக்கக்கூடாது. காளே இன்னும் இளேத்து எலும்பும் தோலுமாக ஆகிவிட்டால் கசாப்புக் கடைக்காரனும் நல்ல விலே கொடுக்கமாட்டான்' என்று சொல்லிக் கொண் டிருந்தான்..............."

சின்னன் கழுதையின் தந்திரத்தைக் கண்டு மிகவும் வியப்புற்ருன். கழுதையின் வார்த்தைகளே நினேக்க நினேக்க அவனுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்துகொண் டிருந்தது. சாப்பிட உட்கார்ந்ததும்தானே சிரித்துக்கொண் டிருந்தான். அவன் மனைவி ஆச்சரிய மடைந்தவளாக "பயித்தியம் கியித்தியம் பிடித்துவிட்டதா என்ன! இப்படி இளித்துக்கொண்டு சோறு தின்னுமல் உட்கார்ந்திருக்கிருய்?" என்ருள்.

சின்னன்:—ஒஹ்......அஹ்.......என்னடி குட்டீ உளறுகிருய்! என் கழுதை சொன்னதைக் கேட்டிருப்பாயானல் தெரியும் உனக்கு"

அப்புறம் கேட்பானேன்! பெண்டாட்டி ஆத்தாள் சும்மா விடுவாளா? கழுதை சொன்னதென்னதானென்று தெரிந்து கொள்ள ஒற்றைக் காலால் நின்ருள்.

சின்னனே, "அடி சிறுக்கீ, அந்தப் பேச்சு வேண்டாம். அந்தக் குளத்தங் கரை முனி சொல்லி இருக்கிறது வெளியே சொன்னல் மண்டை வெடித்து விடுமென்று. அன்று உனக்குக்கூட அந்த நிபந்தனையைச் சொல்லி இருக்கிறேனே" என்று சொல்லிப் பார்த்தான். என்ன பயன்? ஒரு ஸ்திரீயிடம் எவ்வளவு நேரம் எதிர்த்து நிற்கமுடியும் ஒரு ஸ்திரீ பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்துவிட்டால் அவளே அடக்குவது சுலபமான காரியமா? அதட்டி உருட்டி கெஞ்சிக் கூத்தாடி அழுது ஸாகஸம் செய்து பார்த்துக் கடைசியாக, "கழுதை சொன்னதைச் சொல்லவேண்டாம். எதைப்பற்றி என்று மட்டும் கொஞ்சம் குறிப்பாகக் காண்பி போதும்! சுமாராக என்னவென்று தெரிந்துகொள்கிறேன். வேறு ஒன்றும் சொல்லவேண்டாம். ஒரு உதாரணமாவது சொல்லு போதும்" என்று வற்புறுத்தினுள்.

கடைசியாகச் சித்திரவதையி லிருந்து தப்ப வேறு வழியின்றி ஒருவிதமாக மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான். மாய மான் என்று உணர்ந்தும் வைதேகிக்கு ஸ்வர்ண மிருகம் பிடித்துக்கொடுக்க ஸ்ரீ ராமபிரான் போகவில்லேயா? அவரைவிடவா சின்னன்?

"தலை எழுத்துப் போலாகட்டும்! என் உறவின் முறையார்களைக் கூட்டி வா. கடைசியாக அவர்களைப் பார்த்து விட்டு என் கடைசி விருப்பங்களையும் தெரிவித்து விட்டுச் சலவைகளை யார் யாருக்குச் சேர்ப்பிக்க வேண்டுமோ அதையும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டு—இழவு உன் தாலி அறுபட! உனக்குக் கழுதை சொன்னதைச் சொல்லித் தொலைக்கிறேன்" என்றான்.

"அதுதான் புருஷனுக்கு அழகு! இதோ எல்லாரையும் அழைத்து வருகிறேன்" என்று அவசரமாக வெளியேறினாள் அவன் மனைவி.

தலையில் கைகளை வைத்துக்கொண்டு சுற்றத்தார் வரவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்த சின்னானுக்குப் புறக்கடையில் அவனுடைய சேவலுக்கும் நாய்க்கும் நடந்த ஸம்பாஷணை காதில் விழுந்தது. சேவல் மிகவும் உல்லாஸமாகச் சிறகுகளை அடித்துக்கொண்டு கூவிக்கொண்டிருந்தது. நாய் என்ன இருந்தாலும் எஜமான விசுவாஸமுள்ள பிராணி அல்லவா? சேவலைப் பார்த்துச் சொல்லிற்று. "குக்குடாதமா! இப்பொழுதுதானா உனக்குப் பாட்டும் கூத்தும்? பாவம் எஜமான் எமனுலகுக்கு வழி தேடிக்கொண்டிருக்கிறான். நீ அதைப் பொருட்படுத்தாமல் பாடிக்கொண்டிருந்தால் மிருக உலகம் பழிக்காதா? சீ......"

சேவல்:—எனக்கும் என்ன பைத்தியமா? மடத்தனமாகப் பெண்டாட்டி இழுத்த இழுப்பிற்கு இணங்கி அவள் ஆட்டிவைத்தபடி ஆடுபவன் எக்கேடு கெட்டுப் போனாலும் எனக்கு என்ன? மதியில்லா மூடனுக்காக நான் ஏன் வருந்த வேண்டும்? நானும் தானில்லையா? பெண்டாட்டி ஒருத்தியா இரண்டுபேரா? முப்பத்திரண்டு தர்ம பத்தினிகளிருக்கிறார்கள் எனக்கு. நான் பவனி வரும்போது பத்தடி பின்னாலேயே மரியாதையாக அணிவகுத்து வந்துகொண்டிருப்பார்கள். பெட்டைகள் தருமம் முட்டைகளிடுவதும் இட்ட முட்டைகளை அடைகாத்துக் குஞ்சுகள் பொறிப்பதும்! அவற்றை மீறலாமா? அதைவிட்டு அநாவசியமாக என் மனைவிகளில் எவளாவது என் காரியத்தில் குறுக்கிடுவாளா? என்னைச் சீண்டவோ எதிர்க்கவோ எவளுக்குத் தைரியம் இருக்கும்? மானிடப் பூச்சிகள் வீணாகப் பெண்களுக்கு இடம்கொடுத்துத் தானே கெடுத்துக்கொள்கிறார்கள்......" என்று மேலும் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தது.

இவ்வளவும் சின்னான் மனத்தில் ஊறவும் சிதைந்து கிடந்த புத்தி கொஞ்சம் தெளிவடைந்தது. உடனே அவன் மனத்தில் தைரியமும் பிறந்தது; கழுதைக்குப் பிரயோகிக்கும் கோலைக் கையிலெடுத்துக் கொண்டு கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். மனைவி உள்ளே நுழைந்ததும் அவளை நையப்புடைத்தான். கை ஓய்ந்த பிறகு "தெரிந்ததா இப்பொழுது கழுதை என்ன சொல்லிற்று என்பதன் கருத்து? இந்த உதாரணம் போதுமா? மேலும் ஏதாவது குறிப்பு காண்பிக்க வேண்டிய அவசியம் உண்டோ......?" என்று கேட்டான்.

அன்றைய தினத்திலிருந்து சின்னான் மனைவி அவனுக்கடங்கி அவன் எள் என்பதற்கு முன் எண்ணெயாக நின்றாள்.

—0—

## புத்திசாலி!

மகன்:—அப்பா, எனக்கொருதரம் பட்டம் வாங்கிக்கொடு!

தந்தை:—நீ தம்பட்டம் அடித்தால் வீடு கிடு கிடுத்துப் போய்விடும். என்னால் வேலை செய்ய முடியாது.

மகன்:—இல்லையப்பா! நீ வேலை செய்யும்போது அடித்தால்தானே உனக்குத் தொந்தரவாயிருக்கும்? நீ தூங்கும்பொழுது அடிக்கிறேன்!

## நல்ல யோசனை!

தந்தை:—அடே ராமு, உனக்கு எத்தனை தடவை சொல்வது கோவிந்தனோடு சேரவேண்டாமென்று? அவன் கெட்ட பையன்! தெரிந்ததா? இனிமேல் அவனோடு சேராதே!

ராமு:—சரி! அப்பா! கோவிந்தன் கெட்ட பையன்! அவனோடு நான் சேரவில்லை. நான் நல்லபையன்தானே? அவன் என்னோடு சேரட்டும்!

# ஒரு கலைஞன் சித்திரம்

[ஜே. பார்த்தஸாரதி, எம். ஏ.]

அநேக விதங்களில் கவியும் கலைஞனும் வேறுபட்டவர்களாக நான் கருதுகிறேன். அழகிய கனவுகளுக்கு உருவளிப்பவன் கவி; அவன் ஒரு சிருஷ்டிகர்த்தா. சாதாரண மனிதர்களுக்கில்லாத செவிகளும் கண்களும் ஒரு கவிக்குள்ளன; இயற்கையின் இன்ப ஒலிகளிலும் காட்சிகளிலும் தன் மனத்தைப் பறிகொடுத்து, அவைகளைத் தன் கற்பனை சக்தியால், மாய வார்த்தைகளில் சிறை செய்கிறான். அவன் எழுப்பும் அழகு மாளிகை முன் வாழ்வின் குறைகளை நாம் மறக்கிறோம். பெரும் லட்சியங்களை நம் முன் நிறுவி, குறுகிய தினசரிப் பாதையிலிருந்து அவன் நம்மை விடுவிக்கிறான்.

கலைஞனோ, இலக்கியப் பூங்காவனத்தில் திரிந்து, இஷ்டப்படி 'மேய்வதே' தர்மமெனக் கொண்டிருக்கிறான். பண்டைக் காலந்தொட்டு, "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" வளர்ந்த இலக்கியச் செல்வத்தைப் பெருக்குவது நம்மால் இயலாது; அநுபவிக்கப் பொருளிருக்க, சிருஷ்டிப்பதற்குக் காரணம் ஏது? என்று எண்ணுகிறான்.

உண்மையில், தற்பொழுது உலகம் விருத்தாப்பிய தசையை அடைந்துவிட்டதாகவே சொல்லலாம். எல்லாவிதமான இலக்கியத் துறைகளிலும் மகான்கள் தோன்றி, என்றும் அழியா நாடகங்களையும், பாட்டுக்களையும், கட்டுரைகளையும் நமக்கு அளித்த பிறகு, சிருஷ்டி செய்வதற்கு எஞ்சியுள்ளது எது? என்று கலைஞன் நினைக்கிறான். "பழைய பெருமைகளைத்தான் நாம் பாராட்ட முடியும்; பழைய ஞாபகங்கள்தான் நமக்குத் தற்காலத்தில் ஊக்கத்தை யளிக்கின்றன", என்பதே அவன் முடிவு. கலைஞன் அழகுத் தெய்வ வழிபாட்டுக்குப் பிறந்தவன்; அவன், கவியைப்போல் அழகுக் கோயிலின் சிற்பியாவதை விரும்பவில்லை.

கவி, தன் சிருஷ்டிச் சோலையில் தன்னை இழந்துவிடுகிறான்; மற்றகலை விநோதங்களை கண்டுகளிக்க அவனுக்குப் பொழுதில்லை. கலா விநோதனோ, "புத்தகசாலையனைத்தும் என்னைச் சேர்ந்தது; அதை அனுபவிக்கும் பிறப்புரிமை என்னுடையது" என்று பூரிப்படைகிறான். மலருக்கு மலர் தாவி, தேனை நுகரும் மதுகரம் போல், கலைகளை மனம்போனவாறு அனுபவிக்கும் ஆசையால், கலைஞன் தன் சிருஷ்டி சக்தியை நிராகரிக்கிறான்.

நான் அறிந்த ஒரு கலைஞரின் ஞாபகம் எனக்கு அடிக்கடி வருகிறது. நீர்நிலைகளின் ஆழத்தையுடைய கண்கள்; பரந்த நெற்றி; சிந்தனை தேக்கிய முகம். குறைந்தது மூன்று இலக்கியங்கள்—ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், இவைகளில் கரை கண்டவர். ஷேக்ஸ்பியரும் வால்மீகியும் கம்பனும் இளங்கோவும் அவரது ஆப்த நண்பர்கள். அபூர்வமான சுவடிகளையும் பதிப்புக்களையும் சேகரிப்பதில், அவருக்குச் சொல்ல முடியாத ஆனந்தம்.

அவருடன் சம்பாஷிப்பவர்களுக்கே, அவரது விசால பாண்டித்தியம் தெரிய வரும். தன்னுடன் பேசுபவர்களுக்குகந்த விஷயங்களைப் பொறுக்கி அவர் உரையாடுவார். ஆதலின், பவபூதியின் "உத்தர ராம சரித"த்தை அவர் அநுபவித்தவர் என்று அறிந்தவர்கள், "புறநானூற்றை"யும் அவர் நன்கு ரஸித்தவர் என்பதை உணராமலிருக்கமுடியாது. அவரிடம்இலக்கியப் பிரச்னைகளை விசாரிக்கப் புகுந்தால், வெகு அலட்சியமாக முதலில் தோன்றுவார்; அவருடைய பாண்டித்தியத்தை வெளிப்படுத்துவது மிகக் கடினம். தன் படிப்பு மூட்டையைச் சிறகெனத் தாங்கினார் அக் கலைஞர். சமய சந்தர்ப்பத்திற் கேற்ப, அவரது ஞானச் செல்வம் கொஞ்சங்

கொஞ்சமாக வெளிப்படும். நீண்ட காலம் அவருடன் பழகியதால்தான், நான் அவருடைய வித்தையின் பரப்பையும் ஆழத்தையும் அறிய முடிந்தது.

விஷயங்களை அரைகுறையாகக் கிரகித்துப் பேசுபவர்களிடம் அவருக்குப் பொறுமை கிடையாது. "சாஸன வாராய்ச்சி வெறும் பொழுது போக்கு; புளுகு" என்று எனது சினேகிதன் ஒருவன் சொன்ன பொழுது, அவர் "அசோகனின் சாஸனங்களை ஆராய்ந்தவர்கள் எழுதினதெல்லாம் பொய்யாகுமா, ஐயா?" என்று வேதனையுடன் கேட்டார். சினிமாப் பாட்டுக்களை அவர் கண்ணெடுத்தும் பாரார். பாடகர்கள் இவைகளை நல்ல இசையுடன் பாடலாம்; ஆனால் சொல் வளமும் பொருள் வளமும் இவைகளுக் கேது? என்று வினவுவார். ஆசிரியர்களைப்பற்றியும் நூல்களைப்பற்றியும் பொதுவாக உலாவி வரும் அபிப்பிராயங்களை அவர் சட்டை செய்யமாட்டார். நிர்ப்பயமாக, "அது ஒன்றுக்கும் உதவாத புத்தகம்" என்று கூறுவார். இலக்கிய ஜன நாயகத்தில் தேசிய, சமுதாய பக்ஷபாதங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் இடமேது? ஷேக்ஸ்பியரை அவர் இலக்கிய ஜனநாயகத்திற்கு "முடிசூடா" மன்னனாக்கினர். "ஷேக்ஸ்பியர் ஒரு அற்புத சிருஷ்டி. எக்கவியும் அவரிடம் பிச்சை வாங்கவேண்டும்" என்று அடிக்கடி அவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

புத்தகசாலையில் அவர் தன் புத்தகங்களைக் கையாளுவதே ஒரு பெரிய படிப்பினை. அவர் கலைச் செல்வங்களுக்கு வைத்திருந்த மரியாதையும் பிரியமும் ஒவ்வொரு செய்கையிலும் விளங்கும். புத்தகங்களை எடுப்பதில், தப்பான முறையும் சரியான முறையும் இருக்கின்றன. தனக்கு வேண்டிய புத்தகத்தைத் திடீரென்று அலமாரியில் கை வைத்துக் குரூரமாக இழுப்பது அவர் முறையல்ல; பக்கத்திலுள்ள புத்தகங்களை மெதுவாக ஒரு புறம் தள்ளித் தனக்கு வேண்டிய புத்தகத்தை, தாய்க்குக் குழந்தையின் மேலுள்ள பரிவுடன் எடுப்பார். அவர் புத்தகம், ஒவ்வொன்றும் நன்றாக, சாணிக் காகித அட்டையிடப்பட்டுப் புதுமை மாறாது தோன்றும். புத்தகத்தின்மேல் 'கில்டு' கொடுத்த ஓரத்தைத் தன் வேஷ்டி நுனியால், தூசி இல்லாமல் துடைப்பார். நல்ல பயிண்டு செய்து, அழகாக அச்சிடப்பட்டிருக்கும் பதிப்புக்களை வாங்குவதில், அவர் தன் பெருமையை மறைக்கவில்லை. "இது ஒரு விலையுயர்ந்த பழைய பதிப்பு; அநேக பாட பேதங்களுடையது"; "அது நீளமாக, குறிப்புக்கள் எழுதும்படி விசாலமான பக்கங்களுள்ளது" என்று சொல்லுவார்.

என்னிடம் இலக்கியப் பற்றை உண்டாக்கி, அறிவுச் சுடரைக் கொளுத்தியவர் இக் கலைஞரே. சாயங்காலங்களில், அவர் உலாவச் செல்லும் பொழுது, உற்சாகத் தொனியுடன் இலக்கியப் பிரச்னைகளைப் பற்றிப் பேசுவது வழக்கம். கவிகளின் சொல் வனப்பு அவரை அடிமைப்படுத்தியது; கம்பனின் கம்பீரச் சொல்லடுக்குகளும், நிகரற்ற காளிதாஸனின் உவமைகளும் அவர் நாவில் நடமாடும். மனம் மேலோங்கி, ஆன்மா சாம்ராஜ்யம் செலுத்தும் அந் நேரங்கள்தான், நம் அர்த்தமற்ற வாழ்வின் புனிதமான பொழுதுகள்.

கலைஞர் பேசின விஷயங்கள் முழுவதும் எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. ஆனால், அவருடைய பேச்சின் நுட்பமும், பெருக்கும், சுவையும் என் மனத்தில் நன்கு பதிந்திருக்கின்றன.

புத்தகசாலையில், காலை வேளைகளில், நீண்ட நேரம் இப்பொழுது ஒரு புத்தகம், அப்பொழுது ஒரு புத்தகமாகக் கலைஞர் புரட்டிக்கொண்டிருப்பதாக நான் எண்ணமிடுகிறேன். புத்தகங்களில் எனக்கு அசிரத்தை தோன்றும் பொழுதும், மனச் சாந்தியற்றுத் திகைக்கும் பொழுதும், நான் அறிந்த கலா விநோதரின் உருவம், அகண்ட, இலக்கியப் பிராந்தியங்களில் மெய்ம்மறந்து திரிவது என் கண் முன் மிதந்து வரும்.

---

# இருவர் ஏமாந்தால் ஏச்சுமில்லை பேச்சுமில்லை!

[" குஷி "]

நான் சிறுவனுக இருந்தபோது என் வீட்டில் என்னை "அது ஒரு இரண்டுங் கெட்டான்" என்று சொல்வதுண்டு. அடிக்கடி என் தந்தை எனக்குப் பூசை கொடுக்கும்போதெல்லாம், என் தாய் "அந்த இரண்டுங்கெட்டான் குழந்தையை ஏன் போட்டுக் கொல்லுகிறீர்கள்?" என்பாள்.

ஆனல் அந்தக் காலம் போயிற்று. நான் பள்ளிக்கூடத்தை முற்றுகையிட்ட பிறகு கலாசாலைமேல் படையெடுத்தபோதும் என் நண்பர்கள், என்னை, மகா கபடனென்றும், எதையும் லேசில் வெளியிடமாட்டானென்றும், மகா அழுத்தக்காரனென்றும் பட்டம் கட்டிவிட்டார்கள். முக்கியமாக என்னுடன் சேர்ந்து பழகி எனக்கேற்பட்ட சுகதுக்கங்களில் பிரதி வருஷம் பரீக்ஷையில் கேட்டுப் பங்கெடுத்துக்கொண்ட என் நண்பன் சீனுகூட என்னை அப்படி நினைத்துவிட்டானென்ருல் மற்றவர்களைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இவன் இம்மாதிரி நினைத்திருப்பான் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. எதிர்பாராத ஒரு சம்பவத்தால்தான் அது எனக்குத் தெரிந்தது. ஆனல் நினைத்ததற்கும் காரணமிருந்தது. நானே அந்த விஷயத்தில் கொஞ்சம் ரகசியமான முறைகளையே கையாண்டேன். விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

ஒரு பெரியவரைச் சந்திக்க நேர்ந்தது. அவருக்கு வயது நாற்பது இருக்கும். நல்ல பஞ்சகச்சவேஷ்டி; வெண்மையும் கருமையும் கலந்த நீண்டதாடி; நெற்றியில் விபூதி; அதனடியில் சந்தனம் குங்குமம்; கையில் ஒரு வெள்ளி ஒத்து; மேலே ஒரு பச்சைச் சால்வை. நல்ல சிரித்த முகம்; இந்த அடையாளமுள்ள அவர் என்னைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தார்.

நானும் சற்றுத் தயங்கினேன். அவர் இன்னும் சற்று என்னருகில் வந்து ஒரு சிரிப்புச் சிரித்துத் தன் ஆள்காட்டி விரலால் என்னைச் சுட்டிக்காட்டி "நீ சிவராமனல்லவா?" என்ருர்.

எனக்கு ஆச்சர்யமாகப் போய்விட்டது. ஒரு அசட்டுச் சிரிப்புடன் 'ஆமாம்' என்றேன்.

அவர் இன்னும் சற்றுச் சாந்தமாக 'உன் தந்தை பெயர் நாராயணஸ்வாமி ஐயர் தானே!' என்ருர்.

ஒருகால் எனது தந்தைக்கு இவர் நண்பரோ என்னவோவென்று மரியாதையாக 'ஆமாம், அவரை உங்களுக்குத் தெரியுமோ?' என்றேன்.

அவர் ஒரு ஏளனச் சிரிப்புடன் "நன்ருகச் சொன்னுய்! திருப்பூந்துரை, நாராயணஸ்வாமியை எனக்குத் தெரியாதா என்ன? நாங்கள் இருவரும் திருச்சினுப் பள்ளியில்தானே படித்தோம். பிறகு அவன் சென்னை வந்துவிட்டான். வெகு நாள் கழித்து மீண்டும் அவனை ஒருமுறை பார்த்தேன். அப்பொழுது நீ ஒரு வயதுக் குழந்தை. இப்பொழுது உன்னைப் பார்த்ததும் நாராயணன் ஜாடையாக இருந்தது. எனக்கே சந்தேகம்தான். கேட்டுப் பார்க்கலாம் என்று பார்த்தேன். உம்! வீட்டில் எல்லோரும் சௌக்கியம் தானே?' என்று எனக்கு ஒரு கேள்வியையும் போட்டார்.

"எல்லோரும் சௌக்யம்தான். ஏன் இங்கே நிற்கிறீர்கள்? வாருங்கள் அப்படி நிழலில் நின்று பேசலாம்" என்றேன்.

"ஆஹா தாராளமாய்! உன்னேடு நானும் ரொம்பப் பேசவேண்டும். இந்தமாதிரி உன்னைத் தனிமையில் சந்திக்கவேண்டுமென்பதுதான் என் எண்ணமும். தெய்வாதீனமாய்......எல்லாம். அந்த முருகன் கிருபை! என்னப்பனே முருகா! உம்! வெயில்தான்! வா நிழலில் போகலாம்" என்ருர்.

இருவரும் நிழலுக்கு வந்தோம். அவர் ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு சிவ

ராமா! உன்னிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும். நீ எனக்குச் சரியான பதில் சொல்லவேண்டும். உன் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டுதான் நான் மேற்கொண்டு ஆகவேண்டியதைப் பார்க்க வேண்டும். வா! பேசிக்கொண்டே போவோம்" என்றார்.

அவருடைய பேச்சு வார்த்தைகளையும் அவர் தோற்றத்தையும் கண்டு, நான் மந்திரத்தால் கட்டுண்ட பாம்பைப்போல் அவருடனேயே சென்றேன். இருவரும் சென்று ஒரு ஓட்டலில் உட்கார்ந்தோம்.

உடனே தன் கையிலிருந்த ஒரு காகிதக் கட்டிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து என் கையில் கொடுத்து, "இது யார் என்று உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

போட்டோவைக் கையில் வாங்கிப் பார்த்தேன். அது ஒரு அழகிய பெண்ணின் படம்; வயது பதின்மூன்று அல்லது பதினான்கு இருக்கும். நல்ல களை சொட்டும் முகம், மலர்ந்த புன்சிரிப்பு, வாலிப உள்ளத்தைக் கவர்வதற்கு வேண்டிய சகலமும் இருந்தன.

இதற்குள் ஓட்டல் பையன், ஏதேதோ பிளேட்டுகளைக் கொண்டுவந்து வைத்தான். என்னைக் கேட்காமலே அவர் ஆர்டர் கொடுத்துவிட்டார். நானும் ஒன்றும் தடைசொல்ல முடியவில்லை. பேசாமல் சாப்பிட்டுக்கொண்டே பேசலானோம்.

"என்ன! யார் என்று தெரிந்துகொண்டாயா?" என்று அமர்த்தலாகக் கேட்டார் அவர்.

நான் பார்த்த சினிமா நடிகையரில் யாரும் அந்த அடையாள முள்ளவர்களாக எனக்கு ஞாபகம் வரவில்லை. எதெதையோ நினைவுபடுத்திப் பார்த்தேன். ஒன்றும் தென்படவில்லை. என் முகத் தோற்றத்தைக் கண்டு அவர், "உனக்குத் தெரிந்திருக்காது. இவள் என் மருமாள் லலிதா! இவள் தந்தை பெரிய வியாபாரியாயிருந்தார்." என்று ஒரு பெருமூச்சு விட்டு நிறுத்தினார்.

எனக்கு மேற்கொண்டும் அறியவேண்டுமென்று ஆவல். ஆகையால் நான் "இருந்தார் என்றால் தற்போது இல்லையா?" என்றேன்.

அவர் சற்று வருத்தத்துடன் "அதை ஏன் கேட்கிறாய்! அவர் மாத்திரம் அல்ல, இவளுடைய தாயும்கூட இந்தக் குழந்தையை விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். சொத்திருக்கிறது! என்ன பிரயோஜனம்! குழந்தைக்கு ஒரு அன்பு வார்த்தை சொல்ல ஒருவரும் கிடையாது. நான் என்ன செய்யமுடியும்? அவளுக்கு வயதும் வந்துவிட்டது" என்றார்.

நான் ஆச்சர்யத்துடன் "ஆனால் தங்கள்..."என்று ஆரம்பித்தேன்.

என் வார்த்தை முடியு முன்பே அவர் என்னை இடைமறித்து,"நான்கல்யாணமே செய்துகொள்ள வில்லையப்பா! எனக்கு இந்த உலகத்தொல்லையேவேண்டாம்.யாராவது ஒரு பையனைப் பார்த்துக் குழந்தையைக் கல்யாணத்தைச் செய்து கொடுத்து அவளுக்குண்டான ஆஸ்தியையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டு, நிம்மதியாக எங்காவது க்ஷேத்ராடனம் போகலாம் என்று தான் உத்தேசம். உன் தந்தையின் ஞாபகம் வரவே நமக்கு வேண்டிய இடமாயிற்றே ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்று வந்தேன். வந்த இடத்தில் அகஸ்மாத்தாக நீயும் அகப்பட்டாய்! போகட்டும் பெண் எப்படி?" என்றார்.

நான் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் "ஆமாம் சொத்து இருக்கிறது என்றீர்களே, அது யாருக்கு? எவ்வளவு" என்று கேட்டேன்.

அவர் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு "சரிதான்! நீ சொத்தில்தான் இருக்கிறாயா? போகட்டும்! அப்படித்தான் இருக்கவேண்டும். சொத்துக்கென்ன குறைவு? லட்ச ரூபாய் ரொக்கமாக இருக்கிறது." என்றார்.

லட்ச ரூபாய்! ஒரு அழகான பெண்! எப்படி இருக்கும் மனம்! மேற்கொண்டு ஒன்றும் கேட்கவே தோன்றவில்லை.

ஓட்டல் பையன் பில்லைக்கொண்டு வந்து வைத்தான். "வா போவோம்"

என்று போட்டோவைக் கையில் வாங்கிக் கொண்டு எழுந்தார் பெரியவர்.

வெளியே வரும்போது, அவர் சொல்லாமலே நான் ஓட்டலுக்குச் சில்லரை கொடுத்தேன். அப்பொழுதுதான் நாங்கள் இருவரும் பதினொன்கணுவிற்குச் சாப்பிட்டிருக்கிறோம் என்பது தெரிய வந்தது.

மேற்கொண்டு அவரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டு மென்பதே எனக்குப் புரியவில்லை.

ஆனல் அவர் எனக்கு அந்தக் கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. "சிவராமா! இன்று ஞாயிற்றுக்கிழமை—ராகு காலம்! உங்கள் விலாசத்தைக் கொடு! ராகு காலம் கழிந்த பிறகு வீட்டிற்கு வருகிறேன்" என்ருர் பெரியவர்.

நான் என் வீட்டு விலாசத்தைத் தெரிவித்தேன். அவர் விடை பெற்றுக்கொள்ளும்போது என்னிடம் "நாம் இங்குச் சந்தித்த விஷயம் உன் தந்தைக்குத் தெரிய வேண்டாம்" என்று எச்சரித்துவிட்டுப் போனர்.

நானும் சினிமாவுக்குப் போகத் திரும்பினேன். பின்னல் வந்து என் நண்பன் சுப்பு என் முதுகில் ஒரு 'ஷொட்டு'க் கொடுத்து "ஏண்டா பழி! என்ன! கல்யாணம் எப்படி? என்ருன்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்னடா கேட்கிருய்?" என்றேன்.

"என்ன கேட்கிறேனு! அதுதான் லட்ச ரூபாயுடன் ஒரு பெண்! டேய்! பையன்க ளெல்லாம் சொன்னது வாஸ்தவந்தான். நீ ஆள் பலே சூதன்" என்ருன்.

நான் பதில் சொல்லாமல் விழித்தேன்.

"உ-ம்! இன்று நீ ஏமாந்தாயா?" என்ருன்.

அவன் இம்மாதிரி சொன்ன பிறகு தான் எனக்கு விஷயம் விளங்கியது. இப்படியும் ஒரு "பிழைப்பு" நடந்து வருவதென்பது அதுவரை எனக்குத் தெரியாது. ஆயினும் என் நண்பனை மடக்க எண்ணி "ஏண்டா அது சரிதான்! இன்று நீ ஏமாந்தாயா? என்று கேட்டாயே நேற்று ஏமாந்தது யார்?" என்று கேட்டேன்.

"வேறு யார் ஏமாறுவார்கள்? உன் நண்பன் தான்!" என்ருன் அவன். இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.



# புத்தக விமர்சனம்

கதைக்கோவை:—[பிரசுரம்:—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை:—கிளேஸ் ரூ. 3. பெதர் வெயிட் ரூ. 3-8-0]

நாற்பது எழுத்தாளர்கள் எழுதிய நாற்பது சிறுகதைகள் இந் நூலில் இருக்கின்றன. நாற்பது கதைகளும், அவைகளை யெழுதிய ஆசிரியர்கள் சிரமமெடுத்துக் கொண்டு எழுதியிருக்கின்றனர் என்பதை நன்கு விளக்குகின்றன. தமிழ்நாடு இப்பொழுது நூதன முறையில் முன்னேறி வருகிறது என்பதற்கு இந் நூலில் ஆங்காங்கு அத்தாட்சியில்லாமற் போகவில்லை.

நவயுக மறுமலர்ச்சியில் விசேஷ ஊக்கத்துடன் உழைத்து, அம் மறுமலர்ச்சியின் அத்தாட்சியை அழிவற்ற செல்வமாகிய இக் கதைக்கோவையின் மூலம் அல்லயன்ஸ் கம்பெனியார் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

இக் கதைக்கோவையில் தலைமை ஸ்தானம் வகிக்கும் மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் எழுதிய "தருமம் தலைகாக்கும்" என்னும் கதை மதிப்பிலும் தலைமை ஸ்தானம் தான் வகிக்கிறது என்பது நாம் கூறவேண்டுவதின்று.

ஸ்ரீ ராஜாஜி எழுதிய "தேவானை" வெகு சரளமான—இனிய—அழகிய நடையில் அமைந்து சிறப்புடன் விளங்குகிறது.

கி. வா. ஜகந்நாதன் எழுதிய "கலைஞன் தியாகம்" என்னும் சிறு கதை ஒரு சிறந்த ஓவியத்தைக் காணும்பொழுது உண்டாகும் உணர்ச்சியை நம் மனத்தில் எழுப்பி விடுகிறது. கதையின் ஆரம்பத்திலிருந்து அவர் சித்திரத்தையும் தீட்டி நம் மனக் கண்ணில் காட்டி நம்மை உணர்ச்சி வெள்ளத்தில் அழுத்துகிறார். கதை முடிகிற வரையில் நம் நினைவையே மறந்து அக் கதையில் வரும் பாத்திரங்களுள் நாமும் கலந்திருப்பதாகவே தோன்றுகிறது. "கலைஞன் தியாகம்" இக் கதைக்கோவையில் ஒப்புயர்வற்ற ஒரு சிறந்த மணி.

மற்ற எழுத்தாளர்களின் கதைகளிலும் இவ்வித உயர்வு இல்லாமற் போகவில்லை. ஒவ்வொன்றையும் எடுத்து விவரிப்பதெனின் பெருகும். தமிழ்நாட்டில் இது வரையில் இத்தகைய நூல் வெளிவந்ததில்லை. புத்தகத்தின் அமைப்பு (Get up) மிகவும் சிறந்து விளங்குகிறது. தமிழில் இத்தகைய நூதன நூல் வெளிவந்தது தமிழரின் துரிதமான முன்னேற்றத்தையே காட்டுகிறது. தமிழுலகம் நவயுகத்தில் முன்னேற்ற மடைவதற்குரிய வழிகளில் உழைத்து மாசற்ற சேவை செய்து வருகின்றனர் அல்லயன்ஸ் கம்பெனியார்.

ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் புகழ்பெற்ற எழுத்தாளர்களிடமிருந்து சிறந்த ரத்தினங்களைப் பெற்று அவைகளை ஓர் மாலையாகத் தொடுத்துத் தமிழ்த் தாய்க்குச் சூட்டியிருக்கின்றனர் அல்லயன்ஸ் கம்பெனியார் என்று கூறின் அது மிகையாகாது. ஆனல் மிகவும் மலிவான—உயர்ந்தவைகளோடு சேர்த்தெண்ண முடியாத—வகைகளிலும் சில சேர்க்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது தான் என்பதை நாம் கூறுமலிருக்க முடியவில்லை.

கதைக்கோவை தமிழுலகுக்கிருந்த வெகுநாளைய தேவையை ஒருவாறு பூர்த்தி செய்துவிட்டதென்றே கூறலாம். இந் நூலைத் தமிழர்கள் விரும்பி வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை. பிழையின்றி வெளிவந்துள்ள இந் நூலை நாம் பாராட்டாமலிருப்பதற்கில்லை.

ஸ—. ஸோ.

# எதிர்பாராத நஷ்டம்

நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது. நாம் நினையாத ஒன்று—கொஞ்சங்கூட எதிர்பாராதது—நடந்து விடுகிறது. அந்தச் செயல் நடந்து முடிந்த பிறகுதான் நமக்குத் தெரிகிறது. நாம் எதையும் முன்னதாகவே தெரிந்து கொண்டு அதற்குத் தயாராக இருக்க முடியவில்லை. இது உலக சுபாவம்—ஈசுவர லீலா விநோதம் என்று—கூறுவதேயல்லாமல் நாம் வேறு என்ன சொல்ல முடியும்?

ஸ்ரீ. ஆர். ஸத்யமூர்த்தி ஐயருக்கு ஹைகோர்ட் மாஸ்டர் பதவியிலிருந்து இன்கம்டாக்ஸ் ஜட்ஜ் பதவி கிடைத்த ஸந்தோஷ சமாசாரத்தை அதற்குள் ஒருவரும் மறந்திருக்க முடியாது. ஸத்யமூர்த்தி ஐயர் சென்னை ஹைகோர்ட்டிலிருந்து பிரிவுபசாரம் பெற்றுப் புதிய பதவியை வகிக்க டில்லிக்குச் சென்றதும் நம் கவனத்தை விட்டகலவில்லை.

ஐயர் டில்லிக்குச் சென்று ஒரு மாத காலம்கூடத் தாமதிக்கவில்லை. உடல் நலம் சரியாயில்லாமையால் அங்குக் கொஞ்ச நாட்களிருந்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினார். யாருக்குத் தெரியும் காலதேவனின் உள்ளம்! ஸத்யமூர்த்தி ஐயர் திரும்பித் தாம் டில்லிக்குச் செல்லமாட்டோம் என்றா நினைத்தார்? யார்தான் அப்படி நினைக்க முடியும்? ஸத்யமூர்த்தி ஐயர் சென்ற சனிக்கிழமை (5—4—'41) தமது வாசஸ்தலத்தில் தேக வியோகமடைந்தார் என்பதைக் கேட்கும் பொழுது நமது செவியையே நாம் நம்ப முடியவில்லை.

ஸத்யமூர்த்தி ஐயர் திடீரென்று மரணமடைந்த செய்தி நம் நாட்டிற்கு ஒரு பெரிய அதிர்ச்சியை யெழுப்பிவிட்டது. ஐயர் நீடித்த நாட்கள் நோய் வாய்ப்பட்டிருந்ததாகவும் தெரியவில்லை. இது நம் நாட்டிற்கு எதிர்பாராத நஷ்டம்.

ஐயரவர்கள் தம்முடைய மனைவிக்கும் மக்களுக்கும் தீராத துக்கத்தைத் தந்துவிட்டு விண்ணுலகம் சென்றுவிட்டார். ஐயரவர்களின் குடும்பத்துக்கு எமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

---

"எவரைக் காணுந்தோறும் இறைவன் ஞாபகம் வருகின்றதோ அவரே ஆண்டவன் அடியார்களுள் சிறந்தவர்."

முகம்மது நபி

* * *

"நீ எப்படியிருக்க விரும்புகிறாயோ அப்படியே நீ உன்னைச் செய்துகொள்ளலாம். கண்ணியமுடையவனாகவும் இருக்கலாம்; கண்ணியமில்லாதவனாகவும் இருக்கலாம்; சுத்தனாகவும் இருக்கலாம்; அசுத்தவனாகவும் இருக்கலாம். நீ உன்னை மேதாவியாகவும் ஆக்கிக் கொள்ளலாம். முழு மூடனாகவும் ஆக்கிக் கொள்ளலாம். உன்னைச் சரியான மனிதனாகச் செய்து கொள்வதற்குரிய வழி உன்னிடம்தான் இருக்கிறது. நீயே உன்னுடைய வருங்கால வாழ்க்கையைச் செதுக்கிவைத்துக் கொள்பவனாகிறாய்."

அன்னை பெஸன்ட்

# எம். & எஸ். எம். ரெயில்வே

எம். & எஸ். எம். ரெயில்வேயின் ஒரு பகுதிக்கு
செல்லுபடியுள்ளதாக மூன்று பிரிவுகளுக்கு,

## மலிவான மூன்றாவது வகுப்பு
## சுற்றுப்பிரயாண டிக்கட்டுகள்

1941ஞு ஏப்ரல்மீ 1௳ முதல் கொடுக்கப்படும். புண்ணிய க்ஷேத்திரங்கள், சரித்திரப் பூர்வமாக புகழ்பெற்ற இடங்கள், வியாபார ஸ்தலங்களுக்குச் செல்லலாம்.

இந்த டிக்கட்டுகள் வாங்கின தேதிமுதல் ஒரு மாதத்திற்குள் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொள்ள செல்லுபடியாகும்.

இதர விவரங்களுக்கு தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்தாருக்கு எழுதவும்.

III-வது வகுப்புப் பிரயாணிகள் சௌகரியமாக
கோஷ்டியாகச் செல்வதற்கு மின்சார விசிறி
கள் அமைக்கப்பட்டு 41 பிரயாணிகள்
வசதியாகச் செல்வதற்கு

## ஒரு போகி பிரயாண வண்டி

(பிராட் கேஜ்)

ஏற்பாடா யிருக்கிறது. சார்ஜ் முதலிய விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்தாருக்கு எழுதவும்.

சௌகரியமாய்ப் பிரயாணம் செய்யுங்கள்.

சீப் கமேர்ஷியல் மானேஜர்,
எம். & எஸ். எம். ரெயில்வே,
பார்க் டவுன், மதராஸ்.

★ உங்கள் ஆயுள்
★ உங்கள் வீடு
★ உங்கள் மோட்டார்

இவைகளுக்கு
இன்ஷூரன்ஸ்
பாதுகாப் பிருக்கிறதா?

இல்லையேல்

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(ஸ்தாபிதம் 1906)

**நேஷனல் பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

(தலைமை ஆபீஸ்:—கல்கத்தா)

இவைகளைக் கலந்து ஆலோசியுங்கள்!

பிராஞ்சு ஆபீஸ்

**நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்**

362, சைனு பஜார் தெரு, சென்னை.

## கவனியுங்கள்!

நீங்கள் வியாபாரத்தில் விருத்தியாகவேண்டுமானால் விளம்பரம் செய்யவேண்டும். விளம்பரம் செய்வதற்கு "பாரதமணி"யைத் துணை கொள்ளுங்கள். நூதனமுறையில் கண்ணைக்கவரும் அமைப்புடன் விளம்பரம் செய்ய, "பாரதமணி" வசதியளிக்கிறது. விளம்பரம் செய்வதில் விசேஷ சிரத்தை காட்டினால் வியாபாரத்தில் தோல்வி யேற்படாது. "பாரதமணி" குறைந்த செலவில் விளம்பரங்களை யேற்றுக்கொள்கிறது; வியாபாரத்தில் லாபத்தை யளிக்கிறது.